
கல்கி
KALKI
4.2.1973
45 காசு



எல்லா ஹேர் ஆயில்களுமே உங்கள் கேசத்தை
அலங்காரமாக வைக்கின்றன. ஆனால்

ஸ்வஸ்திக் பெர்ஃப்யூம்ட் கேஸ்டர் ஹேர் ஆயில்

உங்கள் கேசத்தை அடர்த்தியாக, ஒளிசிந்த
வைக்கிறது; ஆரோக்கியமாக வைக்கிறது.
அத்துடன் கேசம் எழிலோங்கச் செய்கிறது.



இக்காரணங்களால்தான், ஆண்டுதோறும் அநேக குடும்பத்தினர் நறுமணமுள்ள
ஸ்வஸ்திக் பெர்ஃப்யூம்ட் கேஸ்டர் ஹேர் ஆயில் உபயோகிக்கத் தொடங்குகின்றனர்.

Shilpi HPMA 27/72a Tam



கல்கி

பொருளடக்கம்

பரிதாபி, தை 22 ● பிப்ரவரி 4, 1973

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 27-00	ரூ. 13-50



100% இயற்கை

பதினெட்டு
அபூர்வ மூலிகைகளைக்
கொண்டு
தயாரிக்கப் படுவது
விக்கோ

வஜ்ரதந்தி


பிரபல ஆயுர்வேத பற்பசை மற்றும் பல் பொடியான விக்கோ வஜ்ரதந்தி 18 அரிய மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இம் மூலிகைகளின் தனிப்பட்ட குணங்கள் யாவரும் நன்கு அறிந்ததே. ஆனல் குறிப்பிட்ட அளவுகளில் இவற்றைக் கலக்கும்போது அவற்றின் குணத்திறன் அதிகமாகிறது. விக்கோ வஜ்ரதந்தியின் தற்போதைய செய்முறை பல்லாண்டு ஆராய்ச்சியின் விளைவாகும்.

தவருது விக்கோ வஜ்ரதந்தி உபயோகித்தால், பற்சிதைவு, பயோரியா, ஈறுகளிலிருந்து சீழ் மற்றும் இரத்தம் வருதல், மூச்சிலே துர் நாற்றம் முதலியவை தடுக்கப் படுகிறது.

ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள்; உண்மை புரியும்.

ஆயுர்வேத
பற்பசை மற்றும்
பற்பொடி.
வாய் ஆரோக்கியத்துக்கு
ஒப்பற்றது.







விக்கோ லாபெரட்டரீஸ்
தாதர், பம்பாய்-14

TML

கல்கி

மலர் 32

இதழ் 27

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
- பாரதியார்

போர் ஓய்ந்தது

வியட்நாம் போர் நிறுத்தத்துக்கு அமெரிக்காவும் ஹனாயும் சைகானும் ஒப்புக் கொண்டுவிட்டன. இனி அந்தப் பிரதேசத்தில் போரின் பயங்கரம் ஓய்ந்துவிடும் என்ற செய்தி உலக மக்கள் அனைவருக்கும் நிம்மதி அளித்துள்ளது. இந்த முடிவுக்கு வழி செய்த ராஜதந்திரிகளைப் பாராட்டத்தான் வேண்டும்.

வியட்நாம் போர் எதற்காக நிகழ்ந்தது? அமெரிக்கா தொலை தூரத்திலுள்ள இந்தப் பிரதேசத்தில், இவ்வளவு நீண்ட கால யுத்தத்தை எந்த லட்சியத்துக்காகப் புரிந்தது? அந்தக் குறிக்கோள்கள் நிறைவேறினவா? இவை குறித்து உலக மக்களிடையே பல நாட்களுக்கு விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும். இவற்றில் கருத்து வேற்றுமைகளும் இருக்கவே செய்யும்.


யாருக்கு வெற்றி, எதற்கு வெற்றி என்பதிலும் முடிவு காண்பது சுலபமல்ல. ஆனால் போர் நிற்க வேண்டும் என்பதை முழு மனத்துடன் விரும்பாதார் எவருமே இல்லை எனலாம்.


ஏனெனில், வெற்றி தோல்வி காண முடியாத பயங்கரமான போர் இது. இதனால் விளைவிக்கப்பட்ட பொருட்சேதமும் ஆட்சேதமும் கணக்கெடுக்க முடியாதவை. சென்ற ஓர் ஆண்டில் மட்டும் அமெரிக்கா பத்து லட்சம் டன் குண்டுகளை அங்கே வீசியுள்ளது. நாட்டுக்கு விளைவித்த சேதம், மக்களுக்கு ஏற்பட்ட சேதம், துன்பங்கள் எல்லாவற்றையும் இணைத்துப் பார்த்தால் வியட்நாம் போர் மிகப் பயங்கரமான போர், அருவருக்கத்தக்க போர் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதை எண்ணும் போது ஒருவிதமாகப் போர் நின்றதே என்ற திருப்திதான் நிலவுகிறது.

இப்போது ஏற்பட்ட போர் நிறுத்தத்தைச் சில மாதங்கள் முன்னதாகவே ஏற்படுத்தியிருக்கலாகாதா என்ற கேள்வியும் எழத்தான் செய்கிறது. ஆனால் இதற்கு விடை காண்பது அரிது. இப்போது ஒப்புக் கொண்ட முடிவுக்கு ஹனாய் அரசாங்கத்தை இணங்கச் செய்யச் சமீப மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட பயங்கர ஆயுதப் பிரயோகமும், குண்டு வீச்சும் அவசியம் என்று அமெரிக்கா நினைத்தது. கைதான, 'காணாமற் போன' அமெரிக்க வீரர்களை வடவியட்நாம் திருப்பி அனுப்ப ஒப்புக் கொண்டிருப்பது ஜனாதிபதி நிக்ஸனுக்கும், அமெரிக்க மக்களுக்கும் திருப்தி அளித்துள்ளது.


தென் வியட்நாம் இனி அதனுடைய எதிர்கால அரசியல் வாழ்க்கையைச் சுதந்திரமாகத் தானே வகுத்துக் கொள்ளும், அந்நியர் தலையீடுகள் இருக்காது என்று அமெரிக்கா நம்பலாம். ஆனால் இதை வருங்காலம்தான் ஊர்ஜிதப் படுத்த வேண்டும். ஏனெனில், இப்போது ஏற்பட்ட போர்நிறுத்தத்தினால் தென் வியட்நாமியர்கள் புரியும் போர் நின்றுவிடவில்லை. அவர்கள் புரியும் போரின் தன்மையும் அளவும் வேறுவிதமாக இனி இருக்கும். போர்நிறுத்த ஏற்பாட்டின்படி வட வியட்நாம் துருப்பினர் அவரவர்கள் இருந்த இடத்திலேயே தென் வியட்நாம் பிரதேசத்தில் இருப்பார்கள். அதனால் பழைய ''கொரில்லா'' முறைக் கண்ணாமூச்சிப் போர் தொடர்ந்து நீடிக்க வழி உண்டு. அரசியல் ரீதியாகவும் கம்யூனிஸ்டுகளின் ஊடுருவல் அதிகரிக்கும். இதைத் தென் வியட்நாம் அதிபரே வெட்டவெளிச்சமாகச் சொல்லியிருக்கிறார். எனினும், தென் வியட்நாம் தனி நாடு என்ற அந்தஸ்தை வட வியட்நாம் ஒப்புக் கொண்டிருப்பதை அவர் தமக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதுகிறார். இதைத் தொடர்ந்து நிலையான சமாதானத்துக்கு வழி ஏற்பட வேண்டும்.

கம்யூனிஸ ஊடுருவலையும் ஆக்கிரமிப்பையும் தடுத்து நிறுத்த நிகழ்ந்த இப்போர் அமெரிக்க உதவியை முதன்மையாக வைத்தே இதுகாறும் நடத்தப்பட்டது. போர் நிறுத்தப்பட்டு அமெரிக்கா வியட்நாமிலிருந்து இப்போது வெளியேறுவதால் விபரீத விளைவுகள் ஏதும் ஏற்படாதென்றும் இந்தப் பிராந்தியத்திலே நிரந்தர அமைதி ஏற்படும் என்றும் எதிர்பார்ப்போம். அதற்குப் பலதரப்பினரும் நல்லெண்ணம் காட்ட வேண்டும். ஆண்டவன் அருள் புரிவானாக.






"பிரதமர் ஹூக்ளி நதி, சிறு கப்பல்கள் போக்குவரத்துக்கு உகந்ததா என்று ஆராய்ந்தார்!"
— செய்தி



"சென்னையில் புதிய கலங்கரை விளக்கு உருவாகிறது" —செய்தி



தமிழ் நாட்டிலே...

தீரன்

மருந்தாலும் மரணம்

தஞ்சை மருத்துவ மனையில் பி-1 பி-12 ஊசி மருந்தால் பாதிக்கப்பட்டு இருவர் மரண மடைந்து விட்டதாகத் தெரிகிறது. இம் மருந்து சென்னையிலுள்ள அரசாங்க மருந்துக் கிடங்கிலிருந்து சப்ளை செய்யப்பட்டது என்று தெரிய வருகிறது. கும்பகோணம் மருத்துவ மனையிலும் இதே மருந்தினால் பாதிக்கப்பட்டதன் காரணமாக ஒருவர் இறந்து விட்டதாகத் தெரிகிறது. இனிமேல் மக்கள் சர்க்கார் ஆஸ்பத்திரி மருந்துகள் என்றாலே பயப்படத் தொடங்கி விடுவார்கள். சர்க்கார் மருந்துகள் மக்களை இப்படி மரணபயத்தால் நடுக்க வைக்கலாமா?



நீதிபதிகள் நியமனம்

பதவியிலிருந்து ஓய்வு பெறும் நீதிபதி ராமமூர்த்தி அவர்கள் வக்கீல்கள் சங்கம் தமக்கு அளித்த பிரிவுபசார விருந்தில் ஒரு கசப்பான உண்மையை யாருக்கும் பயப்படாமல் எடுத்துச் சொல்லி எச்சரித்திருக்கிறார்:

''வரவர ஹைகோர்ட்டை அரசு தன்னுடைய உள்விவகார இலாகாவின் ஒரு பகுதியாகவே கருதத் தொடங்கிவிட்டது. 'பயிற்சியும் திறமையும் உள்ள நீதிபதிகளை நியமிக்கும் பிரச்னைக்குத் திருப்திகரமான தீர்வு காணப்படாத வரையில் நீதித் துறை நிர்வாகத்தைச் சீரமைப்பதற்கான எந்தத் திட்டமும் நன்மை பயக்காது' என்று சட்டக் கமிஷன் குறை கூறியுள்ளதற்கு அரசு எவ்வித முக்கியத்துவமும் அளித்துக் கவனித்ததாகத் தெரியவில்லை.

நீதிபதிகளை நியமிக்கும் விஷயத்தில் சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதியுடன் ராஷ்டிரபதி கட்டாயமாகக் கலந்து ஆலோசிக்க வேண்டும். அவசியம் என்று கருதும் பட்சத்தில் சுப்ரீம் கோர்ட்டின் இதர நீதிபதிகளுடனும், ஹைகோர்ட்டில் உள்ள நீதிபதிகளுடனும் கூட ராஷ்டிரபதி கலந்து ஆலோசிக்கலாம். நீதிபதி நியமன விஷயத்தில் சம்பந்தப்பட்ட ஹைகோர்ட்டின் பிரதம நீதிபதியுடன் கலந்தாலோசிப்பது தவிர அதே ஹைகோர்ட்டின் மூன்று அல்லது நான்கு நீதிபதிகளைக் கொண்ட ஒரு கமிட்டியின் சிபாரிசையும் மனத்தில் கொள்ள வேண்டும். இதற்காக அரசியல் சட்டத்தில் 217வது ஷரத்தில் ஓர் உபஷரத்தையும் சேர்த்தாக வேண்டும். இந்த ஏற்பாடு காரணமாகப் பல தீமைகளை நீக்கி விட முடியும். மேலும் இதனால் ஹைகோர்ட் பிரதம நீதிபதியின் தர்மசங்கடமான நிலை நீங்கிவிடும். நீதிபதிகள் அடங்கிய கமிட்டி நீதிபதி நியமன விஷயத்தில் திறமை, தகுதி ஆகியவற்றைக் கருத்திற் கொண்டே சிபாரிசுகளைத் தெரிவிக்கும் என்பதால் மாநில முதலமைச்சரும்கூட இந்தக் கமிட்டியின் சிபாரிசைப் புறக்கணிக்க முடியாது. இப்போது கோர்ட்டுகளில் வழக்குகள் பெரும் அளவுக்குத் தேங்கி யிருப்பதற்குக் காரணம் சட்டக் கமிஷனின் சிபாரிசைச் சர்க்கார் தக்க முறையில் அமுலாக்காததுதான். 1955ல் சட்டக் கமிஷன் சிபாரிசு வெளியிடப்பட்டது என்றால் அதன்பின் நிலைமை சீரடைவதற்குப் பதில் மேலும் மோசமாகி யிருக்கிறது'' என்று மனம் திறந்து பல கருத்துக்களைச் சொல்லி யிருக்கிறார் ஓய்வு பெற்ற நீதிபதி.

ஜனவரி 20ந் தேதி சென்னை மயிலாப்பூர் ராஜேசுவரி கல்யாண மண்டபத்தில் திரு பக்தவத்ஸலம் - 'ஐம்பது வருஷப் பொது சேவை' என்ற நூல் வெளியீட்டு விழா வெகு சிறப்பாக நடந்தது. நூலை வெளியிட்டவர் மத்திய சர்க்கார் சுகாதார மந்திரி திரு உமாசங்கர் தீக்ஷித். விழாவுக்குத் தலைமை வகித்தவர் திரு கே. கே. ஷா. திரு பக்தவத்ஸலம் அவர்களின் அரிய சேவைகளை அறிஞர்கள் பலர் எடுத்துரைத்தனர்.



போலீஸ் எதற்காக இருக்கிறது?

அரியலூரில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும்போது தமிழக முதல்வர் திரு மு. கருணாநிதி தம் கட்சிக்காரர்களுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கும் ஒரு யோசனை மிகவும் விநோதமானதாக இருக்கிறது. ஒரு முதலமைச்சர் கூறக்கூடிய யோசனையாக அது இல்லை என்பதுடன் போலீஸ் பொறுப்பை வகிக்கும் நம் முதல் அமைச்சரா அப்படி யோசனை கூறினார் என்று நம்மைத் திகைக்கச் செய்வதாகவும் இருக்கிறது அந்த யோசனை.

''தி.மு.க. பொதுக் கூட்டங்களில் கலவரம் விளைவிப்போரைக் கட்டுப்

படுத்தி அவர்களைப் போலீசில் ஒப்படைப்பதற்காகக் கூட்டத்தில் வந்திருப்பவர்களில் நூறு பேருக்கு ஐந்து பேர் வீதம் தி.மு.க. தொண்டர்களை நியமிக்க வேண்டும்'' என்பது முதல்வரின் 'மணியான' யோசனையாகும். இதன்மூலம் ஒரு கூட்டத்தில் நூறு பேருக்கு ஐந்து பேர் வீதம்தான் தி. மு. க. வினர் இருக்க முடியும் என்பதை முதல்வரே ஒப்புக் கொண்டதாகி விடுகிறது. முதல்வர் கூறியுள்ள இந்த யோசனைப்படி ஒவ்வொரு கட்சியும் 'ஆள் நியமிக்கும்' வேலையில் இறங்கிவிட்டால் அப்புறம் போலீஸ் எதற்காக இருக்கிறது? கலகம் செய்பவர்களைப் பிடிக்க நூற்றுக்கு ஐந்து பேர் வீதம் நியமித்தால் அந்த நூறு பேருக்கும் இந்த ஐந்து பேருக்கும் மூளுகிற புதுக் கலகத்தை யார் புகுந்து தடுப்பது? இதே அரியலூர் கூட்டத்தில் முதலமைச்சரையும் அருகில் வைத்துக் கொண்டே, ''தி.மு.க. கூட்டத்தில் கலகம் செய்பவர்களை நாங்கள் மனம் வைத்தால் குடும்பத்தோடு அழித்துவிட முடியும்'' என்று பொருள்பட மற்றோர் அமைச்சரும் பேசியிருக்கிறார். ஜனத் தொகையைக் குறைக்க அவர் வழி சொல்லியிருக்க மாட்டார் என்று எண்ணுகிறோம்.

சேவைக்குப் புகழாரம்

தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் திரு எம். பக்தவத்ஸலம் அவர்களின் ஐம்பது ஆண்டுப் பொதுவாழ்க்கைச் சேவையைப் பாராட்டி நடைபெற்ற விழாவில் பேசும் போது மத்திய அமைச்சர் திரு உமாசங்கர் தீட்சித் பரந்த மனப்பான்மையுடனும் பெருந்தன்மையுடனும் தமது பாராட்டுரையை வழங்கினார். பக்தவத்ஸலத்துக்காக நடந்த விழாவில் பேசிய மத்திய அமைச்சர், திரு காமராஜ் அவர்களைக் குறிப்பிட்டுப் பாராட்டியது கவனிக்கத்தக்க அம்சமாக இருந்தது.

''தற்கால அரசியல் வாழ்வில் பலருக்குச் சுய விளம்பர மோகம் அதிகமாக உள்ளது. ஆனால் திரு பக்தவத்ஸலம் இதற்கு விதிவிலக்காக வாழ்ந்து காட்டியவர். அவரது தொண்டு, தியாகம், தேசபக்தி எல்லாம் இளைஞர் சமுதாயத்தினர் பின்பற்றத் தகுந்தவைகளாகும். திரு காமராஜ் முதலமைச்சராக இருந்தபோது தமிழகம் மிகச் சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாக இருந்தது. அவருடன் நாங்கள் இப்போது கருத்து வேறுபட்டிருந்தாலும் அவருக்கு இருக்கும் மதிப்பையும் கௌரவத்தையும் உணர்கிறோம். உறுதியும் பொறுமையும் விடா முயற்சியும் உள்ள தலைவர் அவர். அவருடைய தலைமைக்கு ஒரு தனி மகத்துவம் இருக்கிறது'' என்று திரு உமாசங்கர் தீட்சித் அவர்கள் தமிழகத்தின் சிறப்புக்குக் காரணமாயிருந்த வேறு சிலரையும் பரந்த மனத்துடன் பாராட்டியிருக்கிறார்.

இவ்விழாவின்போது திரு பக்தவத்ஸலத்தின் ஐம்பதாண்டு கால தேச சேவையைப் பல

எல். பி. ஜே.

1963ல் அதிபர் ஜான் எஃப். கென்னடி கொலையுண்ட பின்பு, உதவி ஜனாதிபதியாக இருந்த ஜான்ஸன் அதிபரானார். 1964 தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் அதிபரானார். 160 லட்சம் வாக்குகள் கூடுதலாக அவர் பெற்றார்; அமெரிக்க அரசியல் வரலாற்றிலேயே வேறு யாரும் இவ்வளவு வாக்குகள் கூடுதலாகப் பெற்றதில்லை.

அதிபர் ஜான்ஸன் தமது பதவிக் காலத்தில், வியட்நாம், தீர்வு காணமுடியாத ஒரு பிரச்னையாக இருக்கையில், அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே உறவுகளைச் செம்மைப்படுத்துவதிலே குறிப்பிடத்தக்க பணியாற்றினார்.

உள்நாட்டு விவகாரங்களில் ஜான்ஸன் மிகச் செம்மையாகப் பணியாற்றி வந்தார்.

'மேன்மையான சமுதாயத் திட்ட'த்தின் கீழ் அவர் இயற்றிய சட்டங்கள் மாபெரும் சாதனையாகும். பல ஆண்டுகளாகவே, அமெரிக்கச் சட்டமன்றத்தில் சமுதாய நலச் சட்டங்கள் நிறைவேறவொட்டாமல் தடை செய்யப்பட்டு வந்த நிலையிலே, இந்தச் சட்டங்கள் அந்தத் தேக்க நிலையை உடைத்தெறிந்தன. 1960-ல் அமெரிக்காவில் இருந்த சமுதாய நலச் சட்டங்கள் 45 தான். ஆயின் 1969 ன் துவக்கத்தில் 435 இருந்தன!

1965ம் ஆண்டு நீக்ரோ வாக்குரிமைச் சட்டத்துக்காக, அதிபர் ஜான்ஸன் சட்டமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் பரிந்து வாதாடியது அவர் ஆட்சியிலே மிகச் சிறந்த ஒரு நிகழ்ச்சியாகும்.

அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் நீக்ரோக்களுக்குச் சம உரிமை குறித்துக் கலகங்கள் நடந்து கொண்டிருக்கையில், அமெரிக்காவின் கொடுமையான இனப் பிரச்னைகளைத் தீர்க்க அதிபர் ஜான்ஸன் செய்த முயற்சிகளும் பெற்ற வெற்றிகளும் மகத்தானவை.



ராஜாஜி சிந்தனை

அழகு என்பதை ஒரு தத்துவமாக ரசிக்க முடியாது. சூரியோதயத்தைப் பார்த்தால் அதில் சகல வர்ணங்களையும் ரசிக்கிறோம். எந்தப் பொருளையும் சாராமல், தனியாக வர்ணத்தை மட்டும் பார்க்க இயலாது. இப்படியே தான் பாரத தேசத்திடம் அன்பு செலுத்துவது என்றால், இந்தத் தேச மக்களிடம் அன்பு செலுத்துவது என்றே பொருள். தனியாகத் தேசத்திடம் அன்பு செய்வேன் என்றால் முடியாத காரியம். ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் போன்ற எந்தத் தனி மதமும் இல்லாமல் பொது மதம் ஒன்றைத் தழுவி இருக்க ஆசைப்படுவதும் இப்படிப்பட்ட முடியாத காரியமே ஆகும். மக்களுக்கு மத உணர்வு ஏற்பட வேண்டுமானால் அவர்களை ஏதாவது ஒரு குறிப்பிட்ட மதத்தில் பற்றுள்ளவர்களாக இருக்கச் செய்வதே வழி. இப்போதுள்ள மதங்களின் பொதுவான சாரத்தை எல்லாம் சேர்த்து உலகப் பொதுமதம் தயார் செய்ய யத்தனித்தால் அது ரசாயன முறையில் செயற்கை அரிசி தயாரிப்பது போல ஆகும். அழகான காவியங்களைப் போல் இப்போதுள்ள மதங்கள் இருக்கின்றன என்றால், புதிதாகத் தயாரிக்கப்படும் பொது மதம் வெறும் விஷய அட்டவணை போலவும் அரசாங்க நமூனாக்கள் போலவும் உயிர் வேகமில்லாமல் இருக்கும். ஆனபடியால் மக்களிடம் சமய நம்பிக்கை ஊட்ட வேண்டுமாயின், ''உன் சொந்த மதத்துக்கு உண்மையாக ஒழுகு; அந்த மதத்தின் வழிபாட்டு முறைகளைப் பின்பற்றும்போதே, எல்லா மதங்களின் பொதுச் சத்தியத்தைக் கிரகித்துக் கொள்'' என்று சொல்வதொன்றே வழி.

எந்தத் தனி மொழியையும் பேச மாட்டேன், பொது மொழி ஒன்றில்தான் பேசுவேன் என்றால் நடக்கிற காரியமா? தனித் தனி மதங்களைத் தான் பற்றி இருக்க முடியுமே ஒழிய, பொதுமதம் என்கிற ஒன்றைத் தழுவுவது சாத்தியமல்ல.

'எல்லாப் பாதைகளும் ஒரே பரம் பொருளிடம் அழைத்துச் செல்பவை' என்பதை ஒரு முக்கிய கொள்கையாகக் கொண்டது ஹிந்து மதம். உண்மையான ஹிந்து எவனும் தன் மதம் ஒன்றே சத்தியமானது என்று எண்ணி மற்றவற்றைக் குறைவாகக் கருத மாட்டான். மற்றவருக்கும் அவரவரின் மதமே மெய்ப் பொருளைக் காட்டும் வழியாகும்.

கோணங்களிலிருந்து தலைவர்கள் பலர் ஆராய்ந்து பார்த்து எழுதிய கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்று வெளியிடப்பட்டது.*

கும்பகோணம் தேர்

கும்பகோணம், ஆவுடையார் கோயில் போன்ற ஊர்களிலுள்ள கோயில் தேர்களை ஏலம் போட்டு அதன் மூலம் வருகிற வருவாயைக் கொண்டு மேற்படி ஆலய நிதி நிலைமைகளைப் பலப்படுத்திக் கொள்ளலாம் என்று அந்த வட்டாரப் பிரமுகர்கள் சிலர் கூறிய யோசனையை அரசு ஏற்கவில்லை என்று தெரிகிறது. அந்த யோசனைகளை அறநிலையத் துறை அமைச்சர் மறுத்துவிட்டதோடு மேற்படி தேர்கள் ஓடுவதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ளும் என்றும் உறுதியளித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. திருக்குடந்தை ஸ்ரீ சாரங்கபாணிப் பெருமான் தேர்த் திருப்பணிக்கும், தேர்த்திருவிழாவுக்கும் தம்மால் முடிந்த நிதி உதவி புரிவதாக ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமி கோயில் அதிகாரிகளுக்கு யோசனை கூறியிருக்கிறார். நல்ல வேளையாகச் சிறப்புவாய்ந்த இத்திருத் தேர்கள் ஏலம் போகாமல் பிழைத்துவிட்டன.


ஆசிரியர்கள் வெள்ளிவிழா

கோவையில் நடைபெற்ற தமிழ் நாடு ஆசிரியர் சம்மேளன வெள்ளி விழாவில் பல பயனுள்ள தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

அரசியல் தலையீடு, உள்ளூர்ச் சச்சரவுகள், தேர்தல்கள் ஆகியவற்றால் கல்வி நிலையங்கள் பாதிக்கப்படுகின்றன என்றும் அரசியல் சார்பற்ற கல்வி போர்டின் மூலம் கல்வி நிலையங்கள் நிர்வகிக்கப்பட வேண்டும் என்றும் ஆசிரியர்கள், கல்வித்துறை நிபுணர்கள், பொதுமக்கள் ஆகியோரின் பிரதிநிதிகளுக்கு இந்த போர்டில் இடமளிக்க வேண்டும் என்றும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். கல்வியின் தரத்தை உயர்த்தவும் ஆசிரியத் தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு அளிக்கவும் ஓர் ஆசிரியருக்கு இத்தனை மாணவர்கள் என்ற விகிதாசாரத்தைக் குறைத்து முப்பத்தைந்து மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்பதாக வைக்க வேண்டும் என்று மற்றொரு தீர்மானம் கூறுகிறது. ஹையர்கிரேடு ஆசிரியர்களுக்குச் சம்பள விகித நிர்ணய விஷயத்தில் லோயர் கிரேட் குமாஸ்தாக்களுக்கு உள்ள வசதிகள் வேண்டும் என்றும் ஆசிரியர்களுக்குப் பயன்படுகிற பல நல்ல தீர்மானங்கள் இந்தச் சம்மேளனத்திலிருந்து அரசின் கவனத்துக்குக் கொண்டு போகப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள் மீது போலீஸார் பொய் வழக்குப் போட்டுத் தொந்தரவு கொடுப்பது கூடாது என்பதாகக்கூட இந்த மகாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

---

* கிடைக்குமிடம்: அமைப்பாளர், பக்தவத்சலம் தொகுப்பு நூல் தயாரிப்புக் குழு: 3, அய்யா பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5; விலை ரூ. 6-00



மதங்களின் ஒற்றுமை

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

எல்லா சமயங்களும் கடவுளை வழிபட ஏற்பட்டனவேயாகும். எல்லா சமயங்களும் கடவுள் ஒருவர் என்றே சொல்கின்றன. ஒருவரேயான அந்தக் கடவுள் எந்தச் சமயத்தின் மூலம் வழிபட்டாலும் அதை ஏற்றுக் கொள்ளத்தான் செய்வார். எனவே எவருமே தாங்கள் பிறந்த மதத்தைவிட்டு இன்னொரு மதத்தைத் தழுவ வேண்டியதில்லை.

கோயில், சர்ச், மசூதி, விஹாரம் முதலிய கட்டடங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படலாம். உள்ளே இருக்கிற மூர்த்தி அல்லது சின்னம் மாறுபடலாம். ஒவ்வொன்றிலும் சடங்குகளும் வேறு வேறாக இருக்கலாம். ஆனால் அநுக்கிரகம் செய்கிற பரமாத்மா மாறவில்லை. ஒவ்வொரு தேச ஆசாரத்தையும், ஒவ்வொருவித ஜனக் கூட்டத்தின் மனப்பான்மையையும் பொறுத்துப் பலவேறு சமயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் ஒரே பரமாத்மாவை அவரவர் மனோபாவப்படி பக்தி செய்து, அவரோடு சேருவதற்கு வழி செய்பவையே. எனவே, எவரும் தங்கள் மதத்தை விட்டுவிட்டு இன்னொன்றுக்கு மாற வேண்டியதில்லை. இப்படி மதம் மாறுகிறவர்கள் தாங்கள் பிறந்த மதத்தைக் குறைவுபடுத்துவது மட்டுமின்றி, தாங்கள் சேருகிற மதத்தையும் குறைவுபடுத்துகிறார்கள்; கடவுளையும் குறைவுபடுத்துகிறார்கள். கடவுள் எல்லா மதங்களுக்கும் பொதுவானவர் என்ற எண்ணம் இல்லாமல் அவரைக் குறுக்குவதால்தானே ஒரு மதத்தை விட்டு இன்னொன்றில் சேருகிறார்கள்? இவர்கள் தாங்கள் பிறந்த மதத்திலேயே இருந்து வழிபட்டாலும் இப்போது இவர்கள் மாறுகிற மதத்தின் கடவுள் இவர்களுக்கு அநுக்கிரகம் செய்வார் என்ற நம்பிக்கை இவர்களுக்கு இல்லாததால்தானே மதமாற்றத்துக்கு அவசியம் ஏற்பட்டது? அதாவது தாங்கள் மாறுகிற புது மதத்துக்கும், அதன் கடவுளுக்கும் இவர்கள் எல்லை கட்டி விடுகிறார்கள். ஒரு மதத்திடம் கௌரவ புத்தி இருப்பதாக நினைத்து அதற்கு மாறுகிற போதே, அதை வாஸ்தவத்தில் அகௌரவப் படுத்திவிடுகிறார்கள்.

மற்ற மதங்களுக்கும் நம் ஹிந்து மதத்துக்கும் உள்ள ஒரு பெரிய வித்தியாசம், நம்முடைய ஹிந்து மதம் ஒன்றுதான், ''இது ஒன்றே மோட்ச மார்க்கம்'' என்று சொல்லாமலிருக்கிறது. நம்முடைய வைதிக மதம் தான் பிறரைத் தன் மதத்துக்கு மாற்றுவது என்பதே கிடையாது. ஏனென்றால் ஒரே பரமாத்மாவை அடைவதற்கான பல மார்க்கங்களே பல மதங்களும் என்று நம் முன்னோர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். ஹிந்துவாகப் பிறந்த ஒவ்வொருவனும் இந்த விசால மனப்பான்மையைக் குறித்துப் பெருமைப்பட வேண்டும்.

ரயிலடியில் பிரயாணிகள் வந்திறங்கியதும் ஜட்காக்காரன், ரிக்ஷாக்காரன், டாக்ஸிக்காரன் என்று பல பேர் வந்து சூழ்ந்து கொள்கிறார்கள். எவனுடைய வண்டியில் ஏறிக் கொண்டாலும் போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேரலாம். வண்டிக்காரர்கள் கிராக்கி பிடிப்பதற்காகப் போட்டி போடுவதைத் தவறு என்று சொல்வதற்கில்லை. அது அவர்கள் பிழைப்பு. ஆனால் ஒரே லட்சியத்துக்கு அழைத்துச் செல்வதற்காக வெவ்வேறு மதஸ்தர்கள் போட்டி போட்டுக் கொண்டு மதமாற்றத்தில் முனைவது அர்த்தமற்ற காரியம்.

நதியின் மேல் பாலம் போட்டிருக்கிறது. அதில் பல வளைவுகள் இருக்கின்றன. எல்லா வளைவுகளும் ஒரே அளவாகக் கட்டப்பட்டவைதாம். ஆனால் ஒவ்வொரு வளைவுக்கும் கிட்டத்தில் இருப்பவனுக்கு அந்தந்த வளைவே பெரிதாகவும், மற்றவை சின்னதாகவும் தெரியும். இப்படியே அந்தந்த மதஸ்தர்களுக்கும் தங்கள் மதமே பெரிதாகத் தெரிவதால், பிறரை அதற்கு அழைக்கிறார்கள். ஆனால் எல்லா வளைவுகளும் ஒரே அளவுதான். யாரும் தாங்கள் பிறந்த மதத்தைவிட்டு விலக வேண்டியதில்லை.



மதங்களுக்கிடையே கோட்பாடுகளிலும் அநுஷ்டானங்களிலும் சில வித்தியாசங்கள் இருப்பதில் தவறில்லை. எல்லா மதங்களையும் ஒரே போல் ஆக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரே மாதிரி ஆக்காமலே, எல்லா மதஸ்தர்களும் மனத்தில் ஒற்றுமையோடு இருப்பது அவசியம். 'யூனிஃபார்மிடி' அவசியமில்லை. 'யூனிடி' இருப்பதே அவசியம்.

12 வயதான சென்னை சுந்தர் கூறுகிறான்...

"நான் பத்து ரூபாய் மட்டும் போட்டு 'கிட்டி பாங்க்' கணக்கை ஆரம்பித்தபோது, ஆந்திரா பாங்கில் எனக்கு ஒரு 'கிட்டி பொம்மை' தந்தார்கள்.

"என் கைச் செலவிற்காக கொடுக்கப்பட்ட பணத்திலிருந்து கொஞ்சம் அதில் போடுவேன் — தினமும். அது நிரம்பியவுடன் ஆந்திரா பாங்க் அப் பணத்தை என் கணக்கில் போட்டு விடுவார்கள். அது மட்டுமா? என் பணத்திற்கு வட்டியும் கொடுத்தார்கள்.

"பணம் சேமிப்பதென்றாலே தனி குஷிதான். என்னைப் போலவே 60,000 சிறுவர், சிறுமியரும் ஆந்திரா பாங்கில் 'கிட்டி பாங்க்' கணக்குதுவக்கியுள்ளார்கள்.

"நீங்களும் ஏன் ஒன்று துவக்கக் கூடாது? உங்கள் தந்தையிடம் சொல்லிவிட்டு, அருகாமையிலுள்ள ஆந்திரா பாங்கின் கிளைக்கு இன்றே செல்லுங்கள்."

என் சொந்த 'கிட்டி பாங்க்' கணக்கில் நான் ரூ. 739.50 வைத்திருக்கிறேன்.



தி ஆந்திரா பாங்க் லிமிடெட்

மத்திய அலுவலகம்:
சுல்தான் பஜார்,
ஹைதராபாத்

கே. கோபால் ராவ்
சேர்மன்

எம். வி. சுப்பாராவ்
ஜெனரல் மானேஜர்

நாட்டுப்பணிக்குத் தொண்டாற்றும்
நாட்டுடமையாகாத ஒரு பாங்க்

FDS/AB-1827 THA



அலை ஓசை

அமரர் கல்கி

7. அநித்திய வாழ்வு

இந்த உலகத்தில் எத்தனையோ தேசங்கள் சில சமயம் சிறப்புடன் வாழ்வதும் பிறகு அழிந்து போவதும் வழக்கமாக இருக்கையில், பாரத தேசம் மட்டும் பல்லாயிரம் வருஷங்களாக நித்திய வாழ்வு பெற்றிருப்பதின் காரணம் என்ன என்பது பற்றிக் கிட்டாவய்யர் சீதாவிடம் கூறினார் அல்லவா! அவருடைய புதல்வன் சூரியநாராயணன் சற்று நேரத்துக்கெல்லாம் அதற்கு வேறு ஒரு காரணம் கூறினான். கிட்டாவய்யர் வீட்டுத் திண்ணையில் கூடிய பார்லிமெண்டு சபையில் நடந்த விவாதத்தின்போது சூரியா அந்தக் காரணத்தைச் சொன்னான்.

"கொஞ்சம் இதைக் கேளுங்கள்: ஒரு குண்டூசியில் வரிசையாகத் தபால் தலைகளைக் குத்திக் கோப்பதாக வைத்துக் கொள்ளலாம். அதில் மேலேயுள்ள ஒரே ஒரு தபால் தலை மனிதன் தோன்றிய பிறகு சென்றிருக்கும் காலம். அதற்கு முன்னால், கீழேயுள்ள அவ்வளவு தபால் தலைகளின் அளவுள்ள காலத்தில் உலகத்தில் மனிதனைத் தவிர மற்ற பல்வேறு ஜீவராசிகள் வாழ்ந்து வந்தன. அந்த ஜீவராசிகளிலே தென்னை மர உயரமும் மதுரைக் கோயில் கோபுரத்தின் நீளமும் உள்ள சில பிராணிகள் இருந்தன. சிருஷ்டியின் ஆரம்ப காலத்தில் அந்தப் பயங்கரமான பிராணிகள் இந்த உலகத்தில் அங்குமிங்கும் அகப்பட்டதையெல்லாம் விழுங்கிக் கொண்டு சஞ்சரித்தன. அந்தப் பிராணிகள் எல்லாம் இப்போது எங்கே? அவற்றின் இனமே அழிந்து இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன. சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் வெகு அபூர்வமாக அத்தகைய பிராணிகளின் எலும்புக் கூடுகளைக் கண்டுபிடிக்கிறார்கள். என்றும் கரையாத பனித் திரளின் அடியில் அகப்பட்டுக் கொண்டபடியால் அந்த எலும்புக் கூடுகள் லட்சக்கணக்கான வருஷங்கள் பதப்படுத்தி வைக்கப் பட்டிருந்து இப்போது அகப்படுகின்றன. அவ்வளவு பிரம்மாண்டமான பிராணிகள் அவற்றின் வர்க்கத்து வாரிசே இல்லாமல் நசித்துப் போனதின் காரணம் என்ன? மாறிக் கொண்டு வந்த உலகத்தின் சீதோஷ்ண நிலைமைக்கேற்ப அவை மாறாமல் இருந்ததுதான். மாறிக் கொண்டு வந்த பிராணிகளோ இன்று வரையில் வாழையடி வாழையாக வாழ்ந்து பல்கிப் பெருகி வருகின்றன.


"மனித குலத்தை எடுத்துக் கொள்ளுங்கள். உலகத்தில் பல தேசங்களின் மக்கள் ஒவ்வொரு சமயம் மிக உன்னத நிலைமையில் இருந்திருக்கிறார்கள். பாபிலோனியா, அஸ்ஸீரியா, கிரீஸ், எகிப்து முதலிய அத்தகைய பழைய காலத்து நாகரிக மக்களின் சமூகங்கள் நசித்து அழிந்து போய்விட்டன. ஏன் தெரியுமா? காலத்துக்கேற்ப அந்தச் சமூகங்கள் மாறாமல் அப்படியே இருக்கப் பார்த்ததுதான் காரணம். ஆனால் நம்முடைய பாரத தேசமோ உலகில் வேறு எந்தத் தேசத்தையும் காட்டிலும் அநாதியான நாகரிகத்தை உடையது. ஆயினும் இன்று வரை அழிந்து போகாமல் இருக்கிறது. காரணம் என்ன? இந்தத் தேசத்தில் வாழ்ந்த நம் முன்னோர்கள் கால மாறுதலுக்கு ஏற்பத் தங்களுடைய பழக்க வழக்கங்களை மாற்றிக் கொண்டு வந்திருப்பதுதான். ஒரே ஓர் உதாரணத்தைக் கேளுங்கள். வேத காலத்தில் நம் முன்னோர்கள் பலவித யாகங்கள் செய்தார்கள். அந்த யாகங்களில் குதிரைகள், மாடுகள், ஆடுகள் முதலிய பல ஜீவப் பிராணிகளைப் பலி கொடுத்தார்கள். அந்த மிருகங்களின் மாமிசத்தை அவிர்ப்பாகம் என்பதாகத் தேவர்களுக்கு அளித்து மிச்சத்தைத் தாங்களும் உண்டார்கள். கௌதம புத்தர் அவதரித்து யாகங்களைக் கண்டித்தார். யாகங்களில் பலி கொடுப்பதைக் கண்டித்தார். கௌதம புத்தருடைய கொள்கைகள் உலகமெங்கும் பரவின. அந்தக் கொள்கைகளில் முக்கியமானவற்றை அந்தக் காலத்துப் பாரத மக்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

யாகங்கள் நின்று போயின. பிற்காலத்தில் ஹிந்து தர்மத்தை நிலை நாட்ட அவதரித்த ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர் முதலிய ஆச்சாரிய புருஷர்கள் யாகம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தவில்லை. துளசிதாஸர், துக்காராம், தியாகராஜர் முதலிய பக்த சிரோமணிகளும் யாகம் செய்யச் சொல்லவில்லை. இந்த ஓர் உதாரணத்தைப் போல் ஆயிரம் உதாரணம் ஹிந்து சமூகத்தின் சரித்திரத்திலிருந்து எடுத்துக் காட்டலாம். அவ்விதம் அடிக்கடி புதிய கருத்துக்களை ஏற்றுக் கொண்டு ஆசாரங்களையும் வழக்கங்களையும் மாற்றிக்கொண்டு வந்ததினால் ஹிந்து சமூகம் இன்றைக்கு ஜீவசக்தி பெற்றிருக்கிறது.

"அத்தகைய அவசியம், ஹிந்து சமூகம் பல ஆசாரங்களையும் பழக்க வழக்கங்களையும் மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் தற்சமயம் ஏற்பட்டிருக்கிறது. ஹிந்து தர்மத்துக்குக் கேடு நேராமல் என்னென்ன சமூகச் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று போதனை செய்ய மகாத்மா காந்தி அவதரித்திருக்கிறார். அவருடைய போதனையின் படி தீண்டாமை, சாதி வித்தியாசம், குழந்தை மணம் முதலிய வழக்கங்களை ஒழித்தேயாக வேண்டும். நம்முடைய பாட்டனார்களின் காலத்தில் கடைப்பிடித்த வழக்க பழக்கங்களையே இன்னமும் கைக்கொள்ளலாம் என்று எண்ணினோமானால் நம்மைப் போன்ற அறிவீனர்கள் இல்லை என்று ஏற்பட்டு விடும்.

"பாரத தேசத்து மக்கள் காலத்துக்கு ஏற்ப மாறிக் கொண்டு வந்தால் இந்த உலகில் நிலைபெற்று வாழலாம்; மேன்மையாகவும் வாழலாம். வழக்கங்களை மாற்றமாட்டோம் என்று பிடிவாதம் பிடித்தால் சரித்திரத்தில் எத்தனையோ ஜீவப் பிராணிகளும் எத்தனையோ தேச மக்களும் அழிந்து போனது போல நாமும் அழிந்து போக வேண்டியதுதான் !...."

சூரியாவின் இந்த நீண்ட பிரசங்கத்தைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவரான பிச்சுவய்யர் இப்போது குறுக்கிட்டு, "நீ சொல்லுகிறது சரிதான், அப்பா ! யார் இல்லை என்கிறார்கள்? நம்முடைய காலத்திலேயே எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டுத்தான் இருக்கின்றன. நான் சிறு பையனாயிருந்தபோது பிராமணன் சா'




பிடுவதை மற்றச் சாதியார் பார்க்கக் கூடாது. சம பந்தி போஜனம் செய்தால் சாதிப் பிரஷ்டம் செய்துவிடுவார்கள். அந்த ஆசாரத்தையெல்லாம் இப்போது யார் பார்க்கிறார்கள்? அந்தக் காலத்தில் இந்த அக்கிரகாரத்தில் ஒருவர்கூடத் தலையில் கிராப் வைத்துக் கொண்டிருந்ததை நான் பார்த்ததில்லை. இப்போது எந்த வீட்டிலாவது கிராப் வைத்துக் கொள்ளாத பையன் இருந்தால் காட்டு பார்க்கலாம். கிடையவே கிடையாது!'' என்று சொன்னார்.

''மாமா! இந்த மாதிரி முக்கியமில்லாத விஷயங்களில் மாறுதல் நடந்திருக்கிறது. ஆனால் இது போதுமா? போதாது. நம்முடைய பாட்டனார் காலத்தில் பண்ணையாட்களை நடத்தியது போல் இந்தக் காலத்திலும் நடத்தலாம் என்று நினைத்தோமானால் பெரும் பிசகாக முடியும்.....''

'' பார்த்தீராங்காணும், பஞ்சுவய்யரே! பையன் எங்கேயெல்லாமோ சுற்றி என்னவெல்லாமோ சக்கர வட்டமாகப் பேசுகிறானே என்று பார்த்தேன். கடைசியில் பண்ணை ஆள் விஷயத்துக்கு வந்து விட்டான். அப்பனே! அந்த விஷயம் ஹைகோர்ட் வரையில் போய்த் தீர்ந்து போய் விட்டது. அதைப் பற்றி நீ இப்போது பேச வேண்டாம். வேறு ஏதாவது இருந்தால் சொல்லு'' என்றார் அப்பாத்துரை சாஸ்திரிகள்.

'' சாஸ்திரிகள் சொல்லுவது சரிதானே, சூரியா! இந்தக் கிஸான் கிளர்ச்சி விஷயம் இருக்கவே இருக்கிறது. அதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். நீ சுயராஜ்ய இயக்கத்தைப் பற்றிச் சொல்லு. மகாத்மா காந்தி முதலானவர்கள் இவ்வளவு பாடு பட்டார்களே! என்ன ஆயிற்று? சுயராஜ்யம் எப்போது வரப் போகிறது? நேதாஜி சுபாஷ் போஸ் இப்போது எங்கே இருக்கிறார்? ஜயப்பிரகாச நாராயணன் என்ன சொல்லுகிறார்? 'வெள்ளைக்காரா! வெளியே போ!' என்று தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருக்கிறார்களே, அதன் பலன் என்ன? வெள்ளைக்காரன் எப்போது வெளியே போகப் போகிறான்?'' என்று சீமாச்சுவய்யர் கேட்டார்.



''இவர்கள் தொண்டை கிழியும்படி 'வெள்ளைக்காரா! வெளியே போ!' என்று எங்கே கத்தினார்கள்? நம்ம ஊர் சந்தைத் தோப்பில் நின்று கொண்டு கத்தினார்கள்! வெள்ளைக்காரனுடைய காதில் விழும்படி கத்தினால்தானே? அப்படிக் கத்தியிருந்தால் வெள்ளைக்காரன் வெளியே போயிரா விட்டாலும் அவனுடைய காதாவது செவிடாகப் போயிருக்கும்! அப்படி ஒன்றும் இவர்கள் செய்யவில்லையே! குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டிக் கொண்டிருந்தார்கள். நம்ப ஊர்க்

கழுதைப் பொட்டலில் வெள்ளைக்காரன் இருக்கிறானே, என்ன? இவர்களுடைய கூச்சலைக் கேட்டுவிட்டு வெளியே போவதற்கு?'' என்று பஞ்சு வய்யர் வெளுத்து வாங்கினார்.

''மாமா! கொஞ்சம் பொறுங்கள். இப்போது உங்களுக்கு எகத்தாளமாகத் தான் இருக்கும். ஆனால் கொஞ்ச நாட்களில் நீங்களே பார்க்கப் போகிறீர்கள். வெள்ளைக்காரன் மூட்டை கட்டிக்கொண்டு வெளியே போகத்தான் போகிறான்!'' என்றான் சூரியா.

''சரிதான் அப்பா, சரிதான்! முப்பது வருஷங்களாய் இப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நானும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். முன்னொரு சமயம் 'ஒரு வருஷத்திலே சுயராஜ்யம் வரப்போகிறது' என்று சொன்னார்கள். அது வராமல் டிமிக்கி கொடுத்து விட்டது. அப்புறம் உப்பு சத்தியாக்கிரஹத்தின் போது 'சுயராஜ்யம் இதோ வரப்போகிறது' என்றார்கள். சுயராஜ்யம் வாங்கி வருகிறதற்காக மகாத்மா லண்டனுக்குப் போயிருக்கிறார்!' என்றார்கள். 'வைஸ்ராய் இர்வின் சரணாகதி அடைந்து விட்டான்' என்றார்கள். கடைசியில் ஒன்றுமில்லை என்று ஆகி விட்டது. இப்போதும் 1942ம் வருஷத்தில் 'ஆச்சு போச்சு' என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். நேதாஜி படையெடுத்து வருகிறார் என்று சொன்னார்கள். எல்லாம் வெறும் சவடால் பேச்சு என்று ஆயிற்று. அப்பேர்ப்பட்ட பயங்கரமான யுத்தம் நடந்தபோது, ஹிட்லர் ஒரு பக்கமும் டோஜோ ஒரு பக்கமும் நெருக்கிக் கொண்டிருந்தபோதே இங்கிலீஷ்காரன் மசியவில்லையே! யுத்தத்தில் ஜயித்த பிறகா இந்தியாவுக்கு சுயராஜ்யம் கொடுத்துவிடப் போகிறான்!'' என்றார் வேலாயுத முதலியார்.

''முதலியார்வாள்! உங்களைப்போல் தான் நானும் நினைத்தேன். இன்னும் அநேகரும் யுத்த சமயத்திலேதான் இந்தியாவின் சுயராஜ்யத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று எண்ணினார்கள். ஆனால் அவதார புருஷரான மகாத்மா வேறு விதமாக நினைத்தார். யுத்த காலத்தில் இங்கிலீஷ்காரர்களுக்குக் கஷ்டம் கொடுக்கக் கூடாது என்று சொன்னார். நல்ல பாம்பு மந்திரத்துக்குக் கட்டுப்படுவது போல நாம் சத்தியத்துக்குக் கட்டுப்பட வேண்டும் என்று கூறினார். அவர் பேச்சை மீறி என்னைப் போல் எத்தனையோ பேர் இரகசியப் புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டோம். அதனால் ஒரு பயனும் கிடைக்கவில்லை. கடைசியாக இப்போது மகாத்மாவின் வழியினால்தான் இந்தியாவுக்குக் கதிமோட்சம் கிட்டப் போகிறது என்ற நிச்சயத்துக்கு வந்திருக்கிறோம்!'' என்றான் சூரியா.

''நீயும் உன்னைப் போன்றவர்களும் மெத்தப் படித்த புத்திசாலிகள். அதனால் உங்களுக்குக் காந்தி காட்டுகிற வழிதான் சரியான வழி என்று நிச்சயிக்க இவ்வளவு காலம் ஆயிற்று. ஆனால் நாங்கள் எல்லோரும் படிப்பு வாசனை இல்லாத பட்டிக்காட்டு மனிதர்கள். ஆகையால் ஆரம்பத்திலேயே அந்த நிச்சயத்துக்கு வந்து விட்டோம். இந்தியாவுக்குக் கதிமோட்சம் பிறந்தால் மகாத்மாவினால்தான் பிறக்க வேண்டும். வேறு யாராலும் இல்லை என்று முப்பது வருஷத்துக்கு முன்னாலேயே முடிவு செய்து விட்டோம். உன் அப்பாவும் நானும் அன்றைக்குக் கதர் கட்ட ஆரம்பித்தவர்கள் இன்றைக்கும் கதர் கட்டி வருகிறோம். தெரியுமோ, இல்லையோ? சீமாச்சு இப்போது விற்கிறது மில் துணியானாலும் அவன் கட்டிக் கொள்கிறது கதர் வேஷ்டி தான்!'' என்று சொன்னார் பஞ்சு வய்யர்.

''மாமா! காந்தி மகானிடம் உங்களுக்கு அவ்வளவு பக்தியும் நம்பிக்கையும் எப்போது இருக்கிறதோ, அப்போது அவர் சொல்கிறதை முழுவதும் கேட்டு அப்படியே நடக்க வேண்டியது தானே?'' என்றான் சூரியா.

''என்ன காரியத்தில் இதுவரை மகாத்மா சொல்கிறபடி நாங்கள் நடக்கவில்லை, நீமட்டும் நடந்து விட்டாய் என்பதைச் சொல்லேன் பார்க்கலாம்!'' என்றார் அப்பாதுரை சாஸ்திரிகள்.

''சுயராஜ்யம் கூடிய சீக்கிரம் வரப் போகிறது. அதற்குள்ளே நம்மிடமுள்ள குறைகளை நீக்கிக் கொண்டு சுயராஜ்யத்துக்குத் தயாராக வேணும் என்று மகாத்மா சொல்கிறார்.''

''என்ன குறை எங்களிடம் இருக்கிறது, அதை எப்படி நீக்கிக் கொள்ள வேண்டும் என்று சொல்லேன்!''

''முக்கியமாகக் கிராமங்களில் உள்ள மிராசுதார்களுக்கும் குடிபடைகளுக்கும் தகராறு இருக்கக் கூடாது. உழைக்கிறவனுக்கு உழைப்பின் பலன் என்கிற கொள்கையை எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டும்.''

''சூரியாவையரே! நீர் வேறு என்ன வேணுமானாலும் பேசும். இந்த ஆள் படை விஷயத்தைப் பற்றி மட்டும் பேச வேண்டாம். உம்முடைய தகப்பனார் ஏற்கனவே இடம் கொடுத்துக் கொடுத்து அதன் பலனை இப்போது அநுபவிக்கிறார். அவருடைய உயிருக்கே

நோய்களிலிருந்து குணம் பெற உங்களுக்கு மருந்து தேவைப்படுகிறது. இழந்த சக்தியை மீண்டும் பெற உங்களுக்கு 'ஹார்லிக்ஸ்' தேவைப்படுகிறது.



நோய்களினால் பலஹீனமடையும் போது, உங்களுக்கு அதிக சக்தி தேவைப்படுகிறது. அதற்கு 'ஹார்லிக்ஸ்' தேவைப்படுகிறது. அது எளிதில் செரிக்கக் கூடியது. இழந்த சக்தியை மீண்டும் பெற வழி செய்து விரைவில் குணமடைய உதவுகிறது.

அதனால்தான் சுமார் 100 வருடங்களாக நோயுற்றவர்களுக்கும், அதிலிருந்து குணமடைந்து வருபவர்களுக்கும் டாக்டர்கள் 'ஹார்லிக்ஸ்' சிபாரிசு செய்து வருகின்றர்.





முழுமையான ஊட்டம்பெற—
'ஹார்லிக்ஸ்'

'ஹார்லிக்ஸ்' பதிவு பெற்ற ட்ரேட்மார்க்

HL-5601A

உலே வைக்கப் பார்த்தார்கள். தெய்வா தீனமாகப் பிழைத்தார்!...''

''அப்பாவை எங்களுடைய ஆட்கள் கொல்ல யத்தனித்தார்கள் என்பதை நான் நம்பவே மாட்டேன். அப்படி ஒரு நாளும் நடந்திராது. யாரோ வழிப் பறிக் கொள்ளைக்காரர்கள் செய்த காரியத்துக்கு ஏழைக் குடிபடைகள் மேல் எதற்காகப் பழியைப் போடுகிறீர்கள்?''

''சரி, விடு! உன்னிடம் இதைப் பற்றி வாதமிடுவானேன்! போலீஸ் விசாரணை நடந்து வருகிறது. சில நாளைக்கெல்லாம் உண்மை என்னவென்று தெரிந்து விடுகிறது. அப்புறம் இந்த மாதிரி பேச மாட்டாய்!''

இந்தச் சமயத்தில் லலிதா வீட்டு வாசலுக்கு வந்து, ''அண்ணா! உன்னை அப்பா கூப்பிடுகிறார்!'' என்றாள்.

''சரி, அப்பாவைப் போய்ப் பார். அவர் சொல்கிறதையாவது கேட்டு அதன்படி செய்!'' என்று சொல்லிவிட்டுத் திண்ணைப் பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் சபையைக் கலைத்துவிட்டுப் போய்ச் சேர்ந்தார்கள்.

சூரியா தன் தந்தை இருந்த அறைக்குள் சென்று அவர் படுத்திருந்த கட்டிலுக்கு அருகில் உட்கார்ந்தான்.

''மன்னியுங்கள், அப்பா! நாங்கள் சத்தம் போட்டுப் பேசியது உங்களுக்குத் தலை நோவாக இருந்திருக்கும். தெரியாமல் இரைந்து பேசி விட்டேன்!'' என்றான்.

''சூரியா! நீ பேசியதெல்லாம் என் காதில் விழுந்து கொண்டிருந்தது. அதனால் எனக்குத் தலை வலி உண்டாகவில்லை. ரொம்பவும் சந்தோஷம் உண்டாயிற்று. உன்னிடம் ஒரு விஷயம்



சொல்ல வேண்டும் என்று நானே எண்ணிக் கொண்டிருந்தேன். சில நாளாக நான் யோசனை செய்து பார்த்ததில் நீ சொல்வதுதான் சரி என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். நீ இந்த ஊரில் தங்கி உன்னுடைய இஷ்டப்படி எல்லாம் நடத்து; குடிபடைகளுக்கு என்ன செய்ய வேண்டுமோ செய். நான் உனக்குப் பூரண அதிகாரம் கொடுக்கிறேன். எனக்கு இந்த ஊரில் இருக்க இனி பிரியமில்லை. வானப்பிரஸ்த ஆசிரமத்தை என்னுடைய மனம் நாடுகிறது. எங்கேயாவது யாத்திரை போக வேண்டும் என்று தோன்றுகிறது. லலிதா தேவப் பட்டணத்தில் வந்திருக்கும்படி கூப்பிடுகிறாள். காசி, ஹரித்வாரம், பத்ரிநாத் முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசனம் செய்வதற்குச் சீதா என்னை அழைத்துப் போவதாகச் சொல்கிறாள்.''

''சீதா எதற்காக உங்களை அழைத்துப் போக வேண்டும், அப்பா! நான் அழைத்துப் போகிறேன். அந்த இடங்களெல்லாம் எனக்குத் தெரியும். காசியில் ஆறு மாதம் இருந்தேன்.''

''சூரியா! நீ என்னைக் காசிக்கு அழைத்துக் கொண்டு போவதைக் காட்டிலும் இங்கே யிருந்து குடிபடைகளைக் கவனித்துச் செய்ய வேண்டியதைச் செய்தால் அதுவே எனக்குப் பரம திருப்தியா யிருக்கும்...''

இந்தச் சமயத்தில் சரஸ்வதி அம்மாள் உள்ளே யிருந்து வந்து, ''சூரியா! அப்பாவோடு அதிகமாகப் பேச்சுக் கொடுக்காதே! அர்த்தராத்திரி ஆகப் போகிறதே! அவர் தூங்க வேண்டாமா?'' என்றாள்.

''அம்மா சொல்வது சரிதான். தூங்குங்கள் அப்பா! விவரமாக நாளைக்குப் பேசிக்கொள்ளலாம். எப்படியும் உங்கள் இஷ்டப்படி நடந்து கொள்வேன்!'' என்றான் சூரியா.

மறுநாள் தந்தையுடன் தொடர்ந்து பேச்சு நடத்துவதற்குச் சூரியாவுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

கிட்டாவய்யரைத் தீர்த்தயாத்திரை அழைத்துப் போவது யார் என்ற பிரச்னையும் எழுவதற்கு இடமில்லாமல் போய்விட்டது.

திருமூலர் என்னும் மகான் மனித வாழ்வின் அநித்தியத்தைக் குறிப்பிடுவதற்கு ஓர் அற்புதமான பாடலைப் பாடியிருக்கிறார்.

அடப்பண்ணி வைத்தார்
அடிசிலை உண்டார்
மடக் கொடியாரோடு
மந்தணம் புகுந்தார்!
இடப்பக்கமே இறை
நொந்ததே என்றார்
கிடக்கப் படுத்தார்
கிடந்தொழிந் தாரே!

இராத்திரி அறுசுவை உண்டி தயாரித்து வைத்ததை ஒரு கிரகஸ்தர் சாப்பிட்டார். பிறகு மனைவியோடு சயன அறைக்குச் சென்றார். ''இடது மார்புக்கு அருகில் கொஞ்சம் வலிக்கிறது!'' என்று சொன்னார். தூங்கினால் வலி

போய்விடும் என்று படுத்தார். படுத்தவர் படுத்தவர்தான்! பிறகு எழுந்திருக்கவே யில்லை.''

திருமூலர் வாக்கின் கடைசி வரி கிட்டாவய்யரின் விஷயத்தில் பலித்து விட்டது. இராத்திரி சூரியாவிடம் தன் உள்ளத்தைத் திறந்து காட்டிவிட்டு நிம்மதியோடு படுத்துத் தூங்கியவர் மறுபடியும் எழுந்திருக்கவே யில்லை.

அடுத்த நாள் காலையில் அந்த வீட்டில் பரிதாபமான ஓலக் குரல்களும், துயரம் ததும்பிய பிரலாபமும் ஒப்பாரியும் ஒருமித்து எழுந்தன.

எல்லாரிலும் அதிகத் துயரத்துடன் புலம்பி அதிகமாகக் கண்ணீர் விட்டுக் கதறியவள் கிட்டாவய்யரின் மருமகளாகிய சீதாவேயாகும்.

8. ''மாமழை போற்றுதும்''

போர்க்களத்தில் அம்பு மழையைப் பொருட்படுத்தாமல் குறிப்பிட்ட இலட்சியத்தை நோக்கிச் செல்லும் வீரனைப் போல் அந்த ரயில் வண்டி காற்றையும் மழையையும் பொருட்படுத்தாமல் போய்க் கொண்டிருந்தது.

இரண்டாம் வகுப்பு வண்டி ஒன்றில் சீதாவும், லலிதாவும், லலிதாவின் புருஷன் பட்டாபிராமனும் குழந்தைகள் இருவரும் இருந்தார்கள்.

அவர்கள் எல்லோருடைய கவனமும் வண்டிக்கு வெளியே தோன்றிய காட்சிகளில் சென்றிருந்தது.

வானம் முழுவதும் கருமேகங்கள் மூடி மழை பெய்து கொண்டிருந்தபடியால் பகல் நேரம் அந்திப் பொழுதைப் போல் மங்கி இருள் அடைந்து தோன்றியது.

சடசடவென்று அடித்த மழை ஒரு பக்கத்து ஜன்னல் கண்ணாடிகளைத் தாக்கிச் சுக்கு நூறுக்கிவிட முயன்று கொண்டிருந்தது.

ஆனால் இன்னொரு பக்கத்து ஜன்னல் கண்ணாடிகளின் வழியாக வெளியே தோன்றிய பலவிதக் காட்சிகள் தெளிவாகப் புலனாகிக் கொண்டிருந்தன.

நீர்வளமும் நில வளமும் நிறைந்து செழித்த பிரதேசத்தின் வழியாக ரயில் அச்சமயம் போயிற்று.


பெருங் காற்றில் பேயாட்டம் ஆடிய தென்னை மரங்களின் மட்டைகள் வானத்து மேகங்களின் மீது கோபம் கொண்டு தாக்கி அடித்தன.

அடர்ந்து செழித்து வளர்ந்திருந்த மூங்கில் மரங்கள் நாலா பக்கமும் சுற்றிச் சுற்றி மழைத் துளிகளைத் தாக்கிச் சிதறச் செய்து கொண்டிருந்தன.

மாமரக் கிளைகள் அலங்கோலமாக ஆடியபோது, அவற்றில் மழைக்கு ஒதுங்கிப் பதுங்கிக் கொண்டிருந்த பட்சிகளின் பாடு மிகவும் கஷ்டமாகப் போய் விட்டது.

திடீரென்று ஒரு மாமரத்தின் கிளை முறிந்து கீழே விழுந்தது. அதிலிருந்த ஒரு காக்கை மழையினால் நனைந்த சிறகுகளை விரிக்க முடியாமல் விரித்து, பறக்க முடியாமல் பறந்து, கரகரவென்று கட்டிப் போயிருந்த தொண்டையினால், ''அபயம்'' ''அபயம்'' என்று கூவிக் கொண்டு இன்னொரு மரத்தில் போய் உட்கார்ந்தது.

''ஐயோ, பாவம்!'' என்று சீதா பரிதாபக் குரலில் கூறிவிட்டு லலிதாவைப் பார்த்தாள். லலிதா குழந்தை



பாலுவிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தபடியால் பட்டாபிராமனுடைய முகத்தை நோக்கினாள்.

பட்டாபிராமன் அச்சமயம் சீதாவைக் கவனித்துக் கொண்டிருந்தான். மழையில் நனைந்த காக்கைக்கு அவள் இரக்கப்பட்டதைக் குறிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான்.

''அந்தக் காக்கையின் பாடு கஷ்டம் தான்!'' என்று சொன்னான்.

''நான் பிறந்த வேளையில் அந்தக் காக்கையும் பிறந்திருக்க வேண்டும்!'' என்றாள் சீதா.



ஒரே ஒரு சலவையில்
ஸூப்பர் ஸர்ஃப்,
வேறெந்த சலவைப்
பவுடரையும் விட
அதிக வெண்மை தருகிறது!

அமோகமான சலவைத் திறன் படைத்தது ஸூப்பர் ஸர்ஃப். கண்மறைவான அழுக்குகளையும் அகற்றிவிடும். காண்போர் பொறாமைப்படும் கற்பனை கடந்த வெண்மை. கேட்பானேன், இந்தியாவின் தலைசிறந்த ரகம்: ஸூப்பர் ஸர்ஃப்!

ஒப்பற்ற வெள்ளைவெளேர் சலவைக்கே ஸூப்பர் ஸர்ஃப்

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லின்டாஸ்-SU. 116-140 TM

லலிதா திரும்பிப் பார்த்து, "எந்தக் காக்கை? எதைப் பற்றிப் பேசுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

சீதாவும் பட்டாபிராமனும் பேசாமல் இருந்தார்கள்.

"ஒரே மௌனமாக இருக்கிறீர்களே என்ன விஷயம் என்று எனக்குச் சொல்லக் கூடாதா?" என்று லலிதா மறுபடியும் கேட்டாள்.

"ஒரு மரக் கிளை ஒடிந்து விழுந்தது. அதிலிருந்த ஒரு காக்கை அலறி அடித்துக்கொண்டு இன்னொரு மரத்துக்குப் பறந்து சென்றது! நீ கவனிக்கவில்லை" என்றான் பட்டாபிராமன்.

"பாலு என்னமோ கேட்டான். அவனுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன். அதனால் கவனிக்கவில்லை!" என்றாள் லலிதா.

"அதைத்தான் நானும் சொன்னேன்!" என்றான் பட்டாபிராமன்.

"குழந்தையைக் காட்டிலும் எனக்குக் காக்கை ஒசத்தியில்லை!" என்று சொன்னாள் லலிதா.

"குழந்தையைக் காட்டிலும் காக்கை ஒசத்தி என்று யார் சொன்னது?" என்றான் பட்டாபிராமன்.

ரயில் போய்க் கொண்டிருந்தது.

*　　*　　*

ஓர் ஊருக்குப் பக்கத்தில் வயல்கள் சூழ்ந்திருந்த பொட்டைத் திடலில் ஒரு சிதை எரிந்து கொண்டிருந்தது.

சிதையின் தீ மழையில் நனைந்து அணைந்து போய் விடாதபடி சிலர் அதன் மேல் அவசரம் அவசரமாகக் கீற்றுப் பந்தல் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

"அதோ பார், அம்மா! நெருப்புக்கு மேலே பந்தல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்? எதற்காக, அம்மா?" என்று பட்டு கேட்டாள்.

எல்லோரும் அந்தப் பக்கம் பார்த்தார்கள். சிதை எரிவதைக் கண்டதும், "மாமாவையும் இந்த மாதிரிதானே சிதையில் வைத்துக் கொளுத்தி விட்டு வந்தோம்?" என்று சீதா சொல்லிவிட்டு விம்மி அழத் தொடங்கினாள்.

லலிதாவின் கண்களிலும் கண்ணீர் துளித்தது. ஆனால் அவள் அழவில்லை.

"அப்பா செத்துப் போனதுகூட எனக்கு அவ்வளவு பெரிதாக இல்லை. நீ துக்கப்படுவதைப் பார்த்தால்தான் அதிக வருத்தமாயிருக்கிறது!" என்று லலிதா கூறினாள்.

"மாமா செத்துப் போனதற்காக யாரும் வருத்தப்பட வேண்டிய அவசியமே இல்லை. அவர் மிக மேலான கதிக்குப் போயிருப்பார். மோட்சங்களுக்குள்ளே மிக உயர்ந்த மோட்சத்துக்கு அவர் நிச்சயம் போயிருப்பார்!" என்றான் பட்டாபிராமன்.

சீதா விம்மலை நிறுத்திக் கண்களைத் துடைத்துக் கொண்டு, "அது வாஸ்தவம்தான். சூரியாவைப் போன்ற ஒரு பிள்ளையைப் பெற்றதற்கே அவர் எவ்வளவோ மேன்மையான கதிக்குப் போயிருக்க வேண்டும்!" என்றாள்.

"சந்தேகமில்லை; பத்து நாளைக்குள் சூரியா குடியானவர்களை எவ்வளவு சரிக்

ராஜாஜியின் ஹாஸ்யங்கள்

ராஜாஜி ஒரு சமயம் இன்ஷூரன்ஸ் அலுவலகத்துக்காகப் பல மாடிக் கட்டடம் எழுப்ப அடிக்கல் நாட்ட வந்திருந்தார். அப்போது அவர், "வாழ்க்கைக்கு இன்ஷ்யூரன்ஸ் நல்ல பந்தோபஸ்துதான். ஆனால் நான் ஒன்று சொல்வேன். தூய காற்றைத் தடுக்கும் இதுபோன்ற பெரிய பல மாடிக் கட்டடங்கள் எழுப்புவதைத் தடுக்க ஓர் இன்ஷ்யூரன்ஸ் தேவை. சுத்தக் காற்று பரவினால் நல்ல ஆரோக்கிய வாழ்க்கையே பெறுவோம். இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கும் நல்ல லாபம்" என்று சொன்ன போது ஒரே கரகோஷம்.



ஒரு சமயம் என் நண்பர் பெண் சரோஜாவை அவர் இல்லம் அழைத்துச் சென்றேன். அவரிடம் சென்று வணங்கியபின் அப்பெண் "கல்கத்தாவிலிருந்து மதராஸ் சுற்றிப் பார்க்க வந்தேன். மிருகக் காட்சிச் சாலையைப் பார்த்துவிட்டு நேரே உங்களைப் பார்க்க வந்தேன்" என்றாள். ராஜாஜி வாய்விட்டுச் சிரித்துவிட்டு, "நீயும் மிருகக் காட்சிச் சாலையிலிருந்துதான் வருகிறாயா?" என்று பளிச்சென்று கேட்டதும் அந்தப் பெண் தன் தவற்றை உணர்ந்து தலை குனிந்தாள். "உங்கள் கையெழுத்துப் போட்டுத் தர வேண்டும்" என்றாள். ராஜாஜி, "நான் என் கையெழுத்தை வியாபாரம் செய்கிறேன். ஒரு கையெழுத்து ஐந்து ரூபாய் விலை" என்றார். "சரி தாருங்கள்" என்று பத்து ரூபாயைக் கொடுத்தாள் அந்தப் பெண். ராஜாஜி வாங்கிக் கொண்டு, "இரண்டு கையெழுத்துக்கள் போடட்டுமா?" என்று கேட்டவுடன் எல்லோரும் சிரித்துவிட்டோம். உடனே ராஜாஜி பர்ஸிலிருந்து ஐந்து ஒரு ரூபாய் நோட்டுக்களைத் தந்து, "சில்லறையாகத் தருகிறேன். செலவழிக்க அல்ல; சிக்கனமாக அவசியத்துக்கு மட்டும் செலவழித்துக் கொள்" என்றார்.

-- எஸ். கே. எஸ். ராகவன்

கிரிக்கெட் சரித்திரம்



☐ இந்தியா 1932ம் ஆண்டிலிருந்து 1971 வரை 124 டெஸ்ட்கள் ஆடியிருக்கிறது. இந்திய கோஷ்டிக்கு 17 மாட்சுகளில் வெற்றி; 49 பந்தயங்களில் தோல்வி; 58 டெஸ்ட்கள் டிராவாகியுள்ளன.

☐ சென்னை கண்ட வெற்றிகள்: இங்கிலாந்து கோஷ்டியை 1951--52ம் ஆண்டில் தோல்வியடைய வைத்தது. 1955-56ம் ஆண்டில் நியூஜிலாந்து கோஷ்டியை வென்றிருக்கிறது. இங்கிலாந்து கோஷ்டியை 1961 - 62ம் ஆண்டிலும் 72 - 73ம் ஆண்டிலும் ஜெயித்திருக்கிறது.

☐ 1961-62ம் ஆண்டில் சென்னையில் புகழ்பெற்ற ஐந்தாவது டெஸ்டில் வெற்றி கண்ட கோஷ்டியில் இடம் பெற்ற பட்டோடி நவாப், ச.ஏ.எஸ். பிரஸன்னா, எம். எம். இன்ஜினீயர், எஸ். ஏ. துரானி ஆகிய நால்வரும் 1972-73 சென்னை டெஸ்டிலும் இடம் பெற்று அபார சாதனைகள் புரிந்தனர்.

☐ இந்திய கோஷ்டி காப்டன் கண்டிராக்டர் தலைமையில் 1961-62ல் சென்னையில் முதல் தடவையாக ரப்பரை வென்று புகழ்பெற்றது. கல்கத்தாவிலும், சென்னையிலும் வென்று மற்ற இரு டெஸ்ட் மாட்சுகளில் 'டிரா' கண்டு ரப்பர் பெற்றனர்.

☐ 1961-62ம் ஆண்டில் சென்னையில் 177 ரன்களுக்குள் துரானி இங்கிலாந்து கோஷ்டியின் பத்து விக்கெட்களை வீழ்த்தியிருக்கிறார்.

☐ 1969ம் ஆண்டில் பிரஸன்னா ஆஸ்திரேலியக் கோஷ்டிக்கு எதிராக 174 ரன்களுக்குள் பத்து விக்கெட்களை வீழ்த்தியிருக்கிறார். - பி.எஸ்.எம்.

கட்டி விட்டான்!'' என்று பட்டாபிராமன் சொன்னான்.

''அப்பா செத்துப் போன அன்றைக்கே குடிபடைகள் எல்லாம் கூட்டமாய் வந்து கதறி அழுது விட்டார்களே!'' என்றாள் லலிதா.

ரயில் போய்க் கொண்டே யிருந்தது.

* * *

எங்கே பார்த்தாலும் தண்ணீர் மயமாகக் காணப்பட்டது.

''இது என்ன, ஒரே ஜலப் பிரளயமாகவல்லவா இருக்கிறது? ராஜம்பேட்டையைக் காட்டிலும் இங்கே மழை அதிகம் போலிருக்கிறதே!'' என்றான் பட்டாபிராமன்.

''நாம் ரயில் ஏறிக் கிளம்பிய பிறகு அங்கேயும் மழை கொட்டி யிருக்கலாம்!'' என்றாள் சீதா.

''மழை இல்லை, மழை இல்லை என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்போது அடைத்து வைத்துக் கொண்டு கொட்டுகிறது!'' என்றாள் லலிதா.

''மழை கொஞ்ச நாட்கள் இல்லாமல் போனால்தான் மழை எவ்வளவு அவசியமானதென்று ஜனங்களுக்குத் தெரிகிறது. வேதகாலத்து ரிஷிகள் சூரியனை எப்படித் தோத்திரம் செய்தார்களோ, அப்படியே வருணனையும் பிரார்த்தனை செய்தார்கள். சிலப்பதிகாரம் என்ற தமிழ்க் காவியத்தில் சூரியனையும், சந்திரனையும் போற்றி விட்டு, 'மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்!' என்று அழகாகப் பாடியிருக்கிறது!'' என்று பட்டாபிராமன் தன்னுடைய புலமையைத் தெரியப்படுத்திக் கொண்டான்.

''இருந்தாலும் மழையை ரொம்பப் போற்றிவிடாமலிருந்தால் நல்லது. இப்படி ஒரே கொட்டாகக் கொட்டினால் ஏழை ஜனங்கள் என்ன செய்வார்கள்? அதோ பாருங்கள்!'' என்றாள் லலிதா.

அவள் சுட்டிக் காட்டிய பக்கத்தில் ஒரு கிராமம் இருந்தது. கிராமத்து வீதிகளுக்குள்ளே மழைத் தண்ணீர் ஆற்று வெள்ளம் போலப் பாய்ந்து ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு குடிசை வீட்டின் கூரையைப் பெருங் காற்று அப்படியே பிய்த்துத் தூக்கி அப்பாலே எறிந்திருந்தது.

குடிசையில் பாக்கி நின்ற சுட்டிச் சுவர்கள் மழையில் நனைந்து கரைந்து கொண்டிருந்தன.

குடிசைக்குள்ளேயிருந்த சட்டிப் பானை, தட்டு முட்டுச் சாமான்களை ஒரு ஸ்திரீயும் இரண்டு ஆண் பிள்ளைகளும் எடுத்து அப்புறப்படுத்த முயன்று கொண்டிருந்தார்கள்.

''இந்த மாதிரி எவ்வளவு குடிசைகள் இன்றைக்கு இடிந்து விழுந்து போயிற்றோ? அந்தக் குடிசைகளில் வசித்த ஏழை ஜனங்கள் எல்லோரும் என்ன கஷ்டப்படுவார்களோ?'' என்று லலிதா பரிதாபப்பட்டாள்.

''எனக்கு இங்கேயே ரயிலிலிருந்து குதித்து விடலாம் என்று தோன்றுகிறது. ஓடிப்போய் வீடு வாசல் இழந்த அந்த ஏழை ஜனங்களுக்கு ஒத்தாசை செய்ய வேண்டும் என்று ஆசையா யிருக்கிறது'' என்றாள் சீதா.

மழை மேலும் கடுமையாகப் பெய்தது. காற்று இன்னும் தீவிர வேகமடைந்து மோதி அடித்தது.

ரயில் அசைந்து ஆடிக் கொண்டும், திணறித் திண்டாடிக் கொண்டும் தண்டவாளங்களின் மீது ஊர்ந்து சென்று கொண்டே யிருந்தது. (தொடரும்)

RAJAJI'S MAHABHARATA

"Those that do not know the story of MAHABHARATA cannot be deemed to be children of Bharatavarsha. Not all could read the original MAHABHARATA in its entirety. I therefore wrote "Vyasar Virundhu" (a condensation of MAHABHARATA in Tamil which was serialised in Kalki). "Vyasar Virundhu" and its English rendering in book form are selling in lakhs. But my own feeling is that this is not enough. I pondered over how best to make people read this epic and asked the Kalki management to serialise "Vyasar Virundhu" once again week after week, which they did. Let all people read this great epic. Falsehood and deceit will get far away on reading our epics; the mind will turn to the path of righteousness. Righteousness alone is the path of deliverance."

Thus wrote Rajaji in the Kalki some time ago. He later expressed a desire to carry his MAHABHARATA in English in Swarajya. By way of fulfilling his wishes Rajaji's MAHABHARATA will be serialised in Swarajya from the issue dated Jan. 13, 1973.

T. SADASIVAM
Publisher, SWARAJYA
Kalki Buildings, Chetput, Madras - 600031


Please reserve your copy of Swarajya with your nearest newspaper stall or write to The Manager, SWARAJYA, Kalki Buildings, Madras - 600031
Annual subscription Rs. 18/- □ Half - yearly subscription Rs. 9/-

பூட்ஸ் வழங்குகிறது–



இருமல் மருந்தின் முழுஆற்றலையும் பெற்ற ஒரு வசதியான லாஸன்ஜ்!

இருமல்-நிவாரணியான செராணாவிலுள்ள நோஸ்கபீன்* இருமல் ஏற்படும் கேந்திரத்திலேயே செயலாற்றுகிறது.



உங்கள் வாயில் செராணா கரையும்போதே, அதன் இதமளிக்கும் இருமல் நிவாரணச் செயல் இரும-லின் கேந்திரஸ்தானத்தையே எட்டிவிடுகிறது.
*நோஸ்கபீன்—உலக சுகாதாரஸ்தாபனத்தால் இருமல் சிகிச்சைக்கு சிபாரிசு செய்யப்பட்ட நோஸ்கபீன் இருமல் ஏற்படும் கேந்திரத்திலேயே செயலாற்றி, தூக்கமோ மலச்சிக்கலோ விளைவிக்காமல் இருமலிலிருந்து நிவாரணம் அளிக்கிறது. செராணா கைக்கடக்கமான இருமல் சிகிச்சை மருந்து.

இருமல்–நிவாரணி


செராணா-லாஸன்ஜ்

கைக்கடக்கமான இருமல் சிகிச்சை மருந்து

CMBC-51-202 TM

இரு முடிச்சுக்கள்

கே. பாலசுந்தர்



4

மனிதர்களுக்கு எந்த நோய் வந்தாலும் தாங்கிக் கொள்ளலாம்; எந்த நோய்க்கும் ஒரு மருந்துண்டு. ஆனல் சந்தேகம் என்ற பயங்கர நோய் வரக் கூடாது; வந்தாலும் அதற்கு மருந்தில்லை; எத்தனையோ பேர் எத்தனையோ முறை திரும்பத் திரும்பச் சொன்னதுதான்! நோய் என்பது தனி மனிதனை ஆட்டிப் படைப்பது. சந்தேகம் அப்படியில்லையே. ஒரு குடும்பத்தையே ஆட்டிப் படைப்பதாயிற்றே! ஏன்? சிலபல சமயங்களில் பெரிய பெரிய சாம்ராஜ்யங்களையும் ஆட்டிப் படைத்திருக்கிறது. இது ஒரு நோயல்ல...

பின்....?

அழிவு....

ஓ... தேவையற்ற நினைவு; தேவையற்ற குழப்பம்; தேவையே இல்லாத சலனங்கள்! அழிவுக்கு ஒரு நினைவு, குழப்பம், சலனங்கள் தேவைதாமா?

காதலுக்கும் இல்லறத்துக்கும் நாம் கொடுத்து வரும் மகத்துவமும், முக்கியத்துவமும்தான் சந்தேகம் என்கிற சலனத்துக்கும் அடிப்படைக் காரணமாக அமைகிறதோ? இல்லறத்துக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம்? அதனுலேயே சிறு துளியாக ஆரம்பமாகும் சந்தேகம் பெரு வெள்ளமாகப் பெருக்கெடுத்து விடுகிறது. அழிவு என்று தெரிந்தும் அதை அலட்சியப்படுத்த முடிவதில்லை.

வண்டிச் சக்கரங்களை இரு கரங்களாலும் தள்ளினான் மோகனசுந்தரம். எங்கு தள்ளிச் செல்கிறோம் என்பது அவனுக்கே புரியவில்லை. எங்கு தள்ளினாலும் மாளிகையின் அந்தக் கீழ்ப் பகுதிகளைத்தானே சுற்றிச் சுற்றி வர முடியும்? மனம் சஞ்சலப்படுகிற போது கண்ணில் ஒளி குறைகிறது. இப்போது மோகனசுந்தரத்துக்கு முடமாகிக் கிடப்பதை விடக் குருடாகிக் கிடந்தால் எவ்வளவோ தாழ்வில்லை போலத் தெரிந்தது.

புத்தகங்கள் அடுக்கியிருக்கும் அலமாரியண்டையில் சக்கர வண்டி நின்றது. வெறுமை நிறைந்த கண்களுடன் அண்ணாந்து கவனித்தான். எத்தனையோ அறிஞர்களுடைய நூல்கள், எழுத்தாளர்களுடைய நூல்கள். சொல்லப் போனல் மன நோய்களுக்கு, அவர்கள்தாம் சரியான மருத்துவர்கள். மோகனசுந்தரத்துக்கோ அவர்களே மூளையைக் குழப்புகிறவர்களாகத் தென்பட்டார்கள்!

இதயத்தை உடைத்துப் பாதியாக்கித் தருகிறவளா பெண்? எல்லாப் பெண்களுமே அப்படித்தானு?

போலீஸ் அதிகாரியாக, 'கடமையே' உலகமென்று நினைத்தான். அந்த உலகம் அவனை விட்டு ஓடி மறைந்தது; அன்பு மனைவியுடன் வாழும் இல்லறமே உலகம் என்று நினைத்தான்! அதுவும் தன்னை விட்டு ஓடப் போகிறதா? அப்படியென்ருல்?

அதன் பின்? புத்தகங்கள் நிரம்பிய அலமாரியைப் பார்த்தான்.

புத்தகங்கள்தான் அவனது உலகம்! அந்த உலகத்தை மேலும் கீழும் அவன் பார்த்தான்.

மேலிருந்து கீழே மூன்ருவது தட்டில் எட்டாவது புத்தகமாக இருக்கும் ஒரு புத்தகம்தான் இப்போது அவனது கண்களைக் குத்தியது; அவ்வளவு பெரிய புத்தக உலகத்திலும் ஒரே ஒரு புத்தகம்தான் அவனது கண்களில் பூதாகாரமாகத் தெரிய வேண்டுமா?

அது ஷேக்ஸ்பியரின் 'ஒதெல்லோ' நாடகம். அவனது நெஞ்சம் பனிக் கட்டி போல் உறைந்தது. கதாநாயகன் 'ஒதெல்லோ'வின் நிலையா அவனுக்கு?..

உடல்மேலுள்ள ரோமங்கள் குத்திட்டு நின்றன.

மல்லிகைப் பூ 'கம்'மென்று மணம் வீசிக் கொண்டிருந்தது. எங்கிருந்து வீசுகிறது இந்த மணம்?

மோகனசுந்தரம் மருட்சியுடன் சுற்று முற்றும் கவனித்தான். என்ன ஆச்சரியம்! ஓ... இரவு ஈரத் துணியில் சுற்றி வைத்திருப்பதாகச் சொல்லியவள் மறந்தாற்போல் விட்டுச் சென்றிருக்கிறாள். அந்த வாசனைதானோ இது?

''எசமான்! தபால் வந்திருக்கு'' என்று கூறிய வண்ணம் உள்ளே நுழைந்தாள் வேலைக்காரி அஞ்சலை. அவள் தலை நிறைய மல்லிகைப்பூ கனத்துக் கொண்டிருந்தது. அதனை வெறிக்க வெறிக்கக் கவனித்த வண்ணம் தபாலை வாங்கினான் மோகனசுந்தரம்.

அஞ்சலைக்கே தரும சங்கடமாக இருந்தது. 'எதற்காக இப்படித் தன்னை வெறிக்க வெறிக்க எசமான் கவனிக்கிறார்? என்றுமில்லாத இந்த அலங்காரத்தைக் கண்டா?' என்று எண்ணிய வண்ணம் அவ்விடத்தை விட்டகன்றாள் அஞ்சலை. அவள் செல்கிற வரை அவளுடைய கொண்டையையே வைத்த கண் வாங்காமல் கவனித்துக் கொண்





எதற்கும் அவளை அழைத்துக் கேட்டுப் பார்த்து விட்டால்?....

''அஞ்....''

இரண்டெழுத்தோடு நின்றதே ஒழிய முழுப் பெயர் வாயில் வரவில்லை. அதற்குள் என்ன நினைத்துக் கொண்டானோ? அப்படி விசாரிப்பது கௌரவக் குறைவு என்று மனத்தில் பட்டதோ?

உண்மைதானே? இதைப் போய் எப்படிக் கேட்பது? அவள்தான் என்ன நினைப்பாள்?

''நான் வூட்டுலேருந்து வர்றப்பவே தலையிலே பூவச்சுக்கினு வந்தேன் சாமி!'' கேட்கும் கேள்விக்கு அஞ்சலை நாணிக் கோணி இப்படிப் பதில் சொல்லி விட்டால்...?

டிருந்தான் மோகனசுந்தரம். மல்லிகைப்பூ மணம் அந்த அறை முழுவதும் பரவிக்கிடந்தது.

இவள் வேறு மல்லிகைப்பூ சுமந்து கொண்டு வந்து மனத்தைக் குழப்பிவிட்டுச் செல்கிறாளே! மனத்தை இதப்படுத்துவதே மணமுள்ள மலர்கள். மலர்களிலே சிறந்த இந்த மல்லிகைப் பூதான் எத்துணைக்கு மனத்தைக் குழப்பி விட்டது!

ஆமாம், ஆமாம்...

ஈரத் துணியில் சுற்றிக் கிடந்த மல்லிகைப் பூவை — பைரவி மறந்து விட்டுச் சென்ற மல்லிகைப் பூவை — வீணாகிவிடப் போகிறதே என்று எண்ணி இவள் எடுத்துச் சூட்டிக் கொண்டாளோ? ஏன் இருக்கக் கூடாது?

ஆனால் காலையில் இவள் வருகிறபோதே மல்லிகைப் பூவைச் சூடிக் கொண்டு வந்தாளா? அல்லது இங்கே வந்து சூடிக் கொண்டாளா, யார் கவனித்தார்கள்?

ஏன் குழப்பம்?

கேட்காமல் இருப்பதே நல்லது!

'மல்லிகை'ச் சம்பவம் துர்நாற்றம் அடிக்க ஆரம்பித்தது; இதோடு மனத்திலிருந்து தூக்கி எறிந்து விடுவது சாலச் சிறந்தது!

தபாலைப் பிரித்துப் பார்த்தான்.

திருச்சியிலிருந்து அவனுடைய நண்பன் வராகசாமி எழுதியிருந்தான். ஒரு காலத்தில் இருவரும் ஒன்றாகப் படித்தவர்கள். இன்ஸ்பெக்டர் பயிற்சியிலும் ஒன்றாகப் பயின்றவர்கள். இப்

போது தனக்குப் பதவி உயர்வு கிடைத்திருப்பதாகவும் மகிழ்ச்சியைத் தெரிவித்தும் எழுதியிருந்தான். கண்களில் மெல்லிய நீர் இழை பிரிந்தது. அது ஆனந்தக் கண்ணீர் என்றும் சொல்லலாம்; ஆற்றாமைக் கண்ணீர் என்றும் சொல்லலாம். நண்பனுக்குக் கிடைத்த பதவி உயர்வு ஆனந்தம் நிறைந்ததுதான். தானும் இப்படி முடமாகாமல் இருந்தால் தனக்கும் இந்நேரம் பதவி உயர்வு கிடைத்திருக்குமல்லவா? ஆற்றாமையை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

கால்களைக் கவனித்தான். எத்தனை பெரிய துரதிர்ஷ்டம்! இந்த நிலை மட்டும் ஏற்படாமல் இருந்தால் இப்படி முடங்கிக் கிடக்கிற வாழ்க்கை ஏன் ஏற்படப் போகிறது? பைரவி ஏன் வேலைக்குச் செல்லப் போகிறாள்? இரவு முழுவதும் ஏன் ஓயாமல் 'டைப்' அடித்து உடம்பைக் கெடுத்துக் கொள்ள வேண்டும்? அதனால் ஏற்படுகிற சிறு சிறு சந்தேகங்கள் பொரியாகி, நெருப்பாகி, தன்னையே எரிக்கிற பயங்கரச் சூழ்நிலைக்கு ஆளாக வேண்டும்? எல்லாம் விதி என்றுதான் சொல்லத் தோன்றுகிறது!

அன்று முழுவதும், ஏன்? மறுநாள் முழுவதும் அமைதியாகவே இருந்தான் மோகனசுந்தரம். மல்லிகைப் பூவைப் பற்றி அவன் எதையும் கண்டுகொள்ளவில்லை : கண்டுகொள்ளவும் விரும்பவில்லை; கண்டுகொள்வதும் அநாகரிகமாகத் தெரிந்தது.

பைரவியும் வழக்கம்போல் வேலையோடு வந்தாள். கணவனுக்கான பணிவிடைகளைப் புரிந்தாள். இரவு நேரங்களில் 'டைப்' அடித்தாள். அது முடிந்ததும் பதவிசாக எப்போதும் போலவே தன் கணவனின் பக்கத்தில் படுத்துக் கொண்டாள்.

மனைவியின் இதயத்தில் தேனைத் தடவி அவள் புரியும் சேவைகளுக்கெல்லாம் இதம் அளிப்பதன் மூலம் நிறைவு கொள்வான் மோகனசுந்தரம். பாவம், அவனுக்கு அந்த ஒரு சுகம்தானே எஞ்சி நின்று மகிழ்ச்சியை அளித்துக் கொண்டிருக்கிறது. சொல்லப் போனால் அதைக் கூட அவள் எதிர்பார்ப்பவளாகத் தெரியவில்லை. ஏதோ கணவனுக்காகவே சகலமும் அர்ப்பணித்து விட்ட ஒரு தியாகியைப் போல் — இறைவனிடம் அனைத்தையும் சமர்ப்பித்து விட்ட ஒரு ஞானியைப் போல் பல சமயங்களில் நடந்து கொள்வாள். இவனாக வற்புறுத்தினாலொழிய அவளாகவென்று ஓர் ஆசை இருப்பதாக அவள் காட்டிக் கொண்டதே யில்லை.

மெல்லத் திரும்பி மனைவியின் கழுத்தை ஆவலுடன் வருடினான் மோகனசுந்தரம்.

பைரவி மெல்லத் திரும்பிக் கணவனை நோக்கினாள். மேலே மின்சார விடிவிளக்கு அவர்களைக் கண்டு சிரித்துக் கொண்டிருந்தது.

''பைரவி! ஏன் இப்படி வேர்த்துக் கொட்டுகிறது?'' — மோகனசுந்தரம் ஒன்றும் புரியாமல் கேட்டான். பிறகு அவனுக்கே புரிந்து விட்டது போல, ''எனக்குப் புரிந்து விட்டது!'' என்று கூறி மனைவியை நோக்கினான்.

பைரவி சற்றே புருவங்களை உயர்த்தி, ''என்ன புரிகிறது?'' என்றாள். குரலில் எந்த விதமான சலனமுமில்லை.

''இன்று வெகு நேரம் டைப் செய்து கொண்டிருந்தாய். உனக்கு ரொம்பவும் அசதி இல்லையா?''

''எனக்கு எது அசதி தருவது, எது அசதி இல்லாதது என்றே இப்பல்லாம் தெரிவதில்லை.''

மோகனசுந்தரத்துக்கே வேதனையாக இருந்தது. எத்தனை விரக்தியாகச் சொல்கிறாள்!

'' நீ தூங்கு பைரவி; காலையில் பேசிக் கொள்வோம்.''

''ஏன்? நான் இப்ப என்ன சொல்லி விட்டேன்?''

''நீ ஒண்ணும் சொல்லலை. நான்தான் பல விஷயங்களைப் புரிஞ்சுக்காதவனாக இருக்கேன். என்ன இருந்தாலும் வீட்டுச் சுவர்களுக்குள் உலகத்தைப் பார்க்கிறவனில்லையா?''

''நீங்க ஏதோ மனசுலே வைச்சுக்கிட்டுப் பேசறாப்பலே தெரியுது.''

''உன்னைப் பொறுத்தவரையிலே என் மனசு கண்ணாடியாகத்தான் இருக்கு! உன்னைத் தவிர அதிலே வேறு எந்த முகமும் தெரியாது. பேசாமல் கண்ணை மூடிக் கொள். எனக்கும் தூக்கம் வராப்பிலே இருக்கு !''

பைரவி அதற்கு மேல் எதையும் பேசிக் கொள்ளவில்லை. அவள் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டாள். கடிகாரம் இரண்டு முறை ஒலி யெழுப்பியது. மணி ஒன்று என்று அறிவித்தது.

பைரவி அலுவலகத்துக்குப் புறப்பட்டு விட்டாள். புறக்கடையில் வேலைக்காரி துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்தாள். அந்த ஓசை மட்டும் அமைதியைக் குலைத்துக் கொண்டிருந்தது.

நண்பன் வராகசாமி எழுதிய கடிதத்துக்கு இன்னும் பதில் போடவில்லை. அவன்தான் என்ன நினைத்துக் கொள்வான்! மூன்று தினங்களாகியும் கடிதம் எழுதக்கூடவா நேரமில்லை?



நல்லதோர் காலை
நறுமண வேளை
நாள்தனை
நன்கு தொடங்கிட

நரசுஸ் காபி

'தேர்மலோ'
முறையில் தயாரிக்கும்
நரசுஸ் காபி இப்போது
மற்ற காபிகளைவிட
கிலோவிற்கு 30 கோப்பை
அதிகச் சுவையுள்ள
காபியை அளிக்கிறது.

நரசுஸ் காபி கம்பெனி
சேலம்-7
கிளைகள் தமிழகமெங்கும்

EP-NC-1

பிப்ரவரி 25 சிறுகதைச் சிறப்பு மலர்

சக்கர வண்டியை மேஜையருகே சுழற்றிச் சென்றான். மேசை டிராயரிலிருந்த உள்நாட்டுத் தபால் உறையை எடுத்து மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் தெரிவித்து ஆங்கிலத்தில் எழுதி முடித்தான். எப்போதாவது சென்னைக்கு வர நேர்ந்தால் தன் வீட்டுக்கு வந்து செல்லுமாறு குறிப்பிட்டிருந்தான். பிறகு தபாலை எச்சிலிட்டு ஒட்டி முகவரியை எழுதி மேசையின்மீது வைத்தான். அப்போது வெளியிலிருந்து 'காலிங் பெல்' ஓசை கேட்டது.

புறக்கடையிலிருந்த வேலைக்காரி அஞ்சலை ஓடோடி வந்து கதவைத் திறந்தாள். அங்கே ஓர் ஆணும் ஒரு பெண்ணும் அலங்காரத் தோற்றத்துடன் கொலுப் பொம்மைகளைப் போல் நின்றிருந்தனர்.

''யாருங்க நீங்க?'' என்று அஞ்சலை கேட்டாள்.

''ஐயா இருக்காங்களா?'' — ஆண் குரல்.

''அம்மா இருக்காங்களா?'' பெண் குரல்.

இதற்குள் உள்ளிருந்து மோகனசுந்தரத்தின் குரல் கேட்டது. ''அஞ்சலை! யார் வந்திருப்பது?''

''யாரோ ரெண்டு பேர் வந்திருக்காங்க, எசமான்! பார்த்தா புருஷன் பெண்சாதி மாதிரி தெரியுது.''

அவளாகவே சொல்லி வைத்தாள்!

''ஹாலில் அவர்களை உட்காரச் சொல்.'' மோகனசுந்தரம் அறையினுள்ளிருந்து குரல் கொடுத்தான்.

சோபாவைக் காட்டினாள் அஞ்சலை.

''நாங்க புருஷன், பெண்சாதிதான்னு எப்படி முடிவு செஞ்சே?''

வந்த பெண்மணி அஞ்சலையைக் கேட்டே விட்டாள்.

''அதானே? ஆச்சரியமாயிருக்கே!'' வந்தவன் சேர்ந்து கொண்டான்.

''அவரைப் பார்த்தா எனக்குப் பயந்த மாதிரி தெரிகிறதா? அதனாலேயா?'' வந்த பெண்மணி சொல்லிவிட்டு அவளே கடகடவெனச் சிரித்தாள்.

''மூட்டை முடிச்சுக்களோட நான் நிக்கறப்ப அவ மட்டும் கையை வீசிக்கிட்டு நிக்கறாளே. அதனாலே என் மனைவின்னு நினைச்சியா?'' இப்படிச் சொன்னது அவன்; தானே சொல்லிவிட்டு அவனும் சிரித்தான்.

ஆம்! அவனுடைய வலது கையில் ஒரு பெரிய தோல் பை! தோளில் ஒரு காக்கிப் பை... இடது கையில் இரண்டு மூன்று பைல்கள்....

அவளது கையில் சிறிய 'கைப்பை' கூட இல்லை!

''அவ்வளவு நிச்சயமா புருசன் பெண்சாதின்னு எப்படிச் சொன்னே?''

அவர்கள் அஞ்சலையை விடவில்லை!

அஞ்சலை, அவர்களைப் பார்வையிலேயே அலட்சியப்படுத்திக் கொண்டிருந்தவள், இடது கன்னத்துக்குள் ஒதுக்கி வைத்திருக்கும் புகையிலையை வலது கன்னத்துக்குள் மாற்றியவளாக, ''இதென்னங்க, பெரிய விசயம்? அந்தப் பொம்பிளை மேலே இடிச்சுக்கிட்டே நின்னுக்கிட்டிருந்தீங்க! அதான் அப்படி நினைச்சேன்! நீங்க புருசன் பெண்சாதி இல்லையா?'' என்றாள்.

பதிலுக்குக் காத்திராமல் உள்ளே சென்று விட்டாள் அஞ்சலை!

தம்பதி இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்; புருவங்கள் நெளிந்து, நீண்டு, குறுகிச் சமநிலையை அடைந்தன.

உள்ளே சற்றுத்தூரம் வந்த இருவரும் மீண்டும் ஒருவரை ஒருவர் நோக்கிக் கொண்டனர். ''ஆண்டாளு! இந்த வீட்டுக்கு இதுக்கு முன்னாலே எப்பவாவது வந்திருக்கோமா? நல்லா ஞாபகப்படுத்திச் சொல்'' என்று மெல்லிய இரகசியக் குரலில் கேட்டான் ஒற்றை நாடியாக உலக்கை போலிருந்த அந்த மனிதன்.

''நிச்சயமா இந்த வீட்டுக்கு வரலை; துணிந்து என்னோடு வாங்க!'' என்றாள், உரல் மாதிரியிருந்த ஆண்டாள்.

அதற்குள் சக்கர வண்டியைச் சுழற்றிக் கொண்டே அங்கு வந்த மோகனசுந்தரத்தைக் கண்டதும், ''வணக்கம், சார்!'' என்றனர் இருவரும்.

சற்று நேரம் வரை கூர்ந்து கவனித்த மோகனசுந்தரம், ''யார் நீங்கள்? இப்படி உட்காரலாம்'' என்றான்.

வந்தவர்கள் இருவரும் அருகே இருந்த நாற்காலிகளில் அமர்ந்தனர்.

''நீங்கள்தானே மிஸ்டர் மோகனசுந்தரம்?''

''ஆமாம்!''

''நல்ல கனவான் என்று கேள்விப் பட்டிருக்கோம்!'' என்றாள் ஆண்டாள்.

'கனவான்' என்ற சொல் 'கணவன்' என்பது போல் ஒலித்தது மோகன சுந்தரத்துக்கு.

பைரவியின் நினைவுகள் எழுந்து அடங்கின.

ஆண்டாள் வாய் திறந்தாள்: ''என் பெயர் ஆண்டாள். இவர் என் ஹஸ்பெண்டு!''

உலக்கை, 'ஹஸ்' என்று ஒரு தும்மு தும்மி வளைந்து கொடுத்தது.

''என் பெயர் மிஸ்டர் திருப்பதி!''

''எங்கள் பொருத்தம் எப்படி?'' பெரிய 'ஜோக்' அடித்தவன் போல் கடகடவெனச் சிரித்துக் கொண்டாள் ஆண்டாள். திருப்பதி சிரிப்பைத் தொடர்ந்தான்! அது பழக்கம். அவள் சிரிப்பை ஆரம்பித்துவிட்டால் மற்றவர்கள் சிரித்தே ஆக வேண்டும்.

மோகனசுந்தரத்துக்கும் சிரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

''என்ன விஷயமாக வந்தீர்கள்?'' என்று மோகன சுந்தரம் சிரித்துக் கொண்டே கேட்டான்.

ஆண்டாள் விளக்கினாள்: ''நாங்க பொதுச் சேவகர்கள். நாடி தளர்ந்தவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பவர்கள். வீடு அற்றவங்களுக்கு வீடு வசதி செய்பவர்கள்!''

''ஹவுஸிங்போர்டுநடத்தறீங்களா?'' என்று மோகன சுந்தரம் கிண்டலாகக் கேட்டான்.

இருவரும் சிரித்துக் கொண்டனர்.

'''முடிப்பு' என்ற பெயரில் ஒரு போர்டு நடத்துகிறோம். வசூல் பண்ணிப் பண முடிச்சு கொடுக்கிறதுதான் எங்க முழு நேர சேவை.''

''யாருக்கு? எதுக்காக?'' —மோகன சுந்தரம் கேட்டான்.

''சார்! புகழ் வாய்ந்த பெரியவர்களுக்கு, தூக்கி எறியப்பட்ட அரசியல் வாதிகளுக்கு, நாட்டுக்காக எழுதியே நரம்பு தளர்ந்துபோன எழுத்தாளர்களுக்கு, வாரி வாரி வள்ளல்தனம் பண்ணிட்டு அம்போன்னு உட்கார்ந்திருக்கிற சினிமா நடிகர்களுக்குப் பணம் தண்டி ஒரு மேடை போட்டுப் பண முடிச்சு தருகிறோம்.''

திருப்பதி இவ்வாறு கூறி முடித்ததும், தொடர்ந்து ஆண்டாள் சொன்னாள்: ''அவர்கள் உயிரோடு இருந்தால் அவர்களிடம் கொடுப்போம்; செத்துப் போயிருந்தால் அவர்கள் குடும்பத்திடம் சேர்த்து விடுவோம்.''

''சில சமயம் பண முடிச்சுக் கொடுக்கப் போகிறோம் என்று தெரிந்த



''புடலங்காய்க்குக் கல்லைக் கட்டித் தொங்கவிட்டிருப்பதைப் பார்த்த பிறகுதான் தொங்கு மீசை வளருவதற்கான ஐடியாவை கண்டுபிடிச்சேன்!''

□

''நர்ஸ் நளினிமீது ஒரு கண் வச்சிருக்கியாமே!''



வுடன் சாக இருந்தவர்கள்கூடப் பிழைத்துக் கொண்டதுண்டு.''—இதுவும் ஆண்டாள்! வழக்கம்போல் அவளே சிரிப்பை ஆரம்பித்து வைத்தாள்.

மோகனசுந்தரத்துக்கு வேடிக்கையாக இருந்தது! இப்படி ஒரு நிறுவனமா?

''டொனேஷன்' அப்படி இப்படின்னு கழுத்தை அறுக்கிறார்களேன்னு நீங்க நினைக்கலாம்! ஆனா எத்தனையோ குடும்பங்கள் எங்களை வாழ்த்துது....''

திருப்பதி வளைந்தான்.

''சரி! இப்பொ எங்கே வந்தீர்கள்?''

திருப்பதி ஆரம்பித்தான்.

''இது ஒரு பிரம்மாண்டமான திட்டம்! ஏககாலத்திலே ஒரே மேடையிலே மூணு பேருக்குப் பண முடிச்சுக் கொடுக்கப் போறோம்! மூன்று முடிச்சுக்கள்.''

ஆண்டாள் தொடர்ந்தாள்.

''பத்து லட்சம் ஜனம் கூடப் போகிறது ; முடிந்தால் மத்திய அமைச்சர்கள் யாரையாவது வரவழைப்போம், தலைமை தாங்க !''

''சரி, யார் யார் அந்த மூணு பேர்?'' என்று எரிச்சலுடன் கேட்டான் மோகன சுந்தரம்.

''கொஞ்ச விளக்கமாகச் சொல்லணும் ; ஒரு நிமிஷம்; நான் புகை பிடிக்கிறதிலே உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே !'' என்று வளைந்து நெளிந்து கேட்டபடி திருப்பதி தனது ஜிப்பாப் பையில் கையை விட்டு இழுத்தான்..... வெறும் தீப்பெட்டி மட்டும் வந்தது...

''அடாடாடா !'' என்று முறுவலித்தான் திருப்பதி.

''என்ன என்ன?'' என்று பதறிப் போனாள் ஆண்டாள் !

''முழு சிகரெட் பாக்கெட்டையும் டாக்ஸியிலே விட்டுட்டேன்.....''

''இந்தப் பழக்கத்தை விட்டுத் தொலையுங்கன்னு சொல்றேன்; கேட்டால்தானே ! அவருக்குச் சிகரெட் இல்லேன்னா ஒரு நிமிஷம்கூட ஓடாது.... நீங்க சிகரெட் பிடிக்கிற வழக்கம் உண்டோ ! இருந்தா ஒரு சிகரெட் கொடுங்களேன் அவருக்கு.... இஃப் யூ டோண்ட் மைன்ட் !'' ஆண்டாள் கணவனுக்காக வாதாடினாள் !

மோகன சுந்தரம் தனது 'கோல்டு பிளேக்' சிகரெட் பாக்கெட்டை எடுத்து நீட்டினான்.

பாக்கெட்டுடன் வாங்கிக் கொண்ட திருப்பதி தான் ஒன்றை எடுத்து உதட்டில் வைத்துக் கொண்டு அதே சிகரெட் பாக்கெட்டை மோகனசுந்தரத்திடம் நீட்ட, மோகனசுந்தரம் ஒன்றை எடுத்துக் கொண்டதும் பாக்கெட்டைப் பாக்கெட்டில் போட்டுக்கொண்டான் ஞாபக மறதியாகச் செய்பவன் போல். பிறகு தனது தீப்பெட்டியினால் சிகரெட்டுக்களைப் பற்ற வைத்தான்.

பெருமூச்சு விடுவதைப் போன்று புகையை இழுத்துப் பெரிதாக விட்ட திருப்பதி, ''ஐ ஆம் வெரிசாரி! ஆஷ்டிரே எங்கேயிருக்கு?'' என்று கூறியபடியே திருப்பதி டீப்பாயின் அடித்தட்டிலும் மேலும், பக்கவாட்டிலும் தேடினான்.

'' 'ஆஷ்டிரே' இங்கேதானே வழக்கமாக இருக்கும்....'' என்று கூறிய மோகனசுந்தரமும் மேலும் கீழும் தேடினான்.

வியப்பு வெடித்தது.

இரவு !

சிகரெட் பற்ற வைக்கும்பொழுது அது 'டீப்பாய்' மீது இருந்ததே !

காலிங்பெல்லை அழுத்தினான் மோகன சுந்தரம்.

''காப்பி.... டீ.... அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்.....'' என்று தானாகவே சொல்லி வைத்தாள் ஆண்டாள்.

அஞ்சலை ஓடி வந்தாள்.

''என்னங்க, எசமான் ?''

''இங்கேயிருந்த 'ஆஷ்டிரே'எங்கே?''

''படுக்கை அறையிலே இருக்கும்.''

''போய் எடுத்துக்கிட்டு வா....''

அஞ்சலை சென்றாள்.

திருப்பதி புகை இழுத்த பெரிய திருப்தியுடன் ஆரம்பித்தான்....

''பண முடிச்சுக் கொடுக்கப் போற மூணு பேரும் ரொம்ப 'டிசர்விங்'.....''

''சிங்காரவேலு நாயக்கர்னு கேள்விப் பட்டிருப்பீங்களே!''

''கேள்விப்படலே!'' வெறுப்புடன் சொன்னான் மோகனசுந்தரம்.

''பெரிய புரவி ஆட்டக் கலைஞர் !''

சற்று விழித்தான் மோகனசுந்தரம்!

''பொய்க்கால் குதிரை ஆட்டம் இருக்கே ! அதிலே பெரிய மேதை ! இந்தக் காலத்திலே சினிமா நாடகம் அப்படி இப்படீன்னு ஜனங்கள் போறாங்களே தவிர இப்படிப்பட்ட உண்மையான தமிழ் நாட்டுக் கலையை யாரு 'என்கரேஜ்' பண்ணறா ! பாவம், நொடிச்சுப் போயிட்டாரு ! அவருக்கு ஒரு பண முடிச்சு.....''

அஞ்சலை வந்தாள்.

''பெட் ரூமிலும் இல்லை, எசமான்!''

''சரி, எங்கே இருக்குன்னு தேடிப் பார் !''

அஞ்சலை அவ்விடத்தை விட்டகன்றாள்.

''.....அதாவது மிஸ்டர் மோகன சுந்தரம்! பல பேரு கௌரவத்துக்காகக் கோயில்களுக்கும், சங்கங்களுக்கும், கட்சிகளுக்கும் பணத்தை வாரி வாரி இறைக்கிறாங்க. ஆனால், இப்படியான உருப்படியான மனிதர்களுக்கு...'' திருப்பதி பேசிக் கொண்டேயிருந்தான்.

அஞ்சலை 'ஆஸ்ட்ரே'யைக் கொண்டு வந்தாள்.

''எங்கே இருந்தது ?''


''மாடியில் இருந்தது எசமான்.''

''மா....... சரி, சரி, நீ போய் வேலையைப் பார் !''

அஞ்சலை புறக்கடை நோக்கி நடந்தாள். திருப்பதி ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தான். மோகன சுந்தரத்தின் காதுகளில் விழுந்தால்தானே ! அவனது மூளை சுழன்றது. 'ஆஷ்டிரே' மாடிக்கு ஏன் செல்ல வேண்டும் ? யார் கொண்டு சென்றார்கள் ? எதற்காக எடுத்துச் செல்ல வேண்டும் ? பைரவிக்கும் 'ஆஷ்டிரே'க்கும் என்ன சம்பந்தம்?

(தொடரும்)

மலர்களிலே அவள் மல்லிகை!





மலர்களின் ராணி, மல்லிகை!
இளமைப் பூங்காவில் பூரிப்புடன்
பூத்துக் குலுங்கும் இந்த
இளமங்கை, அழகு
ராணியாகத் திகழ்கிறாள். அந்த
புத்தெழில் என்றுமே நிலைத்திட
அவள் ஜெய் அழகு சாதன சோப்
உபயோகிக்கிறாள். மல்லிகை மணம்
வீசும் ஜெய் சோப் மேனியை
மிருதுவாக்கி, பொன்னொளி
வீசச் செய்கிறது.

மல்லிகை
மணம் கமழும்

ஜெய்

அழகுசாதன
சோப்

டாடா தயாரிப்பு

OBM.7002 TM



ஜாங்கோ ஜக்கு
கதை: குட்டி கிருஷ்ணன்
சித்திரம்: ராஜு
18
கள்ளக் கடத்தலில் கொண்டு வந்த வைரங்களைப் பிச்சுவாகத்தி பிச்சுமணி அபேஸ் பண்ணியது குறித்து போலீஸாரிடம் போக முடியவில்லை; பி.கு.பி.ம வைத் தட்டிக் கேட்கவும் தைரியமில்லை. அப்பண்ணு - கப்பண்ணுவின் நிலை இவ்வாறாக இருந்ததால் பி.கு.பி.ம. ஒளியவும் இல்லை, வைரங்களை ஒளிக்கவுமில்லை.
கஷ்டம், கஷ்டம் எதுக்கோ தெரியுமா கற்பூர வாசனை என்பாங்க. மினாட் ஃபாரத்தில் காய்கறி வியாபாரம் பண்றவ மாதிரி வைரங்களை இப்படியா பரப்பி வைச்சுக்கறது?
கிண்டலா? பண்ணு, பண்ணு! இப்போ நான் இருக்கிற தோரணையிலே இன்னும் கூடத் தாங்குவேன்.
இத்தனை வைரங்களை வைச்சுக்கிட்டிருந்தா ராத்திரியிலே சரியா தூக்கம் வராது. அதைத் தொடர்ந்து நரம்புத் தளர்ச்சி, குடல் புண், எல்லாம் ஏற்படும். எதுக்கு இதெல்லாம்? கொடுத்துடு!
கொடுக்கத்தான் போறேன். பின்னே, நெக்லஸ் கட்டி மாட்டிக்கவா போறேன்?...
... இன்னும் கொஞ்ச நேரத்திலே இங்கே வைர வியாபாரி அழைக்கலாம் கோல்மால் லால் வரான். அவன் கிட்டே கொடுத்துப் பணமாக்கிடுவேன்.
பணத்தை வைச்சுண்டு என்ன பண்றது? பாங்கிலே போட்டால் ஆபத்து. எல்லா பாங்கும் சர்க்கார் உடைமை. உன் பணம் என்ன ஆகுமோ சொல்ல முடியாது....
.... சொத்து வாங்கினால் வருமான வரிக்காரன் கணக்குக் கேட்பான். பணமாக வீட்டிலேயே வைத்திருந்தால் திருட்டுப் பயம். போதாக் குறைக்கு ஸி.பி.ஐ. சோதனை நடத்துமோ என்ற கவலை. இதனாலெல்லாம் தூக்கம் வராது, அடுத்தது நரம்புத் தளர்ச்சி, குடல் புண்!
அடப்பாவி! என்னோ ஆல்பத் திரியில் படுக்க வைச்சுட்டுத்தான் மறு காரியம் பார்ப்பே போலிருக்கே!
ஹோ ஹோ! மேலே ஆகாசம் கீழே பூமின்னு இருந்தா வாழ்க்கையில் நிம்மதின்னு சொல்றேன், அவ்வளவுதான். என்னையே எடுத்துக்கோ....



... எனக்கு இப்போ இருக்கிற ஒரே சொத்து இந்தப் பொடி மட்டை தான். ஒரு பொடி டப்பா கூடக் கிடையாது!
எங்கே இப்படி காட்டு, ஒரு சிமிட்டா எடுத்துக்கறேன்.
ஓ தாராளமா. ஆனால் நீ வழக்கமா போடற பிராண்டோ இல்லையோ?
பரவாயில்லை ஓ.சி. பிராண்ட் தான். உலகிலேயே உயர்ந்த பிராண்ட்!
வாஸ்தவம். பைசா பெறாத விஷயம்தானும் ஓசிப் பொடியிலே இருக்கிற சுகம் வேறெதற்கு உண்டு... பூ
ஐயோ! எரியுதே! பாவி! கண் எரியுதே!
எரியாமல் இருக்குமா? உடுப்பி ராமா பவன் மிளகாய் பொடியைக் கலந்திருக்கேனே! வயிறு நிறையத் தின்ற போது தோன்றிய ஐடியா!
வைரங்கள் அடங்கிய பையைத் தூக்கிக் கொண்டு ஜக்கு வாசலுக்கு ஓடி வந்த போது!....
ஜக்கு அதை இங்கே கொடு! நான் பத்திரமா காப்பாற்றித் தரேன்.
இதென்ன புது ஆபத்து?
இச்சமயம் ஜிம்மி வழிகாட்டிக் கொண்டு மாடிப் படி வழியாக மேலேறி ஓடியது.
பொன் மொழியைக் காப்பாத்தறது முக்கியம். அவனிடம் வைரங்களைத் தந்தால் போலீஸுக்குப் போய்த் தாமதமாகும். மேலும் அவன் சி.ஐ.டி என்பதை முழுக்க முழுக்க எப்படி நம்பறது?
ளொள், ளொள்!

பரிபூரணப் பாதுகாப்பு



முள்வேலியோ,
காவல் இயந்திரமோ, அன்றி
சாதாரண பூட்டு, சாவியோ — இவை
தரும் பாதுகாப்பை நீங்கள்
எவ்வளவு நம்பியிருக்கிறீர்கள்
என்று எப்போதாவது
நினைத்துப்
பார்த்திருக்கிறீர்களா?

'டெரீன்' ® ட்ரேட் மார்க்
இதுபோன்ற ஒரு பாதுகாப்பே,
அதுவும் தரங்குன்றாத ஒரு பாதுகாப்பு.
அது நீங்கள் விரும்பித் தேடுவதைப்
பெறுகிறீர்கள் என்பதற்கு உறுதி அளிக்கிறது.
'டெரீன்' கொண்டு உருவான துணிகள்
சாதாரணத் துணிவகைகளல்ல,
ஆனால் அவை கடுமையான தரநிர்ணயங்களுக்கேற்ப
தயாரிக்கப்படும் துணிகள்.
அந்தத் துணிகள் கசங்குவதில்லை,
மங்குவதில்லை, திரைவதில்லை.

நீங்கள் வாங்கும் போது துணிகளின் மீது
'டெரீன்' ட்ரேட் மார்க் இருக்கிறதா என்று
கவனித்து வாங்குங்கள்.
தனி மனிதரின் — அதாவது உங்கள் ஒருவரின்
நலங்கருதி பார்த்து வாங்குங்கள்.

TERENE

'டெரீன்' —
சிறந்த மில்களுடன்... சிறந்த துணிவகைகளின் மீது

® 'டெரீன்' கெமிகல்ஸ் அண்ட் பைபர்ஸ் ஆப்
இந்தியா லிமிடெடின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்.



மஞ்சள் குங்குமம்

ஒன்று, பணக்காரப் பெண் ஏழை வாலிபனைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்; இல்லை, ஏழைப் பெண் பணக்கார வாலிபனைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் — இந்த மாறுபாட்டில்தான் தமிழ்ப் படங்களின் திரைக் கதையை உருவாக்க வேண்டியிருக்கிறது. இது திரை உலக நியதி.

குமுதம் புரொடக்ஷன்ஸாரின் 'மஞ்சள் குங்கும'த்தில், பணக்கார வாலிபன் ராஜா, ஏழை நர்ஸ் ராதாவைக் காதலித்துக் கல்யாணமும் செய்து கொள்கிறான். இந்த மாதிரி மணம் புரிந்துகொண்ட பணக்கார வாலிபன் தந்தையால் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டு வறுமையால் வாடி வதங்குவதும் திரையுலகில் இயல்புதான் !

''மஞ்சள் குங்கும''த்தில் ஒரு மாறுதல். ஏழைப் பெண் ராதா, நர்ஸ் வேலையில் பயிற்சி பெற்றிருந்தும், வேலை கிடைக்காமல் கூலி வேலை செய்து அந்த உழைப்பில் கணவன் சட்டப் படிப்பு படிக்க உதவுகிறாள்.

நர்ஸ் ராதாவாக வரும் ஷீலா மிகவும் நன்றாக நடித்துப் படத்தின் தரத்தையே உயர்த்தியிருக்கிறார். தான் படும் துயரங்கள் தன் கணவனுக்குத் தெரியக் கூடாதென்பதற்காக ராதா அவனிடம் நடிக்க வேண்டி வருகிறது. அத்தகையசந்தர்ப்பங்களில், ஷீலா தாம் ஏற்ற பாத்திரமாகவே மாறி அதியற்புதமாக நடித்திருக்கிறார். ஷீலாதான் படத்தின் மஞ்சள் குங்குமம்! குறும்புத்தனமும், குழந்தைத்தனமும் கொண்ட வாலிபனாக வரும் ரவிச்சந்திரன் நன்றாய் நடிக்கிறார். அவரது சண்டைத் திறமையைக் காட்ட 'டிஷ்யூம், டிஷ்யூம்' சண்டைகளும் வருகின்றன.

பணக்காரர் தர்மலிங்கத்துக்குத் தகுந்த நடிகர் பகவதிதான் என்று சொல்லும்படியாக வீம்பையும் வைராக்கியத்தையும் காட்டிப் படத்துக்குத் தனிச் சிறப்பை ஏற்படுத்தி விட்டார். கடைசிவரையில் பகவதியைப் போலவே அவர் நடிப்பும் நிமிர்ந்து நிற்கிறது.

நடிகையர் திலகம் சாவித்திரி தாய்ப் பாத்திரத்துக்கு இலக்கணம் கற்பித்திருக்கிறார்.

பட்டுவின் டைரக்ஷன் சிறப்பாயிருக்கிறது. இந்தப் படம் நடிகர் ரவிச்சந்திரனின் தயாரிப்பு.

கணவனை அடக்கியாளும் மனைவியாக மனோரமாவும், அவளுக்கு அடங்கிப் போகும் கணவனாகத் தேங்காய் சீனிவாசனும் தோன்றி, சீரியஸ் படத்துக்கு நகைச்சுவையூட்டியிருக்கின்றனர்.

நல்ல வேளை! நம் அதிர்ஷ்டம், பாடல்கள் தியேட்டரிலேயே மறந்து போய்விடுகின்றன! போனால் போகட்டும். அது வரையில் லாபம் தானே. !

ஒரு பெரிய பணக்காரர் மேலும் மேலும் பணம் சேர்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டுப் பலப் பல திட்டங்கள் தீட்டுவதும், அவர் சொந்த மகனே அவரது திட்டங்கள் தவிடுபொடியாகும்படி செயல்படுவதும் மிக மிகப் பழைய கதை! பல படங்களிலும் வந்த கதை. கிராமத்து வண்டிகள் மாதிரி ஒரே பாதையில், ஒன்றன்பின் ஒன்றாகத் தடம் மாறாமல் செல்லும் திரைக் கதைப் பாணியைத் தவிர்க்க வேண்டும்.

''மஞ்சள் குங்குமம்'' எங்கிருந்து கிடைத்தாலும், யார் கொடுத்தாலும் யாரும் வெறுக்க மாட்டார்கள். மங்களப் பொருளல்லவா ? நாமும் படத்தின் தலைப்பை வரவேற்கிறோம்.

— காந்தன்

"அவர் எக்கேடு கெட்டால் நமக்கென்ன? இந்த மாதிரியான வேலைகளில் இறங்குவது அபாயம், கமலம்! வேண்டாம், நான் சொல்வதைக் கேள்."

"ஓர் அபாயமும் இல்லை, காமு! நம் கையெழுத்து அவருக்குத் தெரியுமா? தெரிந்தாலும் என்ன? பார்க்கலாமே ஒரு வேடிக்கை!"

"சரி, நீயே எழுது கமலம். என் பேனா ஓடவில்லை."

"கொடு இங்கே, நான் எழுதுகிறேன். இதில் என்ன கஷ்டம்?"

இவ்வாறு சென்னை வீரேசலிங்கம் மாணவிகள் விடுதியில் ஓர் அறையில் பேச்சு நடந்தது. கமலமும் காமாட்சியும் பி.ஏ. வகுப்பில் படித்தார்கள். இருவரும் சேர்ந்து ரகசியமாக ஒரு மொட்டைக் குறும்புக் கடிதம் தயாரித்தார்கள்.

கீதாப் பிரசங்க சிரோமணி ஸ்ரீமான் நரசிம்ம சாஸ்திரி அவர்களுக்கு நமஸ்காரம்.


ஐயா, வீரேசலிங்கம் விடுதியைச் சேர்ந்த சிறு பெண்களாகிய நாங்கள் அனைவரும் பணிவுடன் செய்து கொள்ளும் விண்ணப்பம் என்னவென்றால் :

தாங்கள் பெரிய உத்தியோகத்திலிருந்து அதை விட்டு, பகவத் விஷயத்தில் ஈடுபட்டு சாஸ்திரங்களை ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லித் தரும சேவை செய்து வருவதை நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம். சென்ற ஞாயிற்றுக் கிழமை வசந்தமண்டபத்தில் தாங்கள் செய்த அரிய சொற்பொழிவைப் போல் இதற்குமுன் நாங்கள் கேட்டதேயில்லை. இது வரையில் யாருமே கீதையையும் வேதாந்தத்தையும் இவ்வளவு அழகாக விளக்கிச் சொன்னது கிடையாது. ஆனால், தாங்கள் இவ்வளவு திறமையுடன் மற்றவர்களுக்கு எடுத்து உபதேசிக்கும் உண்மைகள் ஏன் உங்களுக்கே பயன்படாமல் போய்விட்டன?

ஆமையானது தனது அங்கங்களை உள்ளே இழுத்துக் கொள்வது போல, வெளிச் செல்லும் புலன்களை விஷயானுபவங்களிலிருந்து உள்ளே இழுத்துக் கொள்ள வேண்டும் என்றும், பஞ்சேந்திரியங்களான குதிரைகளைக் கடிவாளம் போட்டு அடக்க வேண்டும் என்றும், இல்லாவிடில் குதிரைகளோடு வண்டி நெறி தவறிப் பள்



கூனி சுந்தரி



ணத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகும் என்றும் இவ்வாறெல்லாம் எவ்வளவு அழகாகத் தாங்கள் பிரசங்கம் செய்தீர்கள்? அதைத் தாங்கள் ஏன் பின்பற்றி நடக்கவில்லை? பிரசங்கம் செய்தபோது அங்கு இருந்த பெண்களைக் கண்ணெடுத்துக்கூடப் பார்க்காமல் இரண்டு மணி நேரம் பிரசங்கம் செய்து முடித்தீர்களே! அதைப் பார்த்து, தாங்கள் காஷாயம் தரிக்காத சன்னியாசியே என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள். ஆனால், சென்ற இரண்டு நாளாகத் தங்கள் நடவடிக்கை இதற்கு முற்றிலும் மாறாயிருக்கிறது. நெறிதவறிப் பள்ளத்தில் விழுவதாக இருக்கிறீர்கள். தங்களுடைய கண்களைத் தாங்கள் அடக்க முயன்றதாகக் காணப்படவில்லை. பிரின்ஸிபல் அவர்களுக்குச் சொல்லிவிடலாமென்று எங்களுள் சிலர் யோசித்தோம்.

ஆனால் தங்களை அவமானப் படுத்தலாகாது என்றே அப்படிச் செய்யாமல் இந்தக் கடிதத்தை எழுதத் தீர்மானித்தோம்.


தங்களுடைய மனைவி இறந்த பின் மறுபடியும் ஏன் தாங்கள் வழக்கம்போல் மறுவிவாகம் செய்து கொள்ளவில்லை? செய்துகொண்டிருந்தால் இந்த ராக விவகாரங்கள் உங்களைத் தொந்தரவு செய்ய நேர்ந்திராது. தயவுசெய்து நாங்கள் சொல்வதைக் கேளுங்கள். இதைப் பிரசங்கங்கள் இனி வேண்டாம். ஊருக்குத் திரும்பிப் போய் விவாகம் செய்துகொள்ளுங்கள். தங்களுக்கு அதிக வயது ஆகவில்லை. ஐம்பதுதான் இருக்கும் என்று எண்ணுகிறோம். ஒரு பெண்ணை உங்களுக்காகப் பார்த்திருக்கிறோம். ரேணிகுண்டா ஸ்டேஷனை அடுத்துள்ள வங்கிபுரத்தில், தெற்குத் தெரு பெரிய மாளிகை கோவிந்தையர் என்பவருக்கு ஒரு புதல்வி இருக்கிறாள். அவளுக்கு வயது இருபத்திரண்டு. உங்களுக்குச் சம்மதமாயிருந்தால் கல்யாணம் செய்து வைத்து விடுகிறோம். எங்களுக்கு ஓர் அடையாளம் வேண்டும். மெத்தையில் கயிற்றுக் கொடியில் உங்களுடைய பட்டுக் கரை உத்தரீயத்தை விரித்துப் போட்டு, அதன் மேல் உங்கள் கறுப்புக் குடையைத் தொங்க வைத்தால் இவ்விடத்திலிருந்து எங்களுக்குத் தெரியும். நாங்கள் சொல்லும் யோசனை உங்களுக்குச் சம்மதம் என்பதற்கு அதுவே அடையாளம். மற்ற ஏற்பாடுகள் எல்லாம் நாங்கள் செய்கிறோம். பெண் வீட்டில் நாங்கள் சொல்லிச் சம்மதிக்கச் செய்து விடுகிறோம்.

அவமானத்துக்கு ஆளாக வேண்டாம். நல்ல பெயரைப் பாழ்படுத்திக் கொள்ள வேண்டாம். இனிமேல் வேலையில்லாமல் மெத்தை மேல் நிற்க வேண்டாம்.

தங்கள் நன்மையைக் கோரும்,
வீரேசலிங்கம் விடுதி மாணவிகள்

மகாதானபுரம் நரசிம்ம சாஸ்திரி, ஜில்லா முனிசிப் பதவியில் பன்னிரண்டு வருஷங்கள் ஒரு புகாரும் இல்லாமல் உத்தியோகம் செய்தபிறகு ஒரு வருஷம் ஆக்டிங்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்



ஜட்ஜாகவும் இருந்தார். விவாகமாகிப் பதினைந்து வருஷங்கள் குழந்தை இல்லாமல் பதினாறாவது வருஷத்தில் மனைவி கருப்பம் தரித்தாள். வெகு ஜாக்கிரதையாக எல்லாச் சௌகரியங்களையும் வைத்திய ஏற்பாடுகளும் செய்திருந்தார். ஆனபோதிலும் பிரசவமாகி ஏழாம் நாள் விஷசுரம் கண்டு பல வைத்தியர்கள் பார்த்தும் குணப்படாமல், பெண் குழந்தையை மட்டும் விட்டுவிட்டு மனைவி இறந்து போனாள். சாஸ்திரி ஆறாத் துயரத்தில் மூழ்கினார்.

அவருடைய தமக்கை விதவையாகி, அவருடைய வீட்டிலேயே இருந்து வந்தாள். இவள் குழந்தையை அன்பாக வளர்த்து வந்தாள். மறு விவாகம் செய்துகொள்ளும்படி தம்பியை வற்புறுத்தி வந்தாள். ஆனால் அவர் கண்டிப்பாக மறுத்து விட்டார். கச்சேரி வேலையிலும் பகவத் விஷய நூல்கள் படிப்பதிலும் வைராக்கியமாகக் காலம் கழித்து வந்தார்.

நரசிம்ம சாஸ்திரியின் துரதிர்ஷ்டம் இதனுடன் தீரவில்லை. எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் மார்கழி ஏகாதசி தரிசனத்துக்கு ஸ்ரீரங்கம் போக வேண்டும் என்று தமக்கையம்மாள் பிடிவாதம் பிடித்தாள். அங்கே போனாள். போன இடத்தில் வாந்தி பேதி கண்டு திடீரென்று இறந்து விட்டாள். குழந்தைக்கு இன்னும் இரண்டு வருஷங்கள் சரியாக நிறையவில்லை.

மீண்டும் பெண்களைப் பெற்ற உறவினர்கள் சாஸ்திரியிடம் வந்தார்கள். குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்காக விவாகம் செய்து கொள்ளுங்கள் என்று ரொம்ப வற்புறுத்திப் பார்த்தார்கள். வேண்டாமென்று சாஸ்திரியார் மறுத்ததோடல்லாமல் வேலையையும் விட்டு விலகினார். புதுப் படிப்பும் பழைய படிப்பும் நன்றாகக் கூடியிருந்தபடியால் நரசிம்ம சாஸ்திரியார் வெகு சீக்கிரத்தில் காலட்சேப உலகத்தில் பெரும் புகழ் அடைந்தார். சென்னையில் அவருடைய பிரசங்கம் என்றால் பாட்டுக் கச்சேரிக்குக் கூடுவது போல் ஏராளமான கூட்டம் கூடிவிடும். எல்லாச் சாதியாரும், ஆண்களும், பெண்களும் படித்தவர்களும் பாமரர்களும் கூடுவார்கள். ஜனங்கள் கீதாப் பிரசங்க சிரோமணி என்று அவருக்குப் பட்டப் பெயர் கொடுத்தார்கள்.

இவ்வாறு பல மாதங்கள் கழிந்தன. ஊழ்வினைப் பயனைத் தடுக்க முடியுமா? வெகு நாட்கள் வைராக்கியமாக நடந்து வந்தார்; அந்தப் புதன் கிழமை இரவில் அவர் புத்தி தடுமாறி விட்டது.

வீரேசலிங்கம் மாணவிகள் விடுதிக்குப் பின்புறமுள்ள தெருவில் ஒரு மெத்தை வீட்டில் அவர் தங்கி யிருந்தார். சில மாணவிகள் ஓய்வுக்கு மெத்தை மேல் நின்றதும் சாஸ்திரியார் தம் வீட்டு மெத்தைமேல் நின்றதும் இரண்டும் ஒன்றாகச் சேர்ந்தது. அது முதல் ஒரு மயக்கம் ஏற்பட்டது. சாஸ்திரியாரின் கண்கள் விஷயானுபவத்தில் இறங்கின. இரண்டாம் நாளும் மூன்றாம் நாளும் இவ்வாறு நடந்தது. இது மாணவிகளுக்குப் பிடிக்கவில்லை. இதன் பயன்தான் மேலே சொன்ன மொட்டைக் கடிதம்.

தபால்காரன் கதவைத் தட்டியதும் எழுந்து சென்று தாமே கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்.

படித்து விட்டுக் கடிதத்தை நெருப்பில் போடப் போனார். எதிர்பாராத அவமானத்தில் சிக்கிக் கொண்டேனே என்று தத்தளித்தார். மறுபடியும் யோசித்து, அதை மடித்துப் பத்திரப்படுத்தினார்.

எடுத்துக் கொண்ட பிரதிக்ஞை என்னவாயிற்று? படித்த படிப்பு என்ன பயன்பட்டது? இந்த அவமானத்தை எவ்வாறு தாங்குவது என்று நொந்து கொண்டார்.

ஒன்றும் தோன்றாமல் ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்க உட்கார்ந்தார். கவனம் படிப்பில் செல்லவில்லை. ''ஹே, சீதாராமா, என் மூளையும் கெட்டுப் போயிற்றா ?'' என்று தம் இஷ்டதேவதையிடம் முறையிட்டுக் கொண்டார்.

அன்றிரவு தூக்கம் வரவில்லை. இறந்து போன மனைவியையும் தமக்கையையும் நினைத்துக் கொண்டார். சென்னையை விட்டு ஊருக்குத் திரும்பிப் போவது என்று நிச்சயம் செய்தார். ஆனால், அடுத்த ஞாயிற்றுக்கிழமை சிந்தாதிரிப் பேட்டையில் ஜவுளிக் கடை ராமநாதம் செட்டியார் வீட்டில் கீதாப் பிரசங்கம் ஏற்பாடாகியிருப்பதை எவ்வாறு நடத்தாமல் போக முடியும்? பிரசங்கம்தான் எப்படிச் செய்ய முடியும்? யோசித்து யோசித்து இரவு முழுதும் தூக்கம் இல்லாமல் கழித்தார்.

மாணவிகள் ஏமாற்றம் அடைந்தார்கள். அடுத்த நாள் சிரோமணியார் மெத்தையில் கொடிமேல் உத்தரீயமும் குடையும் தென்படவில்லை. மறு நாளும் இல்லை. தங்களுடைய குறும்பு பலிக்கவில்லையே என்று மாணவிகள் மிகவும் வருத்தப்பட்டார்கள்.

'' இன்றொரு நாள் பார்க்கலாம், காமாட்சி'' என்றாள் கமலம்.

'' ஒரு நாளும் ஏமாற மாட்டார். பாகவதர் எமகாதகர் '' என்றாள் காமாட்சி.

'' பந்தயம் !''

''இரண்டேகால் ரூபாய் !''

''சரி, பார்க்கலாம். இன்னும் இரண்டு நாட்கள் கெடுவு கொடு'' என்றாள் கமலம்.

மூன்றாம் நாள் இரவு சாஸ்திரியார் வானத்தைப் பார்த்தபடி மொட்டை மாடி மேல் உட்கார்ந்திருந்தார்.

'' இந்த அழகும் பெருமையும் பொருந்திய விசுவமண்டலத்தில் நானும் ஒரு துகள். தொத்திச் சுழன்று கொண்டிருக்கிறேன். என் சிறுமையை என்னவென்று சொல்லிப் பழிப்பது ! என் கவலையும், பயமும், கடவுளே, உனக்கு ஒரு பொருட்டாகுமா? என்னைக் காக்க வேண்டும்'' என்று கண்ணீர் வடித்தும் ஏங்கியும் வெகுநேரம் கழித்தார், அப்படியே தூங்கி விட்டார். இறந்து போன மனைவி கனவில் தோன்றினாள். கையில் தட்டும், தட்டில் வெற்றிலைபாக்கும் கொண்டு வந்து கொடுத்து, ''நீங்கள் ஏங்க வேண்டாம்'' என்று சொல்லி மறைந்துவிட்டாள். இந்தக் கனவைக் கண்டதும் சாஸ்திரியாரின் மனம் ஒருவாறு தெளிவு கொண்டது. கனவில் ஸ்திரீ தரிசனம் மங்களகரம் என்பது சாஸ்

திரம். காரியசித்திக்கு அது நல்ல சகுனம். மறுவிவாகம் செய்து கொள்வதே நலம் என்று இறந்து போன மனைவியே வந்து தமக்குச் சொன்னதாகப் பொருள்படுத்திக் கொண்டார். ''மாணவிகள் சொல்வது மிகவும் சரி. பக்குவப்படாத நிலையில் பிரகிருதியை அடக்கப் பார்ப்பதில் பயன் என்ன? மனத்தில் மாசு இருக்க, பலாத்கார இந்திரிய நிக்ரகத்தினால் என்ன லாபம்? அகங்காரத்தினால் சாஸ்திரத்தைப் புறக்கணித்தேன். விவாகம் செய்து கொள்வதே நலம்' என்று தீர்மானித்தார். இந்த மாணவிகளின் வேலை பகவதாக்ஞை என்று கண்டார்.

மறு நாள் காலையில் பட்டுக் கரை உத்தரீயத்தைக் கொடியில் பிரித்துப் போட்டு அதன் மேல் தம் குடையையும் தொங்கவிட்டார்!

ஹாஸ்டலில் கமலத்துக்கும் காமாட்சிக்கும் தாங்க முடியாத குதூகலம். குதித்துக் கூத்தாடினார்கள்.

''கொண்டு வா, இரண்டேகால் ரூபாய்!'' என்றாள் கமலம்.

''சரி, நீ புறப்படு, வங்கீபுரத்துக்கு'' என்றாள் காமாட்சி.

''கிழவர் சிக்கினார் வலையில்'' என்றாள் கமலம்.

வங்கீபுரம் கோவிந்தய்யர் சொத்துக்காரர். பரம்பரையாகப் பண்டிதக் குடும்பம். அவரும் நல்ல வித்துவான். அவருக்கு, சுந்தரி என்ற ஒரே பெண். பிள்ளை கிடையாது. பெண்ணுக்கு சம்ஸ்கிருதம் நன்றாய்ச் சொல்லித் தந்தார். பன்னிரண்டாவது வயதில் விவாகம் செய்ய வரன் தேடிக் கொண்டிருந்த சமயம், பெண்ணுக்கு ஒரு கடும் சுரம் கண்டு, அதன் பயனாகக் கால் கட்டிக்கொண்டு முதுகும் கூனிப் போயிற்று. எவ்வளவோ வைத்தியம் செய்து பார்த்தும் பயன்படவில்லை. விவாகமாகாத குழந்தைக்கு இப்படி ஆகிவிட்டதே என்று அந்தக் கவலையினாலேயே கோவிந்தையருடைய மனைவி மெலிந்து வாடிப் போய் இறந்து போனாள்.

கோவிந்தையர், மகளுக்கு எப்படியாவது சாஸ்திரப்படி விவாகம் செய்து முடிக்க வேண்டும் என்று எவ்வளவோ முயன்றார். ஏராளமாக வரதட்சிணை கொடுப்பதாகவும் சொல்லிப் பார்த்தார். கூனியும் சப்பாணியுமான பெண்ணைக் கட்டிக் கொள்ள யாரும் முன்வரவில்லை. ஆனால் பெண் தைரியசாலி. தன் துர்ப்பாக்கியத்தைத் தானாகவே சமாளித்துக் கொண்டு, தகப்பனாருக்குத் தன்னாலான அளவு சமாதானம் சொல்லி வந்தாள். தமிழும் சம்ஸ்கிருதமும் நன்றாகப் பயின்று சந்தோஷமாகவே இருந்தாள்.

உடலில் இவ்வளவு குறையிருந்த போதிலும், வீட்டில் எல்லாக் காரியமும் சுந்தரியே மிகச் சாதுரியமாக எப்படியோ செய்து வந்தாள். சுந்தரி என்று அவளுக்குப் பெயர் வைத்தபோது, பாவம், அவள் தாயார் தன் மகள் இப்படிக் குரூபியாவாள் என்று என்ன கண்டாள்? பெயர் வைத்தபோது பொருத்தமாகத்தான் இருந்தது. தன் உறவினர்களின் குழந்தைகளைவிடத் தன்

இந்த ஆண்டு சாகித்ய அகாடமி பரிசு வாங்கியவர்களில் வயதில் மிகவும் இளையவர் திரு. ஜெயகாந்தன். அவருக்கு வயது 38

-ஹிந்துஸ்தான் டைம்ஸ்
- பாபு



குழந்தை அழகு என்றுதான் தாயார் நினைத்தாள். மாநிறந்தான், ஆனால் என்ன? கண்ணும் மூக்கும் நெற்றியும் புருவங்களும் சித்திரம் போல் அமைந்திருந்தன. கூனியாய்ப் போன பிறகும்கூட, முதுகும் கால்களும் பார்க்காமல் முகத்தை மட்டும் பார்த்தால் அநேக பெண்களைப் போலவே இவளும் இருந்தாள். சப்பாணியாய்ப் போனதற்காகப் பெயரை மாற்ற முடியுமா? பெயரின் பொருளும் வங்கீபுரத்தில் மறந்து போயிற்று. அந்தக் கிராமத்தில் 'சுந்தரி' என்றால் இந்த அபாக்கியவதியின் வடிவம்தான் பொருள்.

பி.ஏ. படித்துக் கொண்டிருந்த கமலம் அதே ஊரில் பெரிய மிராசுதாரின் செல்வப் பெண். அவள் கோவிந்தய்யர் வீட்டுக்கு வருவது வழக்கம். சுந்தரியிடம் ஓர் அளவு நட்பும் உண்டு.

''என்ன கமலம்? இப்போ ஏது பள்ளிக்கூட லீவு? ஏன் ஊருக்கு வந்துவிட்டாய்?'' என்றார் கோவிந்தய்யர்.

''மாமா! நான் சுந்தரிக்கு ஓர் அகமுடையான் சம்பாதித்திருக்கிறேன். நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும்'' என்றாள்.

முதலில், வேடிக்கை செய்கிறாள் என்று கோவிந்தய்யருக்குக் கோபம் வந்தது. பிறகு விஷயத்தை முழுவதும் கமலம் அவருக்குச் சொன்னாள்.

''இது சிறு பெண் விளையாட்டு; சுந்தரியை அவர் எங்கே ஒப்புக் கொள்ளப் போகிறார்? என் துக்கம் இவ்வளவு சுலபமாய்த் தீருமா?'' என்று வழக்கம்போல் அவர் துயரத்தில் ஆழ்ந்தார்.

''இல்லை மாமா, நம் கையில் சிக்கியிருக்கிறார். கட்டாயம் ஒப்புக் கொள்ளச் செய்கிறேன்'' என்றாள் கமலம்.

''நீ தைரியசாலிதான், கமலம். ஆனால், ஈசுவரன் கருணை செய்ய வேண்டுமே!'' என்று விம்மி விம்மி அழுதார்.

''அப்பா! நீங்கள் எனக்காக வருந்த வேண்டாம்'' என்றாள் சுந்தரி.

அடுத்த நாள் காலை வாசலில் ஒரு வண்டி வந்து நின்றது. கமலம் எண்ணியபடியே நரசிம்ம சாஸ்திரியார் வண்டியிலிருந்து இறங்கினார்.

நிதானமாகவும் சம்பிரமாகவும் வண்டியிலிருந்து இறங்கினார். கமலம் அவரை எதிர்

கொண்டு, ''வாருங்கள், சிரோமணி மாமா!'' என்று வீட்டுக்குள் அழைத்துப் போனாள். இந்தக் காலத்துப் படித்த பெண்களின் தைரியத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

நரசிம்ம சாஸ்திரியார், வீட்டு வாசலில் வண்டியிலிருந்து இறங்கியதும், கல்யாணத்துக்குரிய பெண் தன்னை எதிர்கொண்டழைத்துப் போன கமலம்தான் என்று எண்ணி, உற்சாகமாக வீட்டுக்குள் நுழைந்தார். பிறகு விஷயம் விளங்கிச் சுந்தரியைப் பார்த்தவுடன் ஏமாற்றம் அடைந்தார். ஒரு கணம் வெறுப்புத் தோன்றிற்று. முகத்திலும் அது வெளிப்பட்டிருக்கலாம். உடனே சமாளித்துக்கொண்டார். படித்த படிப்பு வீணாய்ப் போகுமா?

சென்னையிலிருந்து கிளம்பிய போதே இது பகவான் ஆக்ஞை என்று ஒரு வைராக்கிய மன நிலையில் புறப்பட்டவர், சுந்தரியைப் பார்த்தபின், ''சரிதான், இது எனக்கு ஆண்டவன் இட்ட சோதனை. இதில் நான் வெற்றி பெற வேண்டும். சாஸ்திரத்துக்கும் படிப்புக்குமே அவமானம் கொண்டு வந்த என் பிழைக்கு இது தகுந்த பிராயச்சித்தம். ஏங்கித் தவிக்கும் இந்தப் பெண்ணுக்கு நான் ஒரு புகலிடமாவது பெரும் பாக்கியங்கூட ஆகுமல்லவா?'' என்று இவ்வாறு மனத்தை நிதானப்படுத்திக் கொண்டார்.

கமலமும் சும்மா இருக்கவில்லை. சாமர்த்தியமாகப் பேச்சை நடத்தி, சுந்தரியின் படிப்பையும், முக்கியமாக, சம்ஸ்கிருத நூல்களில் அவள் பெற்ற பயிற்சியையும் சோபிக்கச் செய்தாள். சாஸ்திரியார் மனத்தில் பூரண திருப்தி உதயமாயிற்று. சுந்தரியின் பேச்சைக் கேட்கும்போது அவள் கூனி வடிவம் கரைந்து போயிற்று. தம் குழந்தை லக்ஷ்மியை இவள் நன்றாகவே பார்த்துக் கொள்வாள் என்று மனத்தில் எண்ணினார். ''படிந்த அழுக்கு தீர்ந்து நான் நல்ல கதியைப் பெறுவேன். உடல் வேறு, உயிர் வேறு என்பதை இன்னும் என் மனம் உணரவில்லையே! அந்தப் பேதை மனத்துக்குப் புத்தி உண்டாக்க வேண்டும். கூனுடலுக்குள் இருக்கும் சுத்த ஆத்மாவின் அழகுக்கு என்ன குறைவு? அது அழகும் ஆனந்தமுமான தனிப் பொருள்தானே! இது சாஸ்திர உறுதி அல்லவோ?'' என்று இவ்வாறு தாம் கற்ற வேதாந்த தத்துவங்களையெல்லாம் நினைவுக்குத் தந்துகொண்டார்.

பேச்சுத் தீர்ந்தது. விவாகம் ஏற்பாடாயிற்று. கோவிந்தய்யருடைய மகிழ்ச்சியானது கரை கடந்து போயிற்று.

''சுவாமி! தாங்கள் எனக்கு ஆதிமூல மூர்த்தியாகவே வந்தீர்கள். நீங்கள் எனக்கு மாப்பிள்ளை அல்ல, மகாவிஷ்ணுவே!'' என்று கண்ணீர் வடிய அவர் கால்களைத் தொட்டு நமஸ்கரித்தார். இறந்து போன மனைவியை நினைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதார்.

''மாமா! அழக் கூடாது. மங்கள முகூர்த்தம் பேசி நிச்சயம் செய்யும் போது அழலாமா?'' என்றாள் கமலம்.

''குழந்தாய்! நீ தீர்க்காயுசாயிருக்க வேண்டும். உனக்கு எல்லா மங்களமும் உண்டாகுக!'' என்று கோவிந்தய்யர், தட்டில் தேங்காய் வைத்துக் கமலத்துக்குக் கொடுத்தார். அவள் கண்களிலும் நீர் ததும்பியது.

''இதோ சிரோமணியார் ரொம்ப நல்லவர், காமாட்சி. நாம் என்னவோ வேடிக்கை பண்ணி அவமானப்படுத்தலாம் என்று எண்ணினோம். நிஜமாகவே கல்யாணம் ஏற்பாடாகிவிட்டது'' என ஆரம்பித்துக் கதை முழுவதையும் கமலம் தன் தோழிக்குச் சொன்னாள்.

''திருப்பதியில் இந்த மாதம் பதினைந்தாம் தேதி கோயிலில் ஒரு நாள் கல்யாணம். நானும் போகப் போகிறேன். நீ வராமல் முடியவே முடியாது என்கிறார் கோவிந்தய்யர்'' என்றாள் கமலம்.

''பிரின்ஸிபாலம்மா லீவு கொடுக்கமாட்டாள்'' என்றாள் காமாட்சி.

''எல்லாம் கொடுப்பாள். போயே தீர வேண்டும்'' என்றாள் கமலம்.

''நீ போவதாயிருந்தால் நானும் வருவேன்'' என்றாள் காமாட்சி.

இன்னும் இரண்டு மூன்று மாணவிகளும் இந்தச் சந்தோஷத்தில் கலந்து கொண்டார்கள். எல்லாரும் திருப்பதி போவதாக நிச்சயித்தார்கள். ''கிழவர் கல்யாணம், நாம் போய் வெகு விமரிசையாக நடத்த வேண்டும்'' என்று மாணவிகள் எல்லோரும் வெகு குதூகலத்துடன் முகூர்த்த தினத்தை எதிர்பார்த்தவர்களாக இருந்தார்கள்.

சென்னையில் சமாசாரம் பரவிவிட்டது. பக்தஜனக் கூட்டங்களில் வெகு அமர்க்களம். 'இதோ சிரோமணி சாஸ்திரியாருக்கு விவாகமாமே, பெண்ணுக்கு என்ன வயது, எந்த ஊர்?'' என்று பலர் கேட்பதும், சிலர் 'காஞ்சிபுரம்' என்றும், சிலர் 'மதுரை' என்றும், 'எட்டு வயதுப் பெண்' என்றும், 'இல்லை, பன்னிரண்டு வயது, நன்கு வளர்ந்த பெண்' என்று வேறு சிலரும் டிராமிலும் பஸ்ஸிலும் எங்கும் பேசி வந்தார்கள். சமூகச் சீர்திருத்தக்காரர்கள் மிக்க ஆத்திரங் கொண்டார்கள்.

ஆழ்வார்ப்பேட்டை அகில இந்திய ஸ்திரீ சம உரிமைச் சங்கத்தில் ஒரு கூட்டம் கூடி, கடுமையான தீர்மானம் நிறைவேற்றினார்கள். 'நாற்பத்தைந்து வயதுக்கு மேற்பட்ட ஒருவர் விவாகம் செய்து கொள்வதைச் சட்டப்படி உடனே தடை செய்ய வேண்டும்' என்று தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டது. முடிவில் அதை நாற்பத்தொன்பது வயது என்று மாற்றினார்கள். ஒரு விதிவிலக்கும் சேர்த்தார்கள். விவாகத்துக்கு நிச்சயித்த பெண் முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டிருந்தால் குற்றமில்லை என்று தீர்மானத்தை மாற்றினார்கள்.

இரண்டு வருஷங்களாகிவிட்டபின் கதை. காவேரிக் கரையில் ஒரு கிராமம். ''அம்மா! நீ நன்னா இல்லேங்கிறாளே எல்லாரும், என்னம்மா உனக்கு? நன்னாத்தான் இருக்கே!'' இம்மாதிரி கொஞ்சிப் பேசிக் கொண்டிருந்தது நரசிம்ம சாஸ்திரியாரின் முதல் தாரத்தின் பெண் லக்ஷ்மி.

''என் கண்ணே! என் முதுகைப் பார். வில் போல் வளைந்திருக்கிறது. மற்றவர்களெல்லாரும் அப்படியில்லை பார். அதனால்



''பாட்டாளி மக்களுக்காக நீங்கள் பாடுபடப் போவதாக அறிந்தேன். நானும் ஒரு பாட்டாளிதான்! பாட்டாளியான எனக்கு எப்பாடு பட்டாவது பாட்டுப் பாட ஏதாவது ஒரு சபாவில் சான்ஸ் வாங்கித் தாருங்களேன்!''

தான் என்னைக் கண்டு எல்லாரும் ஏளனம் செய்கிறார்கள்'' என்றாள் சுந்தரி.

''உனக்கு வலிக்கிறதா அம்மா, முதுகு?''

''இல்லை குழந்தாய், வலி இல்லை.''

'' கூனலா யிருந்தால் என்ன அம்மா ? கன்றுக்குட்டிகூட உன்னைப் போல்தானே நடக்கிறது. அது நன்றாகத்தானே இருக்கு?''

''என்ன சொல்லுகிறாள் லக்ஷ்மி?'' என்று சொல்லிக் கொண்டு நரசிம்ம சாஸ்திரியார் எங்கேயோ போயிருந்தவர் வீட்டுக்குள்ளே நுழைந்தார்.

'' நான் கன்றுக்குட்டி போல் அழகாக இருக்கிறேனாம். நான் அழகாக இல்லை என்று ஊரார் சொல்லுவதெல்லாம் தப்பு என்கிறாள் லக்ஷ்மி. நீங்கள் என்ன அபிப்பிராயப்படுகிறீர்கள்?'' என்றாள் சுந்தரி.

''நானும் லக்ஷ்மி போலத்தான் எண்ணுகிறேன்'' என்றார் சாஸ்திரியார்.

அப்பா வந்ததும் குழந்தைக்குப் பேச்சு வளர்ந்தது. தாயார் எதிரில் நின்றுகொண்டு, ''இதோ பார், உன்னைப் பார்த்தால் நீதானே தெரிகிறாய்? உன் உடம்பு தெரியவில்லை!'' என்றது குழந்தை.

''நன்றாய்க் கண்ணைத் திறந்து பார்த்தால் என் உடம்பு தெரியும்'' என்றாள் சுந்தரி.

'' இல்லை அம்மா, இல்லை. உடம்பைப் பார்த்தால், உடம்புதான் தெரிகிறது. நீ தெரியவில்லை. உன்னைப் பார்த்தால், உன் உடம்பு தெரியவில்லை'' என்றது குழந்தை.

''சுந்தரி! குழந்தை சொன்னது தெரிந்ததா ?'' என்றார் சாஸ்திரியார்.

''குழந்தை என்னவோ குழந்தைப் பேச்சு பேசுகிறது. அதற்குப் பொருள் ஏது !'' என்றாள் சுந்தரி.

குழந்தையைக் கட்டி அணைத்துக் கொண்டு தகப்பனார் தாங்க முடியாத சந்தோஷத்தில் மூழ்கி நின்றார்.

'' சுந்தரி, இன்று லக்ஷ்மி சொன்னதைக் கேட்ட பிறகுதான் எனக்கு உபநிஷதத்தில் ஒரு மந்திரத்தின் பொருள் சரியாக விளங்கிற்று. குழந்தைகளைப் போல்தான் உபநிஷத்தும் பேசுகிறது'' என்றார்.

''எனக்கும் சொல்லுங்களேன்'' என்றாள் சுந்தரி.

''அக்ஷிணி புருஷோ த்ருச்யத ஏஷ ஆத்மா'' என்ற மந்திரம் இருக்கிறதே, 'கண்ணில் தெரிகிறானே அந்தப் புருஷன்தான் ஆத்மா'— இதற்குப் பொருள் லக்ஷ்மி இப்போது சொன்னதுதான். உன்னை நான் அடைந்தபோது இந்த மந்திரம் ஒருவாறு எனக்கு அர்த்தமானது போல் இருந்தது. இன்று குழந்தை சொன்ன பேச்சுத்தான் நன்றாக அதைத் தெளிவுபடுத்திவிட்டது. உள்ளத்தில் அன்புடன் ஒருவரை ஒருவர் பார்க்கும் போது திருஷ்டியிலிருந்து உடல் எங்கேயோ முற்றிலும் மறைந்து போகிறது. ஆத்மாவை ஆத்மா பார்க்கிறது. இதைத்தான் லக்ஷ்மி சொல்லுகிறாள். மந்திரமும் இதைத்தான் சொல்லுகிறது.''

''ஆத்மா வேறு உடல் வேறு என்கிறீர்கள். அவ்வளவுதானே ?'' என்றாள் சுந்தரி.

''இல்லை சுந்தரி, அதுவும்தான். ஆனால் அது மட்டுமல்ல, இதோ பார். உன்னை நான் பார்க்கிறேன். அப்படிப் பார்க்கும்போது உன் உடல் என் உணர்ச்சியில் இல்லை; மறைந்து போயிற்று. கண், மூக்கு, காது, முகம் எல்லாம் மறைந்து போய் நீ காணப்படுகிறாய். அதுவே கண்ணில் காணப்படும் உன் ஜீவன்'' என்றார்.

சுந்தரியும் உபநிஷத்துக்களைப் படித்தவள் தான்.

'' இதற்கு வேறே அர்த்தம் சொல்லுகிறார்களே? 'கண்ணில் தெரியும் புருஷன்' என்றால் ஞானியானவன் கண்களை மூடிக் கொண்டு ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்தால், தன் ஆத்மாவை மனக் கண்ணில் காண்பான் என்றல்லவோ பொருள் சொல்லுகிறார்கள்?'' என்றாள்.

''அதுவும் பொருள்தான். ஆனால், லக்ஷ்மி சொன்னதே பிரத்தியட்ச முறையில் சிறந்த பொருள். ஞானியும் அல்ல, யோகியும் அல்ல நான். உன்னை அன்புடன் பார்க்கும்போது உன் உடலையா பார்க்கிறேன் ? உன் ஆத்மாவே என் கண்ணுக்குப் பிரத்தியட்சமாகப் புலப்பட்டு உள்ளம் திருப்தி அடைகிறது. உன் கண்களும் என் கண்களும் சேர்ந்து ஒருவரை ஒருவர் பார்த்து மகிழும் போது, உன் முகமல்ல, உன் உள்ளமே எனக்குத் தரிசனமாகிறது. உன் மூக்கையோ, நெற்றியையோ, நெற்றியில் உள்ள பொட்டையோ, புருவத்தையோ பார்த்தால், மூக்கோ, நெற்றியோ, பொட்டோ, புருவமோதான் தெரிகிறது. நீ மறைந்து போகிறாய்.''

மொத்தத்தில் நரசிம்ம சாஸ்திரியும் கூனி சுந்தரியும் மிக்க அன்புடன் உயர்தர முறையில் வாழ்க்கை நடத்தி வந்தார்கள்.

அழகு என்பது அன்பே. உடலில் மெய்யாக நிற்பது குணமே. உடலின் ரூபமும் விருபமும் விவாகமாகும் வரையில்தான். விவாகம் முடிந்து இருவர் உள்ளமும் அன்புடன் கூடியதும் முகமும் உடலும் எங்கேயோ மறைந்து விடும். இந்த உண்மை ஆணுக்கும் ஒன்றே, பெண்ணுக்கும் ஒன்றே. 'அவன் மூக்கைப் பார்', 'அவள் பல்லைப் பார்', 'வாயைப் பார்' என்பதெல்லாம் மற்றவர்களுடைய பேச்சும் தகராறும். அன்பைக் கண்ட தம்பதிகளுக்கு மூக்கும் வாயும் தீர்ந்துபோன விஷயம்.






மறக்க முடியாத மகாநாடு

எஸ்.கே.ரே

ஈடு இணையற்ற பெரிய கூட்டம். பலதரப்பட்ட பறவைகளும் மிருகங்களும் ஒரு புதருக்குப் பின்னால் நடைபெற்ற விலங்கின மகாநாட்டில் ஒன்று திரண்டன. சிங்கம் கர்ஜித்தது. யானை பிளிறியது. குதிரை கனைத்தது. கழுதை கத்தியது. பூனை மியாவ் என்றது. நாய் குரைத்தது. கழுதைப் புலி சிரித்தது. ஆந்தை கூவியது. கழுகு சிறகடித்தது. விரியன் பாம்புகள் சீறின, ஒன்றை யொன்று முத்தமிட்டன. புலியின் கண்கள் பயங்கரமான கோபத்தில் பிரகாசமாய் ஒளிர்ந்தன. கரடி ஊழிக்காலக் கூத்துப் போல் அமர்க்களப்படுத்தி நடனமாடியது. கிரீச்சிடுவதும் கத்துவதும் கூச்சலிடுவதுமாக நீண்ட நேரம் காது செவிடுபடும் அளவுக்கு, பைத்தியமே பிடிக்கும் அளவுக்கு அவை உரக்கச் சத்தம் போட்டன. இது ஒரு விநோதமான கச்சேரியாக இருந்தது. பிரமுகர்கள் பலர் மாநாட்டில் பங்கு கொள்ளவும், பார்வையாளர்களாகவும் வந்து சேர்ந்தனர். போட்டி போட்டுக்கொண்டு ஓடிவந்தனர்; குதித்து வந்தனர்; பாய்ந்து வந்தனர்; துள்ளி வந்தனர்; தலையையும், நாவையும், வாலையும் ஆட்டிக்கொண்டு வந்தனர்.

ரொம்ப ரொம்ப வற்புறுத்தி அந்த மாநாட்டின் நிர்வாகிகள் முன்னங் கால்களைக் கூப்பிக் கேட்டுக் கொண்ட பிறகு சிறிது நேரத்துக்குக் கொஞ்சம் அமைதி நிலவியது. குரங்கு ஒன்று முன்மொழியக் கழுதை அதை ஆமோதிக்க ராஜ கம்பீரமுடைய சிங்கம் தலைமைப் பீடத்தை — உறுதியான அடிமரம் ஒன்றினை— அலங்கரித்தது. சிறிய கர்ஜனை ஒன்றை அழகாக வெளியிட்டது. நீண்ட நேரம் அது













நீடிக்காது போனாலும் அதில் கருத்தாழம் இருந்தது. தன் பேச்சினிடையே சிங்கம் கூறியது: ''தோழர்களே! விலங்குகளின் சரித்திரத்திலேயே மிகவும் குறிப்பிடத் தக்க ஒரு போராட்டம் ஆரம்பமாகி யிருக்கிறது. இதில் நமது உயிர்கள் மட்டும் பணயம் வைக்கப்படவில்லை. நமது காடுகள் இருக்குமா, அழியுமா? நமது தேசம் முழுமையாக நிலைக்குமா? அதில் நமது ஆட்சி நடக்குமா என்பதே கேள்வியாகி யுள்ளது. காட்டு மிருகங்களின் மாட்சிமையும் அவற்றின் வாழ்முறைகளும் இனியும் · நீடிக்குமா அல்லது அழியுமா என்றே பிரச்னை தோன்றியுள்ளது. ஒரு காலத்தில் உலகம் முழுவதுமே நமக்குச் சொந்தமாக இருந்தது. நாம் மனிதனுக்கு ரொம்பக் காலத்துக்குமுன்னதாகவே இவ்வுலகில் தோன்றி யிருந்தோம்.



விஞ்ஞானிகளுக்கு இது தெரியும். ஆனால் மனிதனின் பேராசைக்கும் கொள்ளைக்கும் எல்லையே இல்லாமல் போய்விட்டது. நமது பிரதேசங்களை அவன் வேண்டுமென்றே ஆக்கிரமித்தான். சட்ட பூர்வமாக நமக்குச் சொந்தமான பகுதிகளை நமக்கு இல்லாமல் செய்து, காடுகளில் புகலிடம் தேடிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை நமக்கு ஏற்படுத்தினான். நமது முன்னோர்கள் இந்தக் கானகங்களைப் புதிய சுதந்திரமான நாடாக உருவாக்கித் தந்தனர் நமக்கு. ஆனால் இங்கேயும் நாம் பத்திரமாக வாழ முடிய வில்லை. நாம் இங்கே பயமற்று வாழ்வதை மனிதனால் பொறுக்க முடியவில்லை! சட்டத்தை மீறி வேட்டையாடுவோர் இங்கும் — வன விலங்குகளின் சரணாலயம் என்று வர்ணிக்கப்படுகிற இந்த இடங்களிலும் — ஊடுருவி நம்மைச் சுட்டுத் தள்ளுகிறார்கள். மனிதன் — பொய் சொல்லி ஏமாற்றிப் பிழைப்பவனைக் குறிப்பிடுகிறேன் — நம்மைப் பயங்கர மிருகங்கள் என அழைக்கிறான். ஆனால் கொடுமையிலோ பயங்கரத்தன்மையிலோ காட்டுமிராண்டித் தனத்திலோ நம்மில் யாரும் மனிதனுக்கு ஈடாக முடியாது! நமக்கு ரொம்பப் பசித்தால் ஒழிய நாம் யாரையும் கொல்வதில்லை. என்ன செய்வது, நமது பசியைத் தணிக்க அது ஒன்றே வழி. ஆனால் மனிதனோ, வேண்டுமென்றே, தாறுமாறாக, பணம் பண்ணுவதற்காக அல்லது கொல்வதில் அவன் காணும் இன்பத்துக்காகவே நம்மைச் சுட்டுக் கொல்கிறான். ரத்தம் சிந்தாமலேயே அவன் சுலபமாக, அமைதியாகவும், திருப்தியாகவும் வாழ முடியும். அவன் வாழலாம், வாழ விடலாம்.''

ஒரு புலி இப்போது இடைமறித்துக் கூறியது: ''எங்கள் இனத்தில் இப்போது இரண்டாயிரம் பேர்களே இந்த நாட்டில் எஞ்சி யிருக்கிறோம். மனிதனுடைய கொடுமைக்கும்



லக்ஷ்மி நாராயணன் கோவில் திருப்பணி

திருச்சி ஜில்லா கரூர் தாலுகா, மேலப்பாளையத்தில் எழுந்தருளி யிருக்கின்ற ஸ்ரீ லக்ஷ்மி - நாராயணன் திருக்கோவிலில் ஜீரணோத்தாரணத் திருப்பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. பல ஆண்டுகளுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட இக்கோவில் தற்காலம் கர்ப்பக் கிருஹத்திலும் அர்த்த மகா மண்டபங்களிலும் சிதிலம் அடைந்து, பிளவுகள் ஏற்பட்டு உடனடியாகச் சீர்செய்யப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

ஆஸ்திகர்கள் தங்களால் இயன்ற பொருள் உதவியை அளித்துப் புனருத்தாரணப் பணி ஈடேற ஆவன செய்து எம்பெருமானின் பேரருளைப் பெறப் பிரார்த்திக்கப் படுகிறார்கள். பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ எஸ். ஆர். ரங்கசுவாமி, மேலப்பாளையம் பஞ்சாயத்துத் தலைவர், மேலப்பாளையம், புலியூர் வழி, திருச்சி மாவட்டம்.

மோசமான நடத்தைக்கும் இதுவே ஓர் அளவுகோல்.''

உணர்ச்சி தொண்டையை அடைக்கக் கொம்புடைய காண்டாமிருகம் குறுக்கிட்டது: ''எங்கள் எண்ணிக்கை இதைவிடக் குறைவு. இருநூறுகூட இல்லை. அன்றொரு நாள் சட்டத்தை மீறித் திருட்டுத்தனமாக வேட்டையாடும் ஒரு பைத்தியக்காரன் என் அக்காள் புருஷனைச் சுட்டுக் கொன்று விட்டான். எத்தனையோ சிறந்த மருத்துவ உதவி அளிக்கப்பட்டும் கூடப் பாவம், அவன் தன் மூளையில் பட்ட காயத்தால் இறந்து விட்டான். மனிதன் வேண்டுமென்றே எங்கள் சகோதரிகளில் இலட்சக் கணக்கானவர்களை விதவைகளாக்கி இருக்கிறான்.''

முதலை ஏராளமாகக் கண்ணீர் உகுத்தபடி காண்டாமிருகத்துக்கு ஆறுதல் கூற முன்வந்தது. பிறகு ஓர் இளம் யானை கோபத்தோடு பிளிறியது: ''மனிதன் ஓர் அரக்கன் மட்டுமில்லை; ஏமாற்றுகிறவன். பார்க்க இந்த ஜாண்டு இருக்கிற அவன் எங்களை ஏய்த்துப் பிடித்து அடிமையாக்கி விடுகிறான்.''

ஒரு கழுகு கூச்சலிட்டது: ''இப்போதைக்கு நமக்கு ஒரே ஒரு கொள்கைதான் இருக்க முடியும். விட்டுக் கொடுக்காமல் மனிதனுடன் போராட வேண்டும், நமது வந்தனைக்குரிய நாடு நிச்சயமாக விடுதலை பெறும்வரை!''

ஒரு புறா சப்தித்தது: ''யுத்தங்களை முடித்து வைக்க அவற்றை விடப் பெரிய யுத்தம் என்ற கொள்கை அபத்தம். அது கற்பனையில்தான் நடக்கக்கூடும். மேலும் உலகத்தின் போக்கே இப்போது மாறி வருகிறது. இதுவரை தீவிரமாகச் சண்டை போட்டுக் கொண்டிருந்த நாடுகள் இப்போது புதிய உடன்படிக்கைகளை, ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்கின்றன. அதுபோல் நாமும் முயன்று மனித — மிருக சமாதான ஒப்பந்தம் என்று சுமார் இருபதாண்டு காலத்துக்கு ஒரு நட்புறவு உடன்படிக்கையைச் செய்துகொள்ளக் கூடாதா? வியட்நாம் போர்நிறுத்தத்துக்கு அமெரிக்கா ஒப்புக் கொண்டிருக்கிறது. இந்தியாவும் பாகிஸ்தானும் துருப்புக்களைப் பின்வாங்கிக் கொண்டு ஆக்கிரமித்த பகுதிகளை ஒருவருக்கொருவர் திருப்பிக் கொடுத்துள்ளன. நம் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்திலிருந்து முழுமையாக வெளியேறிவிட வேண்டும் என்று மனிதனை நாம் வற்புறுத்த முடியாதா? வெற்றிகரமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தச் சமாதானச் சூழல் அவசியம்.''

ஒரு நரி எச்சரிக்கும் முறையில் சில வார்த்தைகளைக் கூறியது: ''நாம் செழிப்படைய ஒரு தலைமுறை காலத்துக்கு இங்கு அமைதி தேவை. ஆனால் அந்தச் சமாதானம் கௌரவமான முறையில் வரவேண்டும். நாம் மட்டும் ஒருதலைப்பட்சமாக அமைதியைப் பிரகடனப் படுத்திவிட்டு உத்தேசித்துள்ள உடன்படிக்கையின் ஷரத்துக்களைக் கடைப்பிடிப்பதால் பயனில்லை. அதன் மூலம் மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் இடையில் நடக்கும்—முடிவற்றது எனத் தோன்றும் — இந்த யுத்தத்துக்கு முற்றுப்புள்ளியும் வைக்க முடியாது; நமது இதர பிரச்னைகளும் தீராது. முக்கியமான கேள்வி என்னவென்றால் 'மோசக்காரனை மனிதனை நாம் நம்ப முடியுமா?' என்பது தான். தான் கைப்பற்றிய மிருகங்களை—யுத்தக் கைதிகளை — அவன் வீட்டுவளர்ப்பு மிருகங்கள் என அழைக்கிறான். அவற்றை அவன் நடத்தும் விதத்தைப் பார்த்தால் அதிர்ச்சி அளிப்பதாக இருக்கிறது. பாவம், இந்த மிருகங்கள் அவனுக்காக அளப்பரிய உதவிகளைச் செய்கின்றன. அவனை எதிர்த்து அவை ஆர்ப்பாட்டம் செய்வதில்லை. அதிகச் சம்பளம், போனஸ் என்று தட்டிக் கேட்பதில்லை. இத்தனை அனுசரணையாக இருந்தும் அவற்றுக்குக் கிடைப்பதென்ன? இவன் சாப்பிட்டு முடித்ததும் எஞ்சியுள்ள சில பருக்கைகளே.''

ஒரு குரங்கு வளவளவென்று பேசத் தொடங்கியது: ''இதெல்லாம் உயர்ந்த இனம் என்ற கர்வத்தாலும் அழிவுக்கு வழிகோலும் வகுப்புத் துவேஷத்தாலும் விளைகின்றவை. ராமராஜ்யம் என்பது சமதர்மத்தின் அடிப்படையில், குரங்குகளும் அணில்களும் உள்ளிட்ட எல்லா வகுப்பாரின் ஒத்துழைப்பாலும்தான் ஏற்பட முடியும். மனிதன் ராமாயணம் போதித்த பாடத்தை மறந்து விட்டது பரிதாபம்!''

ஒரு கழுதை கத்தியது: ''மனிதனுக்கும் மிருகத்துக்கும் இடையில் நடக்கும் இந்த யுத்தத்தில் நாம் உடனடியாக எதிர்பார்க்கக் கூடியது சர்வதேச மேற்பார்வையில் ஒரு போர்நிறுத்த ஒப்பந்தம்தான்.''

ஒரு குருவி இரகசியம் பேசுவதுபோல் கிசுகிசுத்தது: ''உலக அபிப்பிராயத்தையும் அகில உலக அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையையும் நாம் புறக்கணிப்பதற்கில்லை. இந்திய அரசு வனவிலங்குகளைக் காப்பாற்ற உதவி கோரி ஐ. நா. சபைக்குச் செய்தி அனுப்பி யிருக்கிறது என்பது சற்று மன ஆறுதல் தருகிறது. இதை அகில இந்திய ரேடியோ 1972ம் ஆண்டு அக்டோபர் 25ந் தேதி செய்தி அறிக்கையில் ஒலிபரப்பியது. ஐ. நா. சபையானது வீட்டு வளர்ப்புப் பிராணிகள் என்று குறிப்பிடப்படுவனவற்றின்


போஸிமி

வழியே

இயற்கையான வழி!

போஸிமி புடவை அணிந்து இயற்கையோடும், பூரண வனப்போடும் இருக்கலாம். உங்களுக்குப் பிடித்தமான புடவையை வண்ண வண்ணக் கலர்களில் பூ வேலை செய்ததும் பூ வேலை செய்யாததுமாக-

நைலான் - ஜார்ஜெட், நைலான் - கிரிம்ப் - ஜார்ஜெட், ரேயான் - ஜார்ஜெட், ரேயான் - கிரேப், மற்றும் பற்பல ரகங்களில் தேர்ந்தெடுங்கள்.



ஏஜண்டுகள் :

M/s. G. L. மிர்பூரி, 137, பீமசேன கார்டன் ரோடு, மைலாப்பூர், சென்னை-4

M/s. Kn. பரமசிவன், 108, தெற்கு ஆவணி மூல வீதி, மதுரை-1

M/s. ரமண்லால் டி. ஷா, 11-25-15, கொத்தபேட், விஜயவாடா

ஹென்னுல்

மீண்டும் கிடைக்கிறது

வெகுகாலமாகவே அமோகமாக விற்பனையாகி வரும் கேசத்தை கருமையாக்கும் சாதனம். உங்கள் கேசத்தை இயற்கையான மற்றும் நிரந்தரமான கருமையுடனும் பளபளப்பாகவும் இருக்கச் செய்கிறது.

உடல்நலக் குறைவினால் ஏற்படும் இளமை நரையைப்பற்றியோ, அல்லது வயோதிகத்தில் ஏற்படும் நரையைப்பற்றியோ கவலையடைய வேண்டாம். **ஹென்னுல்** தற்போது உங்களுக்கு மீண்டும் கிடைக்கிறது. அது உங்களது கேசத்துக்கு இயற்கையான கருமை நிறத்தை அளிப்பதுடன், பூரண ஆரோக்கியத்துடன் இளமையான தோற்றத்தை அளிக்கிறது.

கேசத்தின் அடி வேர்களுக்கு போஷாக்கு அளித்து, செழிப்பாக வளரவும், காலக்கிரமத்தில் கேசம் இயற்கையான கருமையுடன் கூடியதாக இருக்க உதவுமாறும், அனேக பொருட்கள் சேர்ந்து தயாரிக்கப்படுவது **ஹென்னுல்.**

சாதாரணமாக கடைகளில் கிடைக்கும், கேசத்தை கருமையாக்கும் இதர சரக்குகளை போல அல்ல, **ஹென்னுல்.** இது தனித்தன்மை வாய்ந்தது.

1. நிரந்தரமாக நரையை தடுப்பதுடன்; உங்களைப் பல வருடங்கள் இளமையான தோற்றத்துடன் விளங்கச் செய்கிறது.

2. இயற்கையான கருமையுடன் செழிப்பாக புது கேசம் வளர உதவுவதோடு, அதை வலுவடையவும் செய்கிறது.

ஹென்னுல் உபயோகிக்கும் முறை:

ஹென்னுலில் உள்ள, கேசத்துக்கு போஷாக்கு அளிக்கும் சத்துக்கள் கேசத்தின் வேர்க்கால்களில் நன்கு ஊறி, கேசத்துக்கு இயற்கையான கருமை நிறத்தை அளிக்க வேண்டி, போதிய கால அவகாசம் அளிக்க வேண்டும். மூன்று மாத காலம் போதுமானது. இந்தக் கால கெடுவில் கேசம் இயற்கையான கருமை நிறத்தை அடைகிறது. **ஹென்னுல்,** கேசத்தை கருமையடையச் செய்வது மட்டுமல்ல, அது கேசத்திற்கு போஷாக்கும் அளிக்கிறது; கேசத்தை அழகுறச் செய்ய மிகவும் முக்கியமான சாதனம்.

ஹென்னுலை உபயோகிக்க ஆரம்பித்த ஒரு சில வாரங்களிலே ஒரு புதிய மாறுதலைக் காண்பீர்கள். இதற்கு முன்பு காணப்படாத ஒரு பளபளப்புடன் உங்களது கேசம் பிரகாசிக்கும். உங்களது நண்பர்கள் உங்களைக் கண்டு பிரமித்துப் போவார்கள். உங்கள் தன்னம்பிக்கையின் சக்தி வளர்ந்து பல மனிதர்களையும், விஷயங்களையும் நிர்வகிக்கும் திறமையைப் பெறுவீர்கள். எவ்வளவு வயது அடைந்தவராக இருப்பினும், **ஹென்னுல்** கைவசமிருந்தால் கவலை வேண்டாம். உங்களது தொழிலில் மற்றும் சமூகத்தில் வெற்றி வாய்ப்பு நிச்சயம்.

உங்களது கேசம் தொடர்ந்து கருமையாக இருக்க **ஹென்னுலை** வழக்கமாக உபயோகியுங்கள். நீங்கள் தேர்ந்து எடுக்க மூன்று ரக **ஹென்னுல்** உள்ளன. **ஹென்னுல்** (எண்ணெய்) **ஹென்னுல்** (பசையற்றது) **ஹென்னுல்** பொமேட் இந்த மூன்று ரகங்களும், யாவருக்கும் ஏற்றவாறு, வாசனை சேர்க்கப்பட்டுள்ளது. **ஹென்னுல்** (எண்ணெய்) வறட்சியான, மற்றும் சுத்திட்ட கேசத்திற்கு விசேஷமாக ஏற்றது. நீண்டகால நரைக்கு நல்ல பலனளிக்கக் கூடியது **ஹென்னுல்** பொமேட்.

நல்ல பயனை அடைய தலையை சுத்தமாகக் கழுவ வேண்டும். வாரம் இருமுறை பியர்லைன் பாரிஸின் விசேஷ தயாரிப்பான **சில்கோ ஹேர் ஷாம்பு** போட்டுத் தலையை சுத்தம் செய்யுங்கள்.

இன்றே **ஹென்னுல்** வாங்குங்கள். வருங்காலத்தில் இளமையுடன் விளங்குவீர்கள்.

தயவுசெய்து கடிதப் போக்குவரத்தை ஆங்கிலத்தில் வைத்துக் கொள்ளவும்

ஹென்னுல் தயாரித்து வெளியிடுபவர்கள்:

பியர்லைன் - பாரிஸ் பிரைவேட் லிமிடெட், தபால் பெட்டி எண். 493, பம்பாய்-1

Pearline - Paris Private Limited, P. O. Box 493, Bombay -1

நலன்களையும் கவனிக்க வேண்டும். நாம் உடனே அந்த மிக உயர்ந்த ஸ்தாபனத்துக்கு நம் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.''

ஒரு புத்திசாலி ஆந்தை அலறியது: ''மிக உயர்ந்த ஸ்தாபனமாம்! வெட்கக்கேடு! அந்த ஸ்தாபனம் தீர்மானம் நிறைவேற்றும். தீர்மானத்தை உறுதிப்படுத்த மீண்டும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றும். வேறென்ன செய்யும்? மகத்தான சக்தியாக விளங்கும் பெரிய நாடொன்று சம்பந்தப்பட்ட ஏதாவது ஒரு யுத்தத்தை எங்கேயாவது ஐ.நா. விறல் நிறுத்த முடிந்ததா? அது ஐக்கிய நாடுகள் சபையா ? அல்லது ஐக்கியமற்ற நாடுகள் சபையா? அது ஐக்கிய பாவத்துடனும் இல்லை; சர்வதேச அமைப்பாகவும் இல்லை. பல நாடுகள், பல நாட்டவர்கள், பல இனங்கள்—மாபெரும் மிருக, பட்சி இனங்கள் உள்பட—உலக ஸ்தாபனம் என்று வர்ணிக்கப்படுகிற அதில் இன்னும் பிரதிநிதித்துவம் பெற வில்லை.''

பல ஆடுகளும் பன்றிகளும் அப்போது ஒரே சமயத்தில் கத்தின: ''ஐ. நா.வின் பாதுகாப்பு சபை என்ற பெயரிலும் அர்த்தமில்லை தான். நமக்குப் பாதுகாப்பு எங்கே? உலகம் முழுவதும் லட்சோபலட்சம் ஆடுகளும் பன்றிகளும் தினந்தோறும் வெட்டப்பட்டு மனிதனுக்கு உணவாகின்றன. பாதுகாப்பு சபையின் சாப்பாட்டு மேஜையிலேயே இந்தக் கொடுமை தடையின்றி நடக்கிறது!''

கோழிகளும், மனிதனுக்கு உணவாகும் இதர பறவைகளும் இந்தக் கோஷ்டியான எதிர்ப்புக் குரலில் ஒருங்கிணைந்துகொண்டன.

ஒரு சிறுத்தை உறுமியது: ''தொழிலாளி, முதலாளி, மிதவாதி, தீவிரவாதி, சமதர்மவாதி என்று எந்தப் பெயரைச் சூட்டிக்கொண்டாலும் சரி, மனிதனால் தன் அடிப்படை குணத்தை மாற்றிக் கொள்ள முடியாது. அதனால்தான் எல்லா ரிஷிகளும் ஞானிகளும் மனித குலத்தைச் சீர்திருத்தும் முயற்சியில் தோல்வி அடைந்தார்கள். பாவம் ஐ. நா. சபையை மட்டும் தனியே பிரித்துச் சொல்வானேன்? கொல்வதும், கொன்னை அடிப்பதும் மனிதனின் ரத்தத்தில் இருக்கிறது—நமது ரத்தத்திலும் உள்ளது.''

வரலாறு காணாத வகையில் மிக நீண்ட நேரம் நடந்த விவாதத்தில் பலர் பங்கு கொண்டனர். இரண்டு கால் ஜீவன் ஒன்று கிசுகிசுத்தது: ''வெளியே யிருந்து உதவி வராது! சுய நம்பிக்கை, சுய பாதுகாப்பு இவையே நமக்கு வழிகாட்டும் தாரக மந்திரம்!''

நாலு கால் பிராணி ஒன்று மளமளவென்று பேசியது: ''எதிர்காலம் நோக்கி நாம் ராணுவ நடை போட்டுச் செல்கையில் முன்னணியில் 'மிருகங்கள் பெருகட்டும்; மனிதர்கள் குறையட்டும்' என்ற இலட்சிய வாசகத்தை நாம் ஏந்திச் செல்வதைக் காணவே நான் விரும்புகிறேன்.''

எல்லாரும் பேசியதன் சாரத்தைப் பளிச்சென்று எடுத்துரைக்கும் தலைவரின் பேருரை சரித்திர முக்கியத்துவம் பெற்ற இம் மகாநாட்டின் முடிவுரையாக நிகழ்ந்தது. பெரிய சிங்கம் எழுந்தது; கர்ஜித்தது. சட்டென்று ஒரு முடிவுக்கு வந்து கூறியது: ''தேர்தல் மூலமாகவோ, தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலமாகவோ, காதல் வயப்படுவதன் விளைவாகவோ அல்லது இந்த 'இஸம்' அந்த 'இஸம்' காரணமாகவோ மனிதர்கள் தேவதைகளாக மாறிவிடுவார்கள் என்று நினைப்பது பைத்தியக்காரத்தனம். பறவைகளையும் மிருகங்களையும் காக்கச் சிறந்த வழி என்னவென்றால் நாகரிகம் மிக்க நம் போன்றவர்கள் செய்வது போல் மனிதர்களும் ஒருவரையொருவர் அடித்துச் சாப்பிட அனுமதிப்பதுதான் !''

இந்தச் சமயத்தில் வேட்டைக் குழு ஒன்று அங்கே, அருகில் தோன்றியது. ''சுடுங்கள்'' என்று கட்டளை பிறந்தது !

தமிழாக்கம்: **வி. ராஜேந்திரன்**

காந்தீயத்தை ஏற்ற தொழிலதிபர்

''கோத்ரஜ்'' என்ற பெயர் இந்திய மக்களின் நாவில் அன்றாடம் பலமுறை வழங்கப்படுவதாகும். இப்படித் தமது குலத்தின் பெயரை விளங்க வைத்த பிரோஜ்ஷா பி. கோத்ரெஜ் தமது தொண்ணூறாவது வயதில் காலமானார். மேனாட்டு சோப்புகளிலும் பொருள்களிலும் இந்தியர்கள் மனம் ஈடுபட்டிருந்த காலத்தில் அப் பொருட்களுக்கு இணையாகத் தரத்திலும் குணத்திலும் சிறந்து விளங்கும் சுதேசிப் பொருட்களை வழங்கிப் பாரத நாட்டுத் தொழில் துறையில் முதல் ஸ்தானத்தைப் பெற்றார். நல்ல தேசபக்தர். சுதந்திரப் போராட்ட காலங்களில், இயக்கத்துக்குப் பொருளுதவி செய்த வள்ளல். காந்தி மகானின் தர்மகர்த்தா முறையில் தமது தொழில் நிறுவனங்களை நடத்தி வந்தார். தமது ஊழியர்கள் நலனில் அக்கறை கொண்டு வீட்டு வசதித் திட்டம், கல்வி, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம், சுகாதாரத் திட்டம் ஆகியவற்றை அமல்படுத்தினார். பொதுப் பணிகளுக்கு உதவக் கணிசமாக நிதி ஒதுக்கினார். லாபத்தைத் திரும்பத் தொழில் துறையிலேயே போட்டு விரிவுபடுத்தி வேலை வாய்ப்புக்களை அதிகரித்தார்.



பம்பாய் நகரமும் பாரத தேசமும் அமைதி காத்து ஆக்கப் பணியில் ஈடுபட்ட ஒரு நல்ல பிரஜையை இழந்துவிட்டது. அவரது குடும்பத்தாருக்கு நமது அநுதாபங்கள்.

(ஸ்தாபிதம் : 1947)

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

"வீணு விகார்" — 17-A, ஃபிளாங் ரோடு,
ஷண்முகானந்தா ஹாலுக்கு அருகில்
சயான் (கிழக்கு) பம்பாய்-22. D. D.
டெலிபோன்: 471455
தபால் பெட்டி 6759 :: தந்தி: "GROWRICH"

ஏலம் கேட்ட பிறகு டிவிடெண்ட் அடையும் வசதியுள்ள கீழ்க்கண்ட

பிப்ரவரி 1973 புதிய குருப்புகள்

குறுகிய காலம்
25 மாதங்கள் - 25 அங்கத்தினர்கள்
முதல் ஏலத் தேதி : 11-2-73

வகுப்பு	மாதச் சந்தா ரூ.	சீட்டுத் தொகை ரூ.
B	100/-	2,500/-
C	50/-	1,250/-
F	25/-	625/-
G	20/-	500/-

நீண்ட காலம்
40 மாதங்கள் - 40 அங்கத்தினர்கள்
முதல் ஏலத் தேதி : 25-2-73

வகுப்பு	மாதச் சந்தா ரூ.	சீட்டுத் தொகை ரூ.
LTE	500/-	20,000/-
LTF	250/-	10,000/-
முதல் ஏலத் தேதி 18-2-73		
LTG	125/-	5,000/-
LTM	50/-	2,000/-

வேலை நேரம்: காலை 8 மணி முதல் 10-30 வரை; மாலை 4 மணி முதல் 7-30 வரை
வார விடுமுறை : திங்கட்கிழமை

தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
"பாலுஸேரி பில்டிங்ஸ்"
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி : 414 :: சென்னை - 5
கிளைகள் : பெங்களூர் – கல்கத்தா – புது டெல்லி – கோயம்புத்தூர்
இலவசப் பிரகடனத்திற்கு எழுதுங்கள்
சீட்டுகள் ஒதுக்குதல் கம்பெனியின் உரிமையைப் பொறுத்தது

26 YEARS

எங்கள் சேவை உங்களுக்குத்தேவை



12. உள்ளத்தின் ஊஞ்சல்

அவன் அவளைக் கண்டான். அவளுடைய கண்களும் அவனைப் பார்த்தன.

இளமையும் எழிலுணர்ச்சியும் நிரம்பிய காளை அவன்! அவளோ எழிலும் இளமையும் பொங்குகிற அழகுக் கன்னி! போதுமே வினை!

அந்த விநாடியிலிருந்து ஏங்குகிறான் இளைஞன். ஏங்குகிறான், சிரிக்கிறான், கண்ணீர் வடிக்கிறான். ஏதேதோ பிதற்றுகிறான். இதெல்லாம் காதல் என்ற ஜன்னியின் விளைவுகள்!

இதோ பேசுகிறான், கேட்போமா ?

தாதுஅளவி வண்டு
தடுமாறும் தாமரைகொல்!
மாதர் விழிஉலவு
வாள்முகம் கொல் —

[தாது அளவி — மகரந்தப் பொடியில் விழுந்து புரண்டு, அந்தப் போதையினால் மதி மயங்கி. தடுமாறும் — திசை தெரியாமல், கண் மூக்குத் தெரியாமல் இங்குமங்கும் விழுந்து தடுமாறிக் கொண்டிருக்கிற. வாள் முகம் — ஒளி பொருந்திய முகம். வாள்—பிரகாசம். கொல் — வியப்பை வெளியிடுகிற ஓசைச் சொல், அதுவோ இதுவோ என்று!]

இதற்குமுன்பு அந்த இளைஞன் தன்னுடைய ஊர்த் தடாகத்தில் தாமரை மலர்ந்து நிற்பதைச் சூரிய வெளிச்சத்தில் பார்த்திருக்கிறான். அந்தத் தாமரைப் பூவில் தேனைக் குடித்து விட்டு அந்த மயக்கத்தினால் வண்டுகள் மலரில் கிடந்து மகரந்தத் தூளில் அளைந்து தடுமாறி மறுகுவதையும் அவன் கண்டது உண்டு! இப்பொழுது அந்த அழகுக் கன்னியின் ஒளி பொருந்திய தாமரை போலும் முகத்தையும், அந்த முகத்தில் அங்குமிங்கும் மருளுகிற வண்டு போன்ற கரு விழிகளையும் பார்த்தான். இது வண்டு தடுமாறுகிற தாமரையா, அல்லது கருவிழிகள் மருளுகிற முகந்தானா என்று மனத்துக்குத் தடுமாற்றம் ஏற்பட்டு விட்டது ! வண்டுக்கு ஏற்பட்ட மதிமயக்கம் வாலிபனுடைய மனத்துக்கும் உண்டாகி விட்டது !

தாதளவி வண்டு
தடுமாறும் தாமரைகொல்!
மாதர் விழியுலவு
வாண்முகங் கொல் —

ஒரு சமயம் தாமரை என்கிறது புத்தி. இன்னொரு சமயம் இல்லை, அவளுடைய முகந்தான் என்கிறது. உறுதியாகச் சொல்ல முடியவில்லை ! அது போலவே அந்தக் கண்களை வண்டு என்று எண்ணுகிறான். பிறகு விழிகள் என்று ஐயப்படுகிறான்! அவனைச் சொல்வதற்குக் குற்றம் இல்லை. பருவம் செய்கிற வேலை அது !

— யாதென்று
இருபால் கவருற்று
இடைஊசல் ஆடி
ஒருபால் படாதுஎன்
உளம்!

[இருபால் — இரண்டு பக்கமும். கவருற்று— கவரப்பட்டு. இடை ஊசல் ஆடி — இரண்டுக்



கும் இடையிலே ஊஞ்சல் ஆடி. ஒருபால் படாது — ஒரு நிலையில் நில்லாமல் தடுமாறு கிறது. என் உளம் — என் உள்ளம்.]

'இங்கும் அங்குமாக இழுக்கப்பட்டு, இதுவோ அதுவோ, மலரோ முகமோ என்று இரண்டு எண்ணங்களுக்கும் இடையிலே ஊஞ்சல் ஆடுகிறதே ஒழிய, மனம் இன்னும் ஒரு நிலைக்கு வந்தபாடாக இல்லை !


காதலியினுடைய முகம் சூரிய உதயத்தில் மலர்கிற ஒளிமிக்க தாமரைப் பூவைப் போல் இருக்கிறது. அவளுடைய விழிகள் வண்டுகள் போல் கருகரு என்று திரிகின்றன. அந்தக் கரிய விழிகள் அவளுடைய தாமரை முகத்தில் அங்குமிங்குமாகப் புரளுவதானது, வண்டு தேனைக் குடித்துவிட்டுத் தாமரைத் தாதிலே அளாவித் தடுமாறுவது போல் இருக்கிறது— என்பதுதான் பாடலின் கருத்து. ஆனால் இப் படியே, ''காகம் கறுப்பு; கரும்பு தித்திப்பு'' என்பது போல் செய்தி சொன்னால் அதில் ஏது காவியச் சுவை ! காதலனுடைய உள்ளத் துக்குள் பாய்ந்து அவனுடைய ஊஞ்சல் ஆட் டத்தைத் தானும் அப்படியே ஆடிக் காட்டுகிறது செய்யுள். 'கொல்' 'கொல்' என்று வியப்புச் சொல் ஒலித்து அந்தத் தடுமாற்றத்தின் திகைப்புக்கு உயிர் வடிவம் கொடுக்கிறது !

மிகப் பழைமையான ஒரு வெண்பா இது. இலக்கண ஆசிரியர்கள் மேற்கோளாக உதார ணம் சொல்லி அதன் மூலம் நமக்குக் கிடைத்த ஒரு பாட்டு. இதற்கு மேல் இந்தப் பாடலின் வரலாறு நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் ஆழமான இதய வரலாறு ஒன்று பாட்டுக்குள் கிடக்கிறது. ஆழ்ந்த காதல் உணர்ச்சியை, ஒரு காதலனுடைய தடுமாற்றமாகிய மோக வரலாற்றை அதன் கிறக்கத்தை அப்படியே வண்ணச் சித்திரமாக வரைந்து காட்டுகிறது பாடல் !

* **தாதளவி வண்டு**
தடுமாறும் தாமரைகொல்
மாதர் விழியுலவு
வாண்முகங்கொல் – யாதென்று
இருபால் கவருற்று
இடையூசல் ஆடி
ஒருபாற் படாதென்
உளம் !

---

* அட்டைப்படக் கவிதை.



☐ மேற்கு ஜெர்மனியில் Arbeiterwohlfahrt என்ற நமக்குப் பல்லுடைபடும் பெயர் கொண்ட தொழிலாளர் நல ஸ்தாபனம், சமூகத் தில் பின்தங்கியவர்கள், ஊனமுற்றவர்கள் வாழ்வு வளம் பெற உதவி வருகிறது. இந்த ஸ்தாபனத்தினால் 26 மில்லியன் தொழிலாளர்கள் பயன் பெறுகிறார்கள். இதில் மூன்று மில்லியன் அயல் நாட்டுத் தொழி லாளர்களும் அடக்கம்.

☐ இந்தியாவிலுள்ள பதினொரு சமூக சேவை நிலையங்களுக்கு ஒன்றரைக் கோடி ரூபாய் நிதி உதவியிருக்கிறது. மேற்படி தொழிலாளர் நல ஸ்தாபனம். இவற்றில் பம்பாயில் ஸ்ராமிக் மகிளா சபாவும், சென்னை யில் ஸ்திரீ சேவா மந்திரும் முக்கியமானவை. மைசூரில் திபேத்திய அகதி முகாமுக்கும் உதவி வழங்கியுள்ளது.

☐ சென்னை அசோக் நகரில் அமைந்துள்ள ஸ்திரீ சேவாமந்திரின் இருபத்திநாலாவது ஆண்டு விழாவில் கலந்துகொள்ள ஆர்பீட்டர்வல்ப் ஃராட் ஸ்தாபனத்தின் தலைவரும், கீழ் சாக்ஸனி மாநில உதவிப் பிரதம மந்திரியுமான ஸ்ரீ கர்ட் பார்ட்ஸ் அண்மையில் வந்திருந்தார். நற் பணிகள் வளரட்டும். ★

ஆறுவது பூகோள மகா நாட்டைத் தமிழக ஆளுநர் திரு கே. கே. ஷா ஜனவரி 19ந் தேதி தொடங்கி வைத்தார். படத்தில் அவர் கண்காட்சியை ரிப்பன் கத்த ரித்து ஆரம்பித்து வைக்கிறார். இடதுபுறம் திரு எம். பி. ராஜ கோபால். ★




பண்டைக்காலமாக பழனி சித்தர் வைத்தியசாலை உண்மையான முறையான நேர்மையான வைத்திய சேவை புரிகிறது!

வாலிப - வயோதிக - அன்பர்களே!

பழனி சித்தர் மருந்துகளே பாரில் உயர்ந்தது என்பது உலகம் அறிந்த உண்மை!

பிரபல பழனி

வைத்திய திலகம் — வைத்திய ராஜ்



Dr. S. காளிமுத்து

R.M.P. (IND) V.V.C. A.M.I.H.

தங்களின் உடல் மிகவும் பலமில்லாமல் இளைத்து உடல் வலுவில்லாமல் குடும்ப வாழ்க்கையில் நிம்மதியில்லாமல் வயோதிகரைப்போல் களைப்பு மேலிட்டு வேலைகளைச் சரிவர செய்ய இயலாமை—இதனால் கஷ்டப்படுகிறீர்களா? வாலிப வயதில் தெரிந்தும், தெரியாமலும் செய்கிற தவறுதல்களே, இப்போது உடல் கெட்டு பலனமடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி, உஷ்ணம், சோம்பல், கைகால் அசதி, பலகீனம், உடல்வலி, களைப்பு, தூக்கக் குறைவு, ஆயாசம் பீதி, வெட்கம், பயம், வெறுப்பு உண்டாகி தாய் தந்தையரிடமும் மற்றவர்களிடமும் சொல்ல முடியாமல் மன வேதனையும் கஷ்டமும் அடைந்து, நிம்மதியில்லாமல் வாழ்கிறார்கள். மேற்படி காரணங்களால் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களும், கவலைப்படவேண்டாம், இம்மாதிரியான வியாதியஸ்தர்கள் 74 வருட அனுபவம் பெற்ற நமது சாஸ்த்ரீய முறையான மிக உயர்தரம், உயர்தரம், முதல் தரம், இரண்டாந்தரம் எதுவாகிலும் சாப்பிட்டாலே எடை அதிகப்பட்டு, இரத்த விருத்தியுடன் உடல் பலமடைந்து புதிய சக்தி, புத்துணர்ச்சி பெற்று நிம்மதியான வாழ்க்கை வாழலாம். எவ்விதமான பத்தியமும் இல்லை, ஆர்டரில் தேவைப்பட்ட மருந்தின் விலைகளைக் குறிப்பிட்டு எழுதவும். வி.பி.பி. தபால் பார்சலில் பெற இன்றே எழுதுங்கள். சென்னையிலும், பழனியிலும், கேம்புகளிலும் நேரில் பெறலாம். மருந்தும் விருந்தும் மூன்று நாள் என்பது பழமொழி. மருந்து உபயோகிக்கும்பொழுதே பலனைக் காணலாம். வி.பி.பி. செலவு இலவசம். வெறும் கடிதம் கவனிக்க இயலாது சித்த வைத்திய மருந்துகளும், பழனி மருந்துகளும் நல்ல பயன் தரும் என்பதை அறியவும்.

ஒரு மாதம் சிகிச்சை மருந்துகள்: மிக உயர்தரம் ரூ 90

உயர்தரம்: ரூ. 42. முதல் தரம் ரூ. 33. இரண்டாந்தரம்: ரூ. 24

எங்கள் மாபெரும் வெற்றிகரமான மாதாந்திர சுற்றுப்பயண தேதி விலாசங்கள் கவனிக்கவும்

கிளை: 41, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை - போன்: 21448

சென்னைக் கிளை ஆபீஸில் 1ந் தேதி முதல் 7 வரை: மீண்டும் 15ந் தேதி முதல் 21 வரை நேரில் விஜயம்

GOVT REGD. T. M. No. 204341 — REGD. 15443

வைத்திய திலகம் வைத்திய ராஜ் டாக்டர் S. காளிமுத்து

பழனி சித்தர் வைத்தியசாலை (K) பழனி S. I.

போன்: 316 (தியேட்டர் ஸ்ரீ ரங்கராஜா பக்கம்) தந்தி: சித்தர்

வளரும் குழந்தைகளுக்கு
இனிய போர்ன்விடா !





சக்தி வளரட்டும்! பள்ளியிலும் விளையாட்டிலும். இன்றும் என்றுமே, வெற்றி அவனுக்கே. ஆம்! அவன் சுவைத்துப் பருகுவது போர்ன்விடா. ஊட்டமளிக்கும் **கோகோ**, பால் மால்ட், சர்க்கரை இவை இனிதே கலந்திட்ட போர்ன்விடாவிலே அடங்கி யுள்ளது அவனுடைய ஒளிமிக்க எதிர்காலம்.

SHB-7379-TH

சக்திக்கும் வலிமைக்கும்—மற்றும் தீஞ்சுவைக்கும் காட்பரிஸ் போர்ன்விடா!



சத்திய வெள்ளம்

நா. பார்த்தசாரதி

முப்பத்தொன்றாவது அத்தியாயம்

வழக்கமாகப் பல்கலைக் கழக விடுதிகளுக்குத் தினசரிப் பத்திரிகைகளும், பிற சஞ்சிகைகளும் போட வரும் சைக்கிள் கடைப் பையனுக்குப் பதில் அன்று காலை அண்ணாச்சியே பத்திரிகை விநியோகிக்க வந்தவுடன் பாண்டியனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏதாவது தலை போகிற காரியம் இருந்தாலொழிய அண்ணாச்சி பல்கலைக் கழக எல்லைக்குள் தாமே புறப்பட்டு வரமாட்டார் என்பது பாண்டியனுக்குத் தெரியும். கையில் பிரித்த பத்திரிகையோடும் ''கதிரேசன் மோசம் போயிட்டான், தம்பி!'' என்ற சொற்களோடும் பாண்டியனின் அறைக்குள் நுழைந்தார் அண்ணாச்சி. தன்முன் பிரித்து நீட்டிய செய்தித் தாளில் அவர் சுட்டிக்காட்டிய பகுதியைப் படித்ததுமே பாண்டியனுக்குப் பகீர் என்றது. அவன் அதிர்ச்சி அடைந்தான்; திகைத்தான்.

பத்திரிகையில், 'எஸ்டேட் அதிபர் கொலை செய்யப்பட்டார். தீவிரவாதிகளைப் போலீஸார் தேடுகின்றனர். இரத்த வெள்ளத்தில் தீவிரவாதிகளின் பிரசுரங்கள் சிதறப்பட்டிருந்தன' — என்று நாலு பத்திக்குத் தலைப்பு இட்டுச் செய்தியைப் பிரசுரித்திருந்தார்கள். மல்லிகைப் பந்தலிலிருந்து பத்தாவது மைலில் இருந்த அந்த எஸ்டேட் அதிபரை அவருடைய எஸ்டேட் விருந்தினர் விடுதியில் வைத்துக் கொலை செய்த தீவிரவாதிகள் — 'புரட்சிப் பூக்கள் இரத்த வெள்ளத்தில் தான் பூக்க முடியும்' — என்ற தங்கள் துண்டுப் பிரசுரத்தைக் கொலையுண்டவரின் உடலைச் சுற்றிலும் தூவிவிட்டுத் தப்பி ஓடித் தலை மறைவாகிவிட்டார்கள் என்றும் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் என்று கருதப்படும் கதிரேசன், வடிவேல், மலையாண்டி ஆகிய பல்கலைக் கழக மாணவர்களையும், பிச்சைமுத்து என்கிற டிரில் மாஸ்டரையும் போலீஸார் தேடி வருகிறார்கள் என்றும் செய்தி கூறியது.

''இன்னிக்கு விடியக் காலம்பற ராயல் பேக்கரி மாடிக்குத் தேடி வந்து அந்த ஆர்டிஸ்ட் குமரப்பன் அறையைச் சோதனை போட்டுப் போலீஸ்காரங்க அவரைப் பிடிச்சுக்கிட்டுப் போயிட்டாங்க.....''

''கதிரேசனும், பிச்சைமுத்துவும், மத்தவங்களும் யூ. ஜி. (அண்டர் — கிரௌண்ட்) ஆயிட்டாங்க போலே இருக்கு.....!''

''தப்பிக்கிறது கஷ்டம்! எப்பிடியும் பிடிச்சுடுவாங்க.... போலீஸ்காரங்க மலையை வலை போட்டுத் தேடிக்கிட்டிருக்காங்க.....''

''கொலை செய்யப்பட்ட எஸ்டேட் அதிபர் ஆளும் கட்சிக்கு ரொம்பவும் வேண்டியவர். பெரிய லட்சாதிபதி. மல்லை இராவணசாமிக்குச் சொந்தக்காரர்.......''

''ஆனா அவர் ரொம்ப மோசமான ஆளுதான். யூனியன் கினியன்னு புறப்பட்டு வேலை செஞ்ச தொழிலாளிங்களையெல்லாம் காதும் காதும் வைச்சாப்பிலே ஆள் ஏவித் தீர்த்துக் கட்டியிருக்காரு. தேயிலைக் கொழுந்து பறிக்க வார பொம்பிளைகளிலே சின்னஞ் சிறிசுகளைப் படாத பாடு படுத்தியிருக்காரு...... ஆனாலும்....?''

''நியாயமும், தீர்ப்பளிக்கும் பொறுப்பும் தங்கள் கைகளில் இருப்பதாகக் கதிரேசன் குழுவினர் தீர்மானித்துவிட்டார்கள் போலிருக்கிறது.....''

—இதற்குள் செய்தி விடுதியின் மற்ற அறைகளுக்குப் பரவிவிடவே அண்ணாச்சி, பாண்டியன், பொன்னையா ஆகியவர்களை மற்ற அறைகளின் மாணவர்கள் வந்து சூழ்ந்து மொய்த்துக் கொண்டு விட்டார்கள்.

''கதிரேசன் முதலியவர்கள் செய்ததில் தவறு என்ன? தீயவர்கள் அழிய வேண்டியதுதானே நியாயம்?'' என்று கேட்டான் ஒரு மாணவன்.

''நம்முடைய சமூக நியாயங்களைக் காப்பாற்றும் முறைகளும் நியாயமான

வையாக இருக்க வேண்டியது மிக மிக அவசியம். முறை கேடான வழியில் போய் முறைகளைக் காப்பாற்ற முடியாது. ஒரு சத்தியாக்கிரகிக்குத் தன்னைக் கொன்று போட்டாலும் பொறுத்துக் கொள்ளும் மனோதிடமும் பொறுமையும் வேண்டும் என்கிறார் காந்தி'' என்று பாண்டியன் அவனுக்கு மறுமொழி கூறினான். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த பின் மற்ற விடுதி அறைகளுக்கும், விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள் வீடுகளுக்கும் தினசரிகள், சஞ்சிகைகளைப் போட்டுவிட்டுக் கடைக்குத் திரும்பினார் அண்ணாச்சி. மனம் கவலையில் ஆழ்ந்து எந்த வேலையிலும் லயிக்காமல் இருந்தார் அவர். கதிரேசன் இப்படி வேகமாக மாறுவான் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. தன்னுடைய வாலிபத்தில் காந்தி என்ற பேரொளி தன்னை மாற்றிப் பண்படுத்தியதுபோல் அல்லாமல், அடுத்த தலைமுறையாகிய இந்தத் தலைமுறையை வேறு கடுமையான வழிகளே கவர்ந்து மாற்றுவதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி அவர் மனம் விரைந்து சிந்தித்தது. இளைஞர்களில் ஒருசாரார் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பது போல் ஹிப்பிகளாக மாறுவதையும், மற்றொரு சாரார் இரத்த வெள்ளத்தை ஓடச்செய்துதான் சமூகத்தைத் திருத்த முடியும் என்கிற அளவு கடும் புரட்சிக்காரர்களாக மாறுவதையும், இரண்டு எல்லைகளுக்கும் நடுவே சைலண்ட் மெஜாரிட்டியாகப் பல இளைஞர்கள் நிதானமாக இருப்பதையும் அவர் கண்ணாரக் கண்டார். அவருக்கு ஆச்சரியமாகக்கூட இருந்தது. கதிரேசனின் குடும்பமும் ஒரு பரம்பரைப் பணக்காரக் குடும்பந்தான். ஊரிலேயே பெரிய ஆட்டோமொபைல் ஸ்பேர் பார்ட்ஸ் கடையும் வேறு இரண்டொரு ஏஜன்ஸி வியாபாரங்களும் கதிரேசனின் தந்தை அர்த்தநாரிக் கவுண்டருக்குச் சொந்தமாக இருந்தன. அர்த்தநாரிக் கவுண்டர் மல்லிகைப்பந்தல் நகரின் பரம்பரைப் பணக்காரராகவும் பெரிய மனிதராகவும் விளங்குகிறவர். அவருடைய மகனை அவருக்கே பிடிக்காத தீவிர சித்தாந்தங்கள் வசியப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கிறது என்பதை நினைத்தாலே புதுமையாகவும், வியப்பாகவும் இருந்தது. வங்காளத்திலும், ஆந்திராவிலும், கேரளத்திலும் கூடப் பல பெரிய குடும்பத்துப் பிள்ளைகள் சமூகத்தின் மேல் உள்ள கோபங்களால் இப்படி மாறியிருப்பதாகக் கேள்விப்பட்டிருந்ததை நினைவுகூர்ந்தார் அண்ணாச்சி. தமக்குத் தெரிந்து அந்தப் பல்கலைக் கழக மாணவர்களிடையே திறக்கப்படாமல் இருந்த ஒரு புதிய வாயில் இப்போது திறக்கப்படுவதை வருத்தத்தோடும், கழிவிரக்கத்தோடும் புரிந்து கொண்டு கண் கலங்கிய அண்ணாச்சி கடைமுகப்பில் யாரோ வந்து நிற்கவே கவனம் கலைந்து திரும்பினார்.

எதிரே இரண்டு சி. ஐ. டி.க்கள் வந்து நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லை என்றாலும் அண்ணாச்சிக்கு அவர்களைத் தெரிந்திருந்தது. கதிரேசன் அவருடைய கடைக்கு வருவது உண்டா என்றும், அவன் என்னென்ன பத்திரிகைகள் வாசிப்பது வழக்கம் என்றும், எங்கெங்கே அவனுடைய நண்பர்கள் இருக்கிறார்கள் என்றும் அந்த இரகசியப் போலீசார் விசாரித்தார்கள். அண்ணாச்சியிடம் அனுமதி பெற்ற பின் அவருடைய கடையின் உட்பகுதியிலும் புகுந்து சோதனை யிட்டார்கள். கதிரேசன் சம்பந்தமான தடயம் எதுவும் அவர்களுக்கு அங்கே கிடைக்கவில்லை. சோதனைகளை



முடித்துக் கொண்டு போவதற்கு முன் கதிரேசனும் பிச்சைமுத்துவும், மற்ற மாணவர்களும் தலைமறைவாகி இருக்கும் இடம் தெரிந்தால் சொல்லிவிடும்படி அண்ணாச்சியிடம் வற்புறுத்தினார்கள்.

''எனக்குத் தெரியாதுங்க! நான் காந்தி பக்தன். அந்தத் தம்பி என் கடைக்கு வரது போறதை நிறுத்தி ரொம்ப நாளாகுதுங்க. நான் சாமி சத்தியமா நெஜத்தைச் சொல்றேன்'' என்றார் அண்ணாச்சி. அவர் சொல்லியதை நம்பி ஏற்றுக் கொண்டது போன்ற பாவனையில் போகத் தொடங்கியவர்கள் மறுபடி ஏதோ சந்தேகம் கொண்டாற்போல் திரும்பியும் வந்தார்கள். கேட்டார்கள்:

''பல்கலைக் கழக மாணவர்களுக்கு நீர் சிலம்பம் சுற்றச் சொல்லிக் கொடுக்கிற வழக்கம் உண்டா இல்லையா?''

''உண்டுங்க! ஆனா எல்லா மாசத்திலியும் இங்கே சிலம்பப் பள்ளிக்கூடம் நடக்காது... யூனிவர்ஸிடி திறந்ததும் ஒரு மாசம் ரெண்டு மாசம் நடக்கும். அப்பாலே மழை காலம் தொடங்கினால் அது நடக்காது. மறுபடி மார்ச் ஏப்ரல்லேதான் நடக்கும். அப்ப பரீட்சை சமயம்கிறதுனாலே பையன்க அதிகமா வரமாட்டாங்க... இந்தச் சிலம்பப் பள்ளிக்கூடத்தை நாங்க ஒரு 'ஜிம்னாஸியம்' மாதிரிதான் நடத்தறோமே தவிர, வேறொண்ணுமில்லே...''

''பல்கலைக் கழக மாணவர் யூனியன் காரியதரிசிக்கும் கதிரேசனுக்கும் சிநேகிதம் எப்படி?''

''யாரைக் கேட்கிறீங்க...?''

''அதான் அந்தப்பையன் பாண்டியனுக்கும் கதிரேசனுக்கும் பழக்கம் இருக்குமே?''

''இருக்காதுங்க. பாண்டியனுக்கும் கதிரேசனுக்கும் மனசு பிடிக்காமே சிநேகிதம் விட்டுப் போயி ரொம்ப நாளாச்சு. ஒருத்தருக்கொருத்தர் பேச்சு வார்த்தை கூடக் கிடையாது... எனக்கு நல்லாத் தெரியும்...''

''அதெப்படி? பாண்டியன்தானே மொதல் மொதல்லே கதிரேசனைப் பிச்சைமுத்துவைப் பார்க்கச் சொல்லி நிலக்கோட்டைக்கு அனுப்பிச்சான்? இல்லியா?''

''எனக்கு அது தெரியாதுங்க... ஆனா சமீப காலமாக் கதிரேசனுக்கும் பாண்டியனுக்கும் மனசு பிடிக்கலேன்னு மட்டும் தெரியுங்க...''

அவர்கள் கேட்டு விட்டுப் போய்ச் சேர்ந்தார்கள். அண்ணாச்சி இப்போது பாண்டியனை நினைத்துக் கலங்கினார். பாண்டியன், கண்ணுக்கினியாள் ஆகியோர் மேல் மாணவர் இயக்கங்களின் தலைவர்கள்



என்று காரணத்தால் போலீஸ், இராவணசாமி, துணைவேந்தர் ஆகியோருக்கு இருக்கும் மனத்தாங்கல்களால் அவனுக்கு ஒரு சிறிதும் சம்பந்தமே இல்லாத இந்தக் கொலை வழக்கில் அவனை மாட்டி வைத்து விடுவார்களோ என்று அஞ்சினார் அண்ணாச்சி. பாண்டியனை உடனே எச்சரிக்க வேண்டியது அவசியம் என்று அவருக்குத் தோன்றியது. கதிரேசன் தீவிரவாதியாக மாறிப் பாண்டியன் முதலியவர்களை அலட்சியப்படுத்தத் தொடங்கிய பின்னரும்கூடப் பாண்டியனுக்குக் கதிரேசன் மேலிருந்த பழைய நட்பும் பிரியமும் விடவில்லை என்பது அண்ணாச்சிக்குத் தெரியும். பாண்டியனைக் காப்பாற்றவே அவர் போலீஸாரிடம் பொய் சொல்லியிருந்தார். இதே போலீஸார் பாண்டியனிடம் நேரில் போய் விசாரிக்கும்போது அவன் விவரம் தெரியாமல், ''நானும் கதிரேசனும் கொள்கைகளில் வேறுபட்டாலும் இன்றுகூட அவன் என் பிரியத்துக்குரிய நண்பன்தான்'' என்பதாக ஏதாவது உளறி வைக்கப் போகிறானே என்றெண்ணிப் பயந்தார் அண்ணாச்சி. ஒரு தந்தையின் பாசத்தோடும் அக்கறையோடும் பாண்டியனைப் பற்றிக் கவலைப்பட்டார் அவர். கதிரேசன் பல நாட்களுக்கு முன் ஒரு மாலை வேளையில் பிச்சைமுத்து தனக்குக் கொடுத்திருந்த சேகுவேராவின் வரலாறு, கொரில்லா இயக்கம் பற்றிய சில புத்தகங்கள் ஆகியவற்றைத் தன் கடையில் வைத்துப் பாண்டியனிடம் கொடுத்து, ''பாண்டியன்! இந்தப் புத்தகங்களை நீ அவசியம் படித்துப் பார்க்க வேண்டும்'' என்று சொல்லியதை இப்போது நினைத்தார் அண்ணாச்சி. அப்படிக் கதிரேசன் கொடுத்த புத்தகங்களில் எதையாவது பாண்டியன் தன் அறையில் இன்னும் வைத்திருந்து அதன் காரணமாகப் போலீஸாரிடம் மாட்டிக் கொள்ள நேர்ந்துவிடப் போகிறதே என்று அண்ணாச்சியின் மனம் பதறியது. கதிரேசன் பாண்டியனிடம் பிச்சைமுத்துவின் புத்தகங்களைக் கொடுத்த தினத்தன்று அவனுக்கும் பாண்டியனுக்கும் நிகழ்ந்த உரையாடலைக்கூட மீண்டும் நினைவுகூர்ந்தார் அண்ணாச்சி. பாண்டியன் கதிரேசனிடமிருந்து புத்தகங்களை வாங்கிக் கொள்ளும்போது சொன்னான்: ''எனக்கு உடன்பாடில்லாத நூல்களையும் நான் படிக்க முடியும். படிப்பதனாலேயே அவற்றை நான் ஏற்றுக்கொண்டு விடுவேன் என்று நீ நினைத்துக் கொண்டு விடாதே கதிரேசன்!''

''அதைப் பற்றி எனக்கு அக்கறையில்லை பாண்டியன்! சாத்வீகமும், காந்தியமும் இனி இந்த நாட்டுக்குப் பயன்படாத அளவு மூத்துத் தளர்ந்து விட்டன....''

''அது உன் கருத்து. நான் அதை ஏற்க மாட்டேன்.'' உண்மைக்கு என்றுமே மூப்பு இல்லை. உண்மை மூப்படைவதோ தளர்வதோ அழிவதோ கிடையாது. பொய்தான் மூப்படையும், தளரும், அழியும். உண்மையோ மூப்படைய மூப்படைய இளமை பெறும். அதனால்தான் பாரதியார்கூட 'மூத்த பொய்கள்' என்று பாடினார். நீ மனத்தினால் மூப்படைந்து விட்டாய். நீ மனத்தினால் தளர்ந்து விட்டாய்! அதனால்தான் காந்தியமே மூத்துவிட்டதாகவும் தளர்ந்துவிட்டதாகவும் உனக்குப் படுகிறது கதிரேசன்!'' என்று அப்போது பாண்டியன் கதிரேசனை மறுத்திருந்ததை நினைத்தபோது அண்ணாச்சிக்குத் திருப்தியாக இருந்தது. கடைப் பையனை அனுப்பி விட்டுப் பழைய நிகழ்ச்சிகளை நினைத்தபடி பாண்டியனை எதிர்பார்த்துக் காத்திருந்தார் அண்ணாச்சி. நேரம் ஆகிக் கொண்டிருந்தது. பாண்டியன் வரவில்லை.

* * *

பல்கலைக் கழக எல்லையில் அன்று காலையிலிருந்தே கெடுபிடிகள் அதிகமாயிருந்தன. பெண்கள் விடுதியில் கண்ணுக்கினியாள் உட்படச் சில மாணவிகளின் அறைகள் கூடச் சோதனைக்கு ஆளாயின. மாணவர்கள் விடுதியில் பாண்டியன், மோகன்தாஸ் முதலிய பலருடைய அறைகள் போலீஸாரின் சோதனைக்கு உட்பட்டன. பொருளாதாரப் பேராசிரியர் பூதலிங்கத்தின் வீடும் சோதனை செய்யப்பட்டது. துணைவேந்தர் இந்த நிகழ்ச்சியைச் சாக்காக வைத்துத் தமக்கு வேண்டாத ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோரையும் கதிரேசனுக்கு வேண்டியவர்கள் என்று இரகசியமாகப் பட்டியல் போட்டுப் போலீஸாரிடம் கொடுத்திருந்தார். பல்கலைக் கழகக் காம்பஸுக்குள் வரவும் சோதனையிடவும், விசாரிக்கவும் போலீஸுக்கு அநுமதியும் வழங்கியிருந்தார். பேராசிரியர் பூதலிங்கத்தின் வீட்டில் சோதனை நடந்தபோது அவர் வீட்டில் இல்லை. பல்கலைக் கழகத்துக்குப் போயிருந்தார். 'ஆண்கள் யாரும் வீட்டில் இல்லை! அப்புறம் வாருங்கள்' என்று பூதலிங்கத்தின் மனைவி எவ்வளவோ மன்றாடியும் கேட்காமல் போலீஸார் உள்ளே நுழைந்து துணிமணிகள் வைத்திருந்த பீரோ உட்படக் கலைத்

ஆல்போ-ஸாங்



எல்லா வயதினருக்கும் ஒரு சிறந்த டானிக்

உங்களுடைய உடல் வளர்ச்சிக்கு ஆல்போ-ஸாங் அவசியம் தேவை. ஏனெனில் இளையோர் முதியவர்கள் எல்லோருடைய ஆரோக்கியத்திற்கும் உடல் வளர்ச்சிக்கும் தேவையான விசேஷப் பொருள்கள் ஆல்போ-ஸாங்கில் இருக்கின்றன.



ஜே. அன் ஜே. டிஷேன்
ஹைதராபாத் (டெக்கான்)



தலைவலி • ஃப்ளு • பல்வலி • உடல்வலி முதலியவற்றை உடனடியாகக் குணப்படுத்த

ஸலோஃபென்

வலி நிவாரண மாத்திரை

அமிர்தாஞ்சன் லிமிடெட் தயாரிப்பு


ஏனெனில் ஸலோஃபென் மாத்திரைகள் டாக்டர்கள் சிபாரிசு செய்யும் மருத்துவ முறைப்படித் தயாரிக்கப்பட்டவை.

ஸலோஃபென்
இருக்குமிடத்தில்
வலி இருக்காது!



FDSAS-1808 TM

ஆயத்தமாக இருங்கள்!




ஃபாஷனுடன் கைகோத்து நிற்கிறது வலிமை!

இப்போது ஃபாஷனோடு கூடிய மிதியடிகளில் வலிமை இணைந்துள்ளது. உதாரணமாக ஸி.எஸ்.ஸி.யின் கேப்டன் மார்வெல். இது பார்வைக்கு ஒயிலானது, அணிவதற்கு மென்மையும் இதமும் மிகுந்தது, எனினும் வலிமையும் நீண்டகால உழைப்பாற்றலும் பெற்றது!

இன்றே அருகமைந்த ஸி.எஸ்.ஸி. விற்பனையாளரிடம் ஸி.எஸ்.ஸி.யின் புதிய தினுசுகளிலிருந்து உங்களுக்குப் பிடித்தவற்றைத் தேர்ந்தெடுங்கள்!

மிகுந்த சிக்கனம், தகுந்த இதம்—
அதுவே ஃபாஷனோடு இணைந்த சுகம்!



கேப்டன் மார்வெல்

C.S.C. FOOTWEAR

தயாரிப்பாளர்கள்:
கரோனா ஸாஹு கோ. லிட்.
பதிவு அலுவலகம்:
221, தாதாபாய் நவ்ரோஜி ரோடு,
பம்பாய்-1

AIYARS-CSC.269 TM

தெறிந்து விட்டுப் போயிருந்தார்கள். பூஜை அறையைக் கூட விடவில்லை. பூட்ஸ் காலோடு உள்ளே நுழைந்து, பூஜை அறையையும் குடைந்து தள்ளித் தாறுமாறுக்கி யிருந்தார்கள். மாணவர்களோடு கனிவாகப் பழகுகிறவர்கள் என்று பெயர் பெற்ற வேறு நாலைந்து பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் வீடுகளும் இதே கதிக்கு ஆளாயின. பகலுக்கு மேல் அன்று வகுப்புக்கள் நடக்கவில்லை. பிற்பகலில் துணை வேந்தர் செனட் ஹாலில் அவசர அவசரமாக எல்லாப் பிரிவு டீன்களும், பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் அடங்கிய ஸ்டாஃப் கவுன்சிலைக் கூட்டியிருந்தார். பகலில் வீட்டுக்குச் சென்றிருந்த பேராசிரியர் பூதலிங்கத்துக்கும் மற்ற ஆசிரியர்களுக்கும் தங்கள் தங்கள் வீடுகளில் புகுந்து போலீஸார் செய்த அட்டூழியம் தெரிய வந்தது. அடக்க முடியாத ஆத்திரத்தோடு ஸ்டாஃப் கவுன்ஸில் கூட்டத்துக்குப் போயிருந்தார்கள் அவர்கள்.

''நண்பர்களே!'' என்று ஆரம்பித்து ஏதேதோ மழுப்பலாகத் துணை வேந்தர் பேசிக் கொண்டிருந்தபோது பேராசிரியர் பூதலிங்கம் ஆத்திரத்தோடு எழுந்து குறுக்கிட்டார்:

''பல்கலைக் கழக மாணவர்களைக் கூர்ந்து கவனித்துத் தீவிரவாதிகள் பற்றி உங்களிடமோ ரிஜிஸ்திராரிடமோ இரகசியமாக ரிப்போர்ட் செய்யச் சொல்லி எங்களுக்கு யோசனை கூறுவதற்காகவே இன்று ஸ்டாஃப் கவுன்ஸிலை அவசரமாகக் கூட்டி யிருக்கிறீர்கள். அதே சமயம் மாணவர்களை ஏற்கெனவே கூர்ந்து கவனித்துப் பழகுகிற ஆசிரியர்கள் வீட்டில் போலீஸார் 'ரெய்ட்' நடத்த அனுமதித்திருக்கிறீர்கள். நீங்கள் சொல்வதைக் கேட்க ஆரம்பித்தால் எல்லா ஆசிரியர்கள் வீட்டிலும் அப்புறம் போலீஸ் 'ரெய்ட்' நடந்தாலும் நடக்கும்...''

''ஐ யாம் ஸாரி... நீங்கள் இதற்கு இப்படி வியாக்கியானம் செய்ய ஆரம்பித்தால் நான் என்ன செய்யமுடியும்?'' என்று கேட்டுவிட்டு மழுப்பலாக நாலு வார்த்தைகள் சொல்லி ஸ்டாஃப் கவுன்சில் கூட்டத்தை முடித்து விட்டார், துணை வேந்தர். பகல் மூன்றரை மணிக்கு ஸ்டாஃப் கவுன்சில் கூட்டம் முடிந்ததும், மாணவர் பிரதிநிதிகள், மாணவர் பேரவைத் தலைவன் மோகன்தாஸ், செயலாளன் பாண்டியன் முதலியவர்களைத் தம் அறைக்குக் கூப்பிட்டனுப்பினார் துணை வேந்தர். அப்போது துணை வேந்தரோடு மதுரையிலிருந்து வந்திருந்த டி.ஐ.ஜி., இரண்டு இரகசிய போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் ஆகியோரும் உடனிருந்தார்கள்.

''போலீஸார் கதிரேசன் வீட்டில் கைப்பற்றிய அவனுடைய டைரியில் பல இடங்களில் உன் பெயரும், மோகன்தாஸ் பெயரும் குறிப்பிடப் பட்டிருக்கிறதாம். உங்களைக் கதிரேசன் அடிக்கடி சந்திப்பது உண்டென்றும் அந்த டைரியிலிருந்து தெரிகிறது என்கிறார்கள். அந்தத் தீவிரவாதிகள் தலைவர் பிச்சைமுத்துவைக் கதிரேசன் முதலில் சந்திக்கும்படி செய்தது நீதானாமே?'' என்று துணைவேந்தர் கேட்டார்.

''இன்று இரவு டைரி எழுதும்போது நான்கூட என் டைரியில் உங்களைச் சந்தித்ததாக எழுதுவேன் சார்! அதற்கு அர்த்தம் நீங்கள் செய்கிற காரியங்களுக்கெல்லாம் நான் பொறுப்பு என்றே, நான் செய்கிற காரியங்களுக்கு எல்லாம் நீங்கள் பொறுப்பு என்றே ஆகி விடாதே? நிலக்கோட்டைக்கு நாங்கள் கதிரேசனை அனுப்பும்போது பிச்சைமுத்துவைச் சந்திக்க என்று அனுப்பவில்லை. தற்கொலை செய்து கொண்ட மருத்துவக் கல்லூரி மாணவி மேரிதங்கத்தின் பெற்றோரைச் சந்திக்கத்தான் அனுப்பினோம். அங்கே தற்செயலாக அவன் பிச்சைமுத்துவைச் சந்திக்க நேர்ந்திருக்கிறது...''


''அந்தப் பிச்சைமுத்து கனு சன்யால், சாரு மஜூம்தார் போன்றவர்களோடு தொடர்பு உடையவர்; சென்ற கோடை விடுமுறையில் அவர் மேற்கு வங்காளத்தில் நடந்த ஒரு தீவிரவாதிகள் முகாமுக்கு இரகசியமாகப் போய் வந்தவர் என்பதெல்லாம் உனக்குத் தெரியுமா?''

''எனக்குப் பிச்சைமுத்துவையே தெரியாதே; அவரைத் தெரிந்தால்

சத்திய வெள்ளம்



உண்மைக்கு என்றும் மூப்பு இல்லை. உண்மை மூப்படைவதோ, தளர்வதோ, அழிவதோ கிடையாது. பொய் தான் மூப்படையும். தளரும். அழியும். உண்மையோ நாளாக நாளாகத்தான் இளமை பெறும்.



" அரசு பஸ்களையெல்லாம் கொண்டு வந்து, 'ஸ்டார்ட்' பண்ணி ஏன் புகையைக் கிளப்பிக்கிட்டிருக்காங்க ?''

''நம்ம மந்திரியின் மாமனார் தயாரிக்கிற சினிமாவில் மழைக் காட்சிக்கு மேகம் வேண்டுமாம் !''

— நெல்லை நீலசுந்தரம்

அல்லவா இதெல்லாம் தெரியும்? நிலக்கோட்டைக்குப் போயிருந்தபோது கதிரேசன்தான் அவரைத் தற்செயலாகச் சந்தித்துவிட்டு வந்தான். அப்புறம் மதுரையில் கடை வீதியில் ஒரு முறை தற்செயலாகச் சந்திக்க நேர்ந்தபோது அவரைக் கதிரேசன் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தான். அப்படி அறிமுகப்படுத்தியபோதும் அவர் நிலக்கோட்டையில் உடற்பயிற்சி ஆசிரியராக இருப்பதை மட்டுமே நான் அறிந்து கொண்டேன். வேறு எதுவும் அப்போது எனக்குத் தெரியாது...''

''சமீபத்தில் அவர் இங்கேயே வந்து கதிரேசன் வீட்டிலும் யூனிவர்ஸிடி விடுதி அறைகளிலும் நடத்திய இரகசியக் கூட்டங்களுக்கு நீங்கள் போனதுண்டா?'' — டி. ஐ. ஜி.யே இதைக் கேட்டார்.

''கதிரேசன் வீட்டில் அவரைச் சந்திக்க நானும் நண்பர்களும் போயிருந்தோம். அவர் கூறிய சில கருத்துக்கள் எங்களுக்கு உடன்பாடாக இல்லாததால் திரும்பி விட்டோம். அதன் பின் அவர் இங்கே எப்போது எந்த விடுதியில் யாரை எதற்காகப் பார்த்தார் பேசினார் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியாது.''- பாண்டியன் பதில் சொன்னான்.

''இனி இவர்கள் போகலாம்! இவர்களிடம் கேட்க ஒன்றுமில்லை...'' என்று டி.ஐ.ஜி. குறிப்புக் காட்டிய பின்பே மாணவர்களைப் போகச் சொன்னார் துணைவேந்தர். மாணவர்கள் துணைவேந்தர் அறையை விட்டு வெளியேறுமுன் பாண்டியனே அவர்கள் சார்பில் டி.ஐ.ஜி.யிடம் 'காலையில் விடுதி அறைகளில் நடத்தப்பட்ட சோதனையின் போது போலீஸார் மிகவும் அநாகரிகமாக நடந்துகொண்டதாகவும், அதற்கு மிகவும் வருந்துவதாகவும்' கூறினான்.

''என்ன செய்யலாம்? எங்களுக்குச் சில கடமைகள் இருக்கின்றன. அவற்றைச் செய்ய வேண்டிய அவசரத்திலும் அவசியத்திலும் எங்களால் கூடச் சில தவறுகள் நேர்ந்து விடலாம். பெரிய தவறுகளைப் பற்றிய உண்மைகளைக் கண்டுபிடிக்கும் அவசரத்தில் நாங்களும் சில சிறிய தவறுகளைச் செய்ய நேரிட்டு விடும். அவற்றை மறந்து விடுங்கள்'' என்று அன்பாகவும் கனிவாகவும் அந்த டி.ஐ.ஜி. மறுமொழி கூறியபோது பாண்டியன் ஆச்சரியம் அடைந்தான். அவன் அவ்வளவு கனிவை அவரிடம் எதிர்பார்க்கவில்லை. நாலரை மணிக்கு அவர்கள் துணைவேந்தர் அறையை விட்டு வெளியேறினார்கள். அண்ணாச்சி கடைக்குப் போய்ச் சேர்ந்தபோது மாலை ஐந்தேகால் மணி ஆகியிருந்தது. அங்கே அவனை எதிர்பார்த்துக் கண்ணுக்கினியாள் காத்திருந்தாள். பாண்டியனைப் பார்த்ததும் அண்ணாச்சி பதற்றத்தோடு கேட்டார்:

''தம்பீ! கவனம். அந்தக் கதிரேசன் எழுதின லெட்டர், கொடுத்த பொஸ்தகங்க எதினாச்சும் உன் அறையிலே இருந்து நீ போலீஸ்லே மாட்டிக்கப் போறே!''

''கவலைப் படாதீங்க! கதிரேசன் கொடுத்த புஸ்தகங்களையெல்லாம் அவன் கொடுத்த மறு வாரமே படிச்சிட்டுத் திரும்பக் கொடுத்தாச்சு. காலையிலேயே நீங்க அங்கே வந்திட்டுப் போனப்புறம் போலீஸ்காரங்க வந்து என் அறையைத் துருவிட்டாங்க! ஒண்ணும் கிடைக்கலே...''

''என் அறையிலே கூட வந்து பார்த்தாங்க'' என்றாள் கண்ணுக்கினியாள். அப்போது ஓர் ஆள் பரபரப்பாக ஓடி வந்து, ''அண்ணாச்சி! கதிரேசனையும் மற்ற ரெண்டு பையன்களையும் கண்டு பிடிச்சு அரெஸ்ட் பண்ணிட்டாங்க. பிச்சைமுத்து வாத்தியார் மட்டும் அகப்படலியாம். இந்தத் தெருக் கோடியிலே இருந்த மரக் கடையிலேதான் ஒளிஞ்சுக்கிட்டிருந்திருக்காங்க'' என்றான்.

இப்படி அவன் கூறிய சிறிது நேரத்துக்கெல்லாம் போலீஸார் துப்பாக்கி ஏந்தி இருமருங்கும் வர விலங்கு பூட்டிய கரங்களுடன் கதிரேசன் முதலிய மாணவர்கள் மூவரையும் அதே பாதையாக ஸ்டேஷனுக்கு நடத்திச் சென்றார்கள். கதிரேசனை அந்தக் கோலத்தில் பார்த்ததும் பாண்டியனுக்குக் கண் கலங்கியது. 'வீணாகச் சீரழிந்து விட்டான்' என்று பாண்டியன் அநுதாபத்தோடு கூறிய வாக்கியம் கண்ணுக்கினியாளுக்குக் கேட்டது. (தொடரும்)

ராஜாஜியின் ஜெயில் டைரி

கேட்க உற்சாகமில்லாத பேச்சைப் பேசுகிறவர்கள் கைதிகளைப் பாதுகாக்கும் காவலாளர்கள்தான். இரவு நேரத்தில் ஒரே கூப்பாடாக இருக்கும். இதைக் குறித்து நான் பிரதம காவலாளரிடம் முறையிட்டால் அவர் அவர்களைத் தண்டிக்கலாம். அல்லது சப்தம் போடாதபடி செய்யலாம். எது செய்தாலும் என்னிடம் பரிவு காட்ட விரும்பியன்று; காவலாளர் சந்தோஷமாக இரவு நேரத்தைக் கழிக்கக்கூடாது என்பதற்காகவேதான். அதனால் என்ன பயன்? இந்த அரைப் பட்டினிப் பிரகிருதிகள் என்னைக் கட்டாயம் வெறுக்க ஆரம்பித்து விடுவார்கள்.

பாவம், காவலாளர்கள் தங்களைச் சுதந்திரமுடையவர்களாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் அவர்களும் தாங்கள் காவல் காக்கும் கைதிகளைப் போல் சதா காலமும் ஒரேவிதமாக வாழ வேண்டியதான சிறை வாழ்வு பெற்றவர்களே ஆவார்கள்.

அதன்பின் நள்ளிரவில் இரவுக் காவலாளர் 'டக் டக்' என்று மிதித்துக் கொண்டு வருகிறார். அவர் யார்? கொலைக் குற்றத்துக்காகப் பல வருஷத் தண்டனை பெற்றவர். அவர் பாரா மாற்றும் ஒவ்வொரு தடவையும் என் அறையின் முன்னால் வந்து நின்று கொண்டு, நான் இருக்கிறேனோ, ஓடி விட்டேனோ என்று வெளிச்சத்தை உள்ளே பாய்ச்சிப் பார்வையிடுகிறார்.

கைதிகளையே காவலாளிகளாகவும், இரவுப் பாராக்காரராகவும் ஓவர்சியராகவும் நியமித்திருக்கிறார்களே, அந்த விஷயம் ஆராயத் தகுந்ததாம். சாதாரணக் கைதிகளுக்கு அரைக் கைச் சட்டையும் அரைக் கால் சட்டையுமே தருகிறார்கள். ஆனால் இவர்களுக்கோ வெண்மையான முழுக் கைச் சட்டையும் முழுக்கால் சட்டையும் கொடுக்கிறார்கள். அத்துடன் அவர்கள் இடுப்பில் தோல் பெல்ட்டும் தலையில் வெள்ளைத் தலைப்பாகையும் அணிந்து கொண்டிருக்கிறார். அவர்களுடைய கைதி நம்பர் தகரத்தில் அச்சிட்டுக் கழுத்தில் தொங்குவதில்லை. பித்தளையில் பொறிக்கப்பட்டு மார்பில் வலதுபுறத்தில் மாட்டப்பட்டிருக்கும். அதைப் பெருமைக்குரிய பதக்கம் போல் பளபளவென்று விளக்கி மாட்டிக் கொள்வார்கள். இவர்களில் தலைமைப் பதவியில் இருப்பவர்கள் தங்கள் அதிகாரத்தின் சின்னமாகத் தடியொன்று கொண்டு செல்வார்கள். இவர்கள் அரிசிச் சோறு பெறுகிறார்கள். மாதம் ஒரு ரூபாய் வீதம் இவர்களுக்குக் கட்டி வைத்திருந்து விடுதலை ஆகும்போது வீட்டுக்குக் கொடுத்து அனுப்புவார்கள். அதுதான் அவர்கள் செய்யும் வேலைக்குக் கூலி. அத்துடன் தண்டனையில் மாதம் ஒன்றுக்கு நாலு நாட்கள் முதல் எட்டு நாட்கள்வரை கழிவு பெறுகிறார்கள். கைதிகள் செய்யும் வேலையைக் கண்காணிப்பது, இரவில் பாராக் கொடுப்பது போன்ற கஷ்டமான வேலைகளை



யெல்லாம் இவர்களிடமே வாங்கி விடுகிறார்கள். இவர்கள் சிறு பிழை செய்தாலும் உடனே சாதாரணக் கைதி ஸ்தானத்துக்கு அனுப்பி விடுவார்கள். அப்படி அனுப்பி விட்டால் எந்தக் கைதிகளை அடக்கி இம்சித்தார்களோ, அந்தக் கைதிகளுடன் இருக்க வேண்டி வந்துவிடுமாதலால் அந்த அவமானம் நேராமல் இருப்பதற்காக இவர்கள் எந்த இழிதொழிலையும் செய்யத் தயார். அதனால் இவர்கள் வெகு திறமையாக வேலை செய்வதாக அதிகாரிகள் கூறுகிறார்கள். இதுதான் பணச் செலவில்லாமல் நடத்தும் அடிமை முறை.

கழுத்தில் ஒரு பாசி மணிச் சரம்; காது களில் சிவப்பு நிறப் பவளங்கள் தொங்கிக் கொண்டிருந்தன; உடலில் இறுகப் பிடித்த வாறு ஒரு நீல நிறச் சட்டை; நெற்றியில் குங்குமத்தால் தீட்டப்பட்டிருந்த நாமம். இத்தியாதி அலங்காரங்களுடன், அவன் கையில் வைத்திருந்த கோலுக்கு ஏற்றபடி ஆடிக் கொண்டிருந்தது அந்தக் குரங்கு.

அவன் ஒரு குரங்காட்டி. அவன் கையி லிருந்த கயிற்றுடன் இணைக்கப்பட்டிருந்தது அந்தக் குரங்கு. தோளில் ஒரு பெரிய பையை மாட்டிக் கொண்டிருந்தான். அதில் தன் உடைமைகளைப் பத்திரப்படுத்தி யிருந்தான் அவன். கையில் ஒரு தகரக் குவளை. குரங்கைப் பிடித்திருந்த கையில் ஒரு குச்சியும் இருந்தது.

எதிர் வீட்டு வாசலில் வேடிக்கை காட்டிக் கொண்டிருந்த அவன், தன் குரங்கையும், அதன் சேஷ்டைகளையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பொடியர்களையும் இழுத்துக் கொண்டு என் வீட்டு வாசலுக்கு வந்தான்.

குரங்காட்டி போடும் இரைச்சலுக்கு மேல் அந்தச் சேஷ்டையை வேடிக்கை பார்க்க வந் திருந்த அந்தத் தெரு 'வாலில்லா வானரங் களின் கூச்சல் அதிகமா யிருந்தது. செய்தித் தாள் படித்தபடி ஜன்னல் அருகில் நின்று எதிர்வீட்டில் நடப்பவற்றைப் பார்த்து வந்த நான் அதே கும்பல் என் வீட்டு வாசல் கத வைத் திறந்து கொண்டு வந்துவிடவே, திண் ணைப் பக்கம் வந்து நின்றேன். என்னைக் கண்ட தும் குரங்காட்டி குரங்கை ஏவிவிட்டான்.

"டேய், ரங்கா! ஐயாவுக்குச் சலாம் போடுடா, சலாம் போடு!" என்றான். அவன் சொல்வதை அது எப்படிப் புரிந்து கொண்டதோ! 'ஆதியில் தன் வர்க்கத்தைச் சேர்ந்தவன், நாகரிக வளர்ச்சியால் மேம் பாடு அடைந்து இன்று 'ஐயா' என்ற சொல் லுக்கு அருகதையாகிவிட்டானே... தான் இன்றுவரை வானர ரூபமாகவே இருக் கிறேமே!' என்ற ஏக்கம் அதன் பார்வையில் வெளிப்படுவது போலிருந்தது எனக்கு. குரங் காட்டி தன் திறமையை வெளிக்காட்ட விரும்பவில்லை; தன் அடிமையாக இருக்கும் வானரத்தின் திறமையை நிரூபிக்க விரும்பி னான். காரணம் அதன் உழைப்புத் தானே அவனுக்குப் பிழைப்பு! அதன் உழைப்புக்கு அது பெறும் கூலி, அதனை வளர்த்து அடிமை



யாகக் காத்து வரும் அவன் குடும்பத்தையே உயிர் வாழச் செய்கிற தென்றல்—பெற்ற பிள்ளைகூட இந்தக் காலத்தில் தன் பெற்றோரைத் தன்னைப் பெற்ற கடனுக்காகக்கூட சம்ரட்சிக்க மறந்து விடுகிறான். ஆனால் அந்த வாயில்லாத பிராணி தன் ஜீவனோபாயத்தைப் பற்றிச் சிந்திக்காமல் உழைத்து வருகிறது.

குரங்காட்டி குரங்கை 'லங்காபுரிக்கு'த் தாண்டச் சொன்னான். மாமியார் வீட்டுக்குத் தண்ணீர் எடுக்கச் சொன்னான். கஜகர்ணம் போடச் சொன்னான்.

'' டேய், ராஜா ! நீயுமாடா சின்னக் குழந்தை போல் வேடிக்கை பார்த்துக் கொண்டு நிக்கிறே? போகச் சொல்லுடா அவனை. காலை வேளையிலே நடு வாசலிலே கும்பல் கூடிவிட்டது. அநாசாரம்! குரங்கையும் குட்டியையும் கொண்டு வந்து என்ன வேடிக்கை வேண்டிக் கிடக்கு !'' — என் தாயார் வாசல் ரேழியில் நின்று கொண்டு முனகினாள்.

நான், ''அம்மா! ஒரு பிடி அரிசியைப் போட்டுவிடு! அவன் போய் விடுவான் '' என்றேன்.

குரங்காட்டியைக் குறித்துத்தான் நான் அதைச் சொன்னேன். அதை அந்தக் குரங்கு எப்படிப் புரிந்து கொண்டதோ ! தாவிக் குதித்துக் கொண்டு தகரக் குவளையுடன் ரேழியிலிருந்த என் தாயாரின் காலடியில் போய் நின்றது. குரங்காட்டியின் கையிலிருந்த கயிறு நீண்டு கொண்டே வந்தது. ''சீ! சனியன் ! இதைக் கூப்பிட்டுக் கொள்ளுடா ! மூதேவி! மேலே பட்டுவிடும் போல் இருக்கு! ஜெயம்! ஒரு பிடி அரிசியைப் போட்டு இந்தச் சனியனை விரட்டு !'' என்று என் தாயார் ஏககாலத்தில் குரங்காட்டிக்கும் குரங்கை இழுத்துக் கொள்ளும்படி சொல்லி விட்டு, அவனைச் சீக்கிரம் அனுப்பும்படி என் தங்கைக்கும் உத்தரவு பிறப்பித்தாள்.

குரங்கு தகரக் குவளையில் அரிசியை வாங்கிக் கொண்டு வெற்றிக் குறியுடன் திரும்பியது. அதை வாங்கி வரும் வரையில் பொறுமையாய்க் கிடந்த அந்தக் குரங்காட்டி அது தகரக் குவளையைத் தன் அருகில் கொண்டு வந்ததோ இல்லையோ, குவளையை வெடுக்கென்று பறித்து அரிசியைத் தன் தோளிலிருந்த பையில் கொட்டிக் கொண்டான். மீண்டும் காலிக் குவளையைக் குரங்கினிடம் கொடுக்கவும், அது அவன் கொடுப்பதை இலட்சியம் செய்யாமல் எங்கோ பார்த்தது.

குரங்காட்டி கோபத்துடன் அதன் தலையில் கையிலிருந்த குச்சியால் ஓர் அடி அடிக்கவும் விதியை நொந்து கொண்டு கிளம்பியது அந்த ஜீவன். உண்மையில் குரங்காட்டியின், வேடிக்கையை மட்டும் நான் அந்தச் சில நிமிஷங்களில் கண்டு ரசிக்கவில்லை. அவன் மனோபாவம் எப்படியிருக்கும் என்பதையும் கவனித்துக் கொண்டிருந்தேன்.

''ராஜா ; வெந்நீர் ஆறிப் போகிறது. சீக்கிரம் குளித்துவிட்டு வா. எனக்கும் ஆபீஸுக்கு நாழியாயிடுத்து ! உனக்காகத்தான் சாப்பிடக் காத்துக் கொண்டிருக்கிறேன்!'' என்று உள்ளேயிருந்து வந்த என் தகப்பனார் கூறவே. என் சிந்தனைத் தொடர் அறுபட்டது. கையில் வைத்திருந்த செய்தித்தாளை மடித்துப் போட்டுவிட்டுக் குளிக்கக் கிளம்பினேன்.

காலை பத்து மணி இருக்கும். சைக்கிளைத் தெருத் திருப்பம் வரை மெதுவாக மிதித்தபடியே காரியாலயத்துக்குச் சென்று கொண்டிருந்தேன். குரங்காட்டி அடுத்த தெருவில் குரங்கை ஆட்டிக் கொண்டிருந்தான். அவன் இருந்த வீட்டுப் பக்கத்திலிருந்த வெற்றிலை பாக்குக் கடைக்காரன் குரங்கின் வேடிக்கைகளைக் கண்டு அதற்குப் பரிசாகவோ, இல்லை, அதன் மீது பரிதாபப்பட்டோ ஒரு வாழைப் பழத்தை எடுத்துக் கொடுத்தான். குரங்கு ஆவலுடன் அதைப் பெற்றுக் கொள்ளக் குதித்தது.



ஆனால், அதை ஆட்டி வைத்துக்கொண்டு வரும், 'மனிதக் குரங்கு' தன் கையால் பழத்தைப் பறித்துக் கொண்டு அதைத் தன் தோளில் தொங்கும் பையினுள் வைத்துக் கொண்டு விட்டது. என் மனம் வேதனையால் தவித்தது. நேரமாகிவிட்டபடியினால் சைக்கிளில் ஏறி வெகு வேகமாகச் செலுத்தினேன்.

மாலையில் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்த நான் வழக்கப்படி அந்தப் புளிய மரத்தடியையும் பார்த்துக் கொண்டே வந்தபோது அந்தப் பிச்சைக்காரக் கும்பலுக்கிடையில் புதிதாக ஒரு குரங்காட்டியின் குடும்பமும் சமையல் செய்வதில் ஆழ்ந்திருந்தது. ஊர்க் குப்பைக் காகிதங்களும், விறகுச் சுள்ளிகளும் தீக்கொழுந்துவிட்டு எரிந்தபடி அந்தக் கும்பலுக்கு 'நளபாக'த்தைத் தயாரிக்க உதவிக் கொண்டிருந்தன.

அதோ, காலையில் பார்த்த அதே குரங்காட்டி. அவன் அருகில் அவன் மனைவியும், இரண்டு குழந்தைகளும் அவன் தேடி வந்துள்ள பொருள்களை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். அதோ அவனது பிழைப்புக்கு வழிகாட்டும் உழைப்புக் கருவி, ஒரு மூலையில் கட்டப்பட்டுக் கிடந்தது. அதைச் சுற்றி ஐந்தாறு வாழைப் பழத் தோல்கள் தான் கிடந்தன..அதை வெகு சுவாரசியமாக அது தின்ற தோரணையிலிருந்து அதற்குக் கிடைத்தது பழத்தின் தோல் மட்டும்தான் என்பதைப் பறைசாற்றியது.

ஒரு வாரத்துக்குப் பின் அடுத்த வெள்ளிக்கிழமை, அதே எட்டரை மணிக்கு அந்தக் குரங்காட்டி என் வீட்டு வாசலுக்கு வந்து விட்டான்.

இந்தத் தடவை அவனைப் பார்க்க எனக்கு ஆத்திரம்தான் வந்தது. ''டேய்! நீ குரங்குக்குச் சாப்பாடு போடறதுண்டா ?'' என்று கேட்டேன் நான். அவனைச் சூழ்ந்து நின்ற கும்பல் இதுவரை குரங்கைத்தான் வேடிக்கை பார்த்து வந்தது. இப்போது குரங்குக்காகப் பரிந்து பேசும் என்னையும் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தது.

'' எசமான் ! நான் சம்பாதிக்கிறதிலே, கால்வாசி இந்தச் சனியன் தின்னுப்பிடுதுங்க'' என்றான். அவன் விரக்தியுடன் சொன்ன பதில் என்னைத் திகைக்க வைத்தது.

''அட பாவி ! உனக்காக அது சம்பாதிக்கிறதா, இல்லே, அதுக்காக நீ சம்பாதிக்கிறியாடா ? உன்னை விட்டுப் போனாலும் அது பிழைத்துக் கொள்ளுமே? ஆனால் அது போய் விட்டால், உன் பிழைப்பிலே மண்ணுதான்'' என்றேன் ஆக்ரோஷத்துடன். அவன் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

அதற்குள் என் தங்கை ''அண்ணா! ஆஞ்சநேயருக்குப் பூஜையாயிடுத்து! உள்ளேயிருந்து ஒரு பழம் கொண்டு வந்து இந்தக் குரங்குக்குக் கொடுக்கட்டுமா?'' என்றாள்.

''ஆமாம், ஜெயம்! போய் ரெண்டு பழம் கொண்டு வா!'' என்றேன். அவள் கொண்டு வந்த பழங்களைக் குரங்கு கவனிக்கவில்லை. குரங்காட்டி ஏக்கத்தோடு பார்த்தான்.

''சாமி ! நம்பகிட்டே கொடுத்துடுங்கோ! நான் அதுக்குக் கொடுத்துடறேன்!'' என்றான் பேராசை ததும்பும் பார்வையுடன்.

அவனிடம் கொடுக்க எனக்குப் பைத்தியமா, என்ன? நானே இரண்டையும் குரங்கிடம் கொடுத்தேன். பாவம் ! அதற்கு என்ன பசியோ ! மளமளவென்று பழத்தை உரித்துத் தின்றுவிட்டுத் தோலை அங்கேயே போட்டு விட்டது. பழம் கிடைத்த மகிழ்ச்சியால் தோலை அலட்சியப்படுத்தியதோ ?

குரங்கு பழம் தின்பதை மகிழ்ச்சியுடன் யாவரும் பார்த்தோம். ஆனால் கண்களில் விஷ ஜ்வாலை வீச, அந்தக் குரங்கைப் பார்த்தான் அதன் எஜமானனான குரங்காட்டி. அவனுக்கு ஆத்திரம் அதிகமாகிவிடவே, குரங்கைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு எதிர் வீட்டுக்கு ஓடினான்.

அவன் போவதைக் கண்டு நான், ''டேய்! அரிசி வாங்கிண்டு போடா !'' என்று கூப்பிட்டும், அவன் ஏனோ திரும்பவில்லை. ஆனால், எதிர் வீட்டுப் பாட்டி, குரங்கைக் கண்டதும், ''அனுமந்தா ! இந்தாடா ! உனக்குத்தான் வைச்சிருந்தேன் !'' என்று ஒரு தேங்காய் மூடியை அதனிடம் கொடுக்க வந்தாள். இதற்குள் குரங்காட்டி பாட்டி கையிலிருந்து குரங்கு கைக்குத் தேங்காய் மூடி வருவதற்குள் அதைப் பறிமுதல் செய்துவிட்டான்.

நானும், என் தங்கை, ஜெயமும் இவற்றையெல்லாம் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தோம். குரங்காட்டியைச் சுற்றி நின்று கொண்டிருந்த கும்பலிலிருந்து ஒரு பையன் கையிலிருந்த வேர்க்கடலையில் நான்கை எடுத்துக் குரங்கினிடம் நீட்டினான். குரங்காட்டி இம்முறை பொறுமையை இழந்து, '' ஏய் ! நீ கொடுத்து அது பொழைக்க வேண்டாம் !'' என்று ஏகத்தாளமாகச் சொல்லிக் கொண்டு, அதைத் தானும் பெறாமல், குரங்கும் பெற்றுக் கொள்ள முடியாமல் சிறுவன் கையிலிருந்து தட்டிவிட்டான். அதற்கு மேல் குரங்காட்டி எங்கள் பார்வையிலிருந்து மறைந்து விடவே, நாங்கள் உள்ளே போய்விட்டோம்.

'' அண்ணா ! பார்த்தியா, பாவம் ! அதைப் பட்டினி போட்டு இந்தத் தடியன் வாழ்ந்து வருகிறானே !'' என்றாள் ஜெயம் வியப்புடன்.

''ஆமாம், ஜெயம் ! நானும் தினமுந்தான் பார்க்கிறேன் ! இவன் அதன் வயிற்றில் மண்ணை அடித்துத்தான் வாழ்ந்து வருகிறான்!'' என்றேன் நான்.

''சரி, அண்ணாவும் தங்கையும் குரங்குக்குப் பரிந்து கொண்டு பேசினது போதும்! சாப்பிட வாருங்கள்'' என்றாள் என் தாயார்.

அன்று வழக்கப்படி காரியாலயத்துக்குச் சைக்கிளில் போகும்போது, குரங்காட்டி என் தெருவுக்கு அடுத்த தெரு முனையில் குரங்குடன் போய்க் கொண்டிருந்தான்.

அவன் முகம், அன்று வழக்கப்படி வரும்படி அவனுக்குக் கிடைக்காத குறையை எடுத்துக் காட்டியது. அவன் முகத்தில் தினமும் விழிக்கும் குரங்கு இன்று நரி முகத்தில் விழித்து விட்டதோ என்னவோ ? தன் வயிற்றுப் பாட்டை அது ஓரளவு தீர்த்துக் கொண்டது.

குரங்காட்டி நடந்து கொண்டேயிருந்தான். நடந்து கொண்டே யிருந்தவன், என்ன நினைத்தானோ? சடக்கென்று திரும்பி

இன்று!
தொடுவதற்கு மென்மையான மழமழப்புக்கு
வில்லியம்ஸ்
ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பிளேடு

வெட்டி வதைத்து, உங்கள் தன்மானம் புண்பட 'முகத்திலடிக்கும்' முரட்டு பிளேடுகளோடு மல்லுக்கு நின்றது போதும். இதோ, க்ஷவர சோதனைக்கு ஒரு விடிவு: புதிய வில்லியம்ஸ் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பிளேடு···கரடுமுரடாகிக் 'கருநிழல்' படர்ந்த கடின வளர்ச்சிக்குக் கடைகட்டுகிறது! கீறலுக்கும் தழும்புக்கும் விடைகொடுப்பீர். தீர்ந்தது சரும வேதனை. மீண்டது நம் சரும மென்மை.






Creative Unit-542-Tam.

இன்னுமொரு குழந்தையைப் பெறுவதற்குமுன் சற்று

யோசியுங்கள்

முதலில் இந்தக்
குழந்தையை நன்றாக
வளர்க்க வேண்டாமா?



இக்குழந்தையை நன்றாக படிக்க வைக்க வேண்டாமா? உங்கள் விருப்பப்படி, குழந்தைக்கு வசதிகள் அனைத்தும் அளிக்க வேண்டாமா? இன்னொரு குழந்தையை உடனே பெற்றால், இதெல்லாம் முடியுமா? சிரமம் தான். அடுத்த குழந்தை உடனே வேண்டாம் என்று நீங்கள் கருதுவது இயற்கைதானே.

நீங்கள் மட்டுமல்ல; உலகெங்கிலும் தம்பதிகள் இவ்விதம்தான் கருதுகிறார்கள். வளமுடன் வளர்க்க வசதிகள் பெருகும் வரை, அவர்கள் இன்னொரு குழந்தையைப் பெறுவதில்லை. நீங்களும் 'நிரோத்' உபயோகித்து குழந்தை பெறுவதைத் தள்ளிப்போடலாம். அனைவரும் விரும்பி ஏற்கும் ரப்பர் கருத்தடைச் சாதனம் நிரோத்; இது ஆண்களுக்கானது. தலைமுறை தலைமுறையாக உபயோகத்தில் இருந்துவரும் சிறந்த, எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனம் நிரோத். நீங்களும் நிரோத் உபயோகியுங்கள்.

நிரோத் எங்கும் கிடைக்கிறது. அரசாங்க ஆதரவு விலை 15 பைசாவுக்கு 3



இன்னொரு குழந்தையை வளர்க்க வசதி பெறும் வரை
உபயோகியுங்கள்

நிரோத்

லட்சக்கணக்கான பேர் விரும்பி ஏற்கும் எளிய, பாதுகாப்பான
கருத்தடைச் சாதனம் நிரோத்.

davp 71/480

பலசரக்குக் கடைகள், மருந்தகங்கள், வெற்றிலைபாக்குக்கடைகள் இங்கெல்லாம் நிரோத் விற்பனையாகிறது

ஞன். கையிலிருந்த குச்சியால் கூடவே வரும் குரங்கை வெறி பிடித்தவன் போல் ஐந்தாறு அடிகள் அடித்து விட்டான்! அவன் பின்புறமாக மெதுவாகச் சைக்கிளில் வந்து கொண்டிருந்த நான் வேகமாக வண்டியை மிதித்தேன். 'தரித்திரம்..., நல்லா ஒன் வயிறு புடைக்கத் தின்னுச்சு.... குளந்தை குட்டி பொஞ்சாதி வாயிலே இன்னிக்கு மண்ணு போடப் பார்க்கிறே!' இந்த வார்த்தையைச் சொல்லிக் கொண்டே அவன் கடைசியாகப் பலமாய் அடித்த அடியைத் தாங்காமல் குரங்கு 'வீர்' என்று அலறவும் நான் சைக்கிளிலிருந்து இறங்கவும் சரியாக இருந்தது. என் வருகையை அவன் எதிர்பார்க்கவே இல்லை. என்னைக் கண்டதும் அவன் திருதிருவென்று விழித்தான். ''சாமி !'' என்று தானாகவே என்னவோ சொல்ல ஆரம்பித்தான். நான் மௌனமாக அவனை ஒரு பார்வை பார்த்தேன்.

''சாமி! இன்னிக்குச் சோத்து வாயிலே மண்ணு! சனியன், இதுக்கு எல்லோரும் சாப்பிடக் கொடுத்துட்டாங்க!'' என்றான் அவன். அவன் பதில் எனக்கு அவன் மேல் கொஞ்சமும் பரிதாப உணர்ச்சியை உண்டாக்கவில்லை. ''ஏன் இன்று ஒரு நாள் நீ பட்டினி கிடந்தால் என்னவாம்?'' என்றேன். அவன் தலை குனிந்தான்.


குரங்கு வாய் ஓயாமல் வலியின் கொடுமையால் கதறிக் கொண்டிருந்தது. ஏற்கனவே எலும்பும் தோலுமாயிருந்த அந்த ஜீவன் தற்போது அடியின் கொடுமையால் துடித்துக் கொண்டிருந்தது. எனக்கு அவனுடன் பேச விருப்பமில்லை. குரங்கின் பரிதாபத்தைக் காணவும் பிடிக்கவில்லை. ஆகவே, ஒரு நாலணா நாணயத்தை எடுத்து அவனிடம் கொடுத்து, ''போ ! இன்னிக்குப் பொழுதை இதை வைச்சுண்டு தள்ளு!'' என்று சொல்லி விட்டு அங்கிருந்து கிளம்பி விட்டேன்.

அவன் குரங்கை இழுத்துக் கொண்டு நடந்தான். தலையிலிருந்து வடியும் ரத்தத்தைச் சிந்திக் கொண்டே ஓடுவதற்குச் சக்தியின்றி ஊர ஆரம்பித்தது அந்த வானரம்.

'பாவிப் பயல்! தன் ஆத்திரத்தை அதனிடம் காட்டித் தீர்த்துக் கொண்டான்' என்று என் வாய் முணுமுணுத்தது. குரங்காட்டியுடன் பேசின நேரத்தைச் சரிக்கட்ட வேண்டிச் சைக்கிளை வேகமாக அழுத்தினேன், காரியாலயத்தை நோக்கி. நல்ல வேளையாகச் சரியான நேரத்துக்குள் போய்ச் சேர்ந்துவிட்டேன்.

தினத்தையும்விட அன்று காரியாலயத்தை விட்டுச் சீக்கிரமே கிளம்பி விட்டேன். காரியாலயத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்த நான் அன்றும் வழக்கப்படி அந்தப் புளிய மரத்தடியைப் பார்த்துக் கொண்டு வந்தேன்.

பிச்சைக்காரக் கும்பல் அன்று சமையலில் ஏனோ இறங்கவில்லை. ஒரே கூட்டமாகச் சேர்ந்து கொண்டு நிற்கவே, நான் சைக்கிளை விட்டு இறங்கினேன். அங்கே கூடியிருந்த கும்பலில் குரங்காட்டியைக் காணவில்லை. அவன் குடும்பத்தினரை எனக்குச் சரியாகத் தெரியவில்லை. ஆகவே, கூடியிருந்த கும்பலி



''ஆபீசிலிருந்து வரும்போது சாம்பார் பொடி, ரசப் பொடி, அப்பளாம் ஒரு பாக்கெட் வாங்கிவா வித்யா!''

''ஊஹூம். மாட்டேன்! என் ஆபீஸ் தோழிகள் கிண்டல் செய்வாங்க; நீங்களே வாங்குங்க !''

லிருந்த ஒருவனைக் கூப்பிட்டு விசாரித்தேன். அவன் சொன்னான்: ''சாமி ! இந்தக் குரங்காட்டிப் பய மாரியில்லிங்க... அவன் குரங்கு மேலே சைக்கிள் ஏறிடிச்சாம் ! தலையிலே நல்லா அடிபட்டு அது செத்தநாழி முன்னாலே மண்டையைப் போட்டுடுத்துங்க!''

அவன் சொல்லி முடித்ததும் என் மனம் 'பக்'கென்றது. 'சைக்கிளா ஏறிற்று அதன் தலையில்!' என்று நான் முனகிய போது, எதிர்த் திசையிலிருந்து அந்தக் குரங்காட்டி ஓட்டமும் நடையுமாய் வந்தான்.

''சாமி ! பொளப்பிலே மண்ணு விழுந்திடுச்சுங்க! ரங்கன் போயிட்டானுங்க. நீங்க காலையிலே கொடுத்த நாலணாவுக்கு இப்பத்தான் பூ வாங்கியாந்தேனுங்க. இதைப் போட்டு எடுத்துட்டுப் போய்ப் புதைக்கணுமிங்க !''

நான் கூடியிருந்த கும்பலிடையே ஏற்பட்ட இடைவெளி மூலம் எட்டிப் பார்த்தேன்.

கால்கள் விறைத்துப் போய்க் கிடந்தது அந்த வானரம். அதன் உடம்பில் காலையில் காணப்பட்ட பாசி மணிச் சரமோ, நீல நிறச் சட்டையோ ஒன்றையும் காணோம் — பிறந்த மேனிக்கு இறந்து கிடந்தது.

நான் இனாமாகக் கொடுத்த நாலணா, அந்தக் குரங்கின் இறுதிப் பிரயாணத்துக்கா செலவாக வேண்டும்?

என்னால் அங்கு அதற்குமேல் நிற்க முடியவில்லை. குரங்காட்டி மிரள மிரள விழிப்பதைக் கண்ட நான் கடைசியாக அவனிடம் ஒரு கேள்வி கேட்டேன்: ''ஏண்டா ! குரங்கு சைக்கிளில் அடிபட்டா இறந்தது?''

இதைக் கேட்ட அவன் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு ஈனஸ்வரத்தில், ''சாமி! சொல்லாதீங்க சாமி! பாவி, அநியாயமா அடிச்சுப்புட்டேனுங்க... அதனாலேதான்...'' என்றான். அவன் சொல்வது முழுவதும் என் காதில் விழுவதற்கு முன்பே நான் சைக்கிளை மிதிக்க ஆரம்பித்து விட்டேன். பிறர் இரக்கம் அதன் உயிரைப் பிரிக்கும் என்றால் இரக்கம் அதற்குத் தேவையற்ற ஒன்றுதானே!

அன்பினாலும் அனர்த்தம் விளையுமோ?

யாரை மணப்பது?

காஃமுஃவரதராஜன்



மணி ஐந்தாகி விட்டது.

தலைமைக் குமாஸ்தா சங்கரய்யர் வீட்டுக்குக் கிளம்பக் கோட்டை மாட்டினார். புன்னகையோடு அவர் முன்னே வந்து நின்றான் சிவப்பிரகாசம். செக்கச் செவேலென்று இருந்தான்.

பழைய நினைவுகள் மனத்திரையில் நிழலாடின சங்கரய்யருக்கு. சிவப்பிரகாசத்தைப் பார்த்ததும் அப்படியே நாற்காலியில் உட்கார்ந்து விட்டார். எதிரேயுள்ள நாற்காலியைச் சுட்டிக் காட்டி, ''உட்கார் சிவப்பிரகாசம்!'' என்றார். மிகவும் பணிவுடன் அவர் முன்பாக உட்கார்ந்தான் சிவப்பிரகாசம்.

கார்ப்பரேஷன் பள்ளியில் எட்டாவது வரை படித்து விட்டுக் கோபாலபுரம் உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் சேர்ந்தான் சிவப்பிரகாசம். கார்ப்பரேஷன் பள்ளியில் படித்தவனை எட்டாவது வகுப்பில்தான் சேர்ப்பது வழக்கம். ஆனால் சம்ஸ்கிருதத்தில் பதின்மூன்று சுலோகங்களை மடமடவென்று ஒப்பித்தான். தலைமை ஆசிரியர் பிரமித்துப் போய்விட்டார். உச்சரிப்பு சுத்தமாக அவன் சுலோகங்களை ஒப்பிப்பது அவருக்கு வியப்பையும், மகிழ்ச்சியையும் தந்தது. ''தம்பி! உனக்கு யாரடா சம்ஸ்கிருதம் கற்றுத் தந்தது?'' என்று கேட்டார் வாத்ஸல்யத்துடன். ''இவர்தான்'' என்று தன்னை அழைத்து வந்தவரைச் சுட்டிக் காட்டினான் சிவப்பிரகாசம்.

அவன் காட்டிய நபர் சங்கரய்யர். அவரைப் பெருமையோடு நோக்கினார் தலைமை ஆசிரியர்.

சங்கரய்யர் சொன்னார்: ''பையன் ஏழைப் பையன். ஆனால் படிப்பில் வெகு சுட்டி. சம்ஸ்கிருதம் கற்றுக் கொள்ள ஆசைப் பட்டான். கற்றுத் தந்தேன். இவன் ஒருவனுக்குத்தான் நான் இலவசமாக டியூஷன் கற்றுத் தரேன்.''

''நீங்க எங்கே வேலையாயிருக்கேள்?'' என்று கேட்டார் தலைமை ஆசிரியர்.

''கைத்தறி ஏற்றுமதி ஸ்தாபனத்தில் குமாஸ்தாவாக இருக்கிறேன்'' என்றார் சங்கரய்யர்.

கோபாலபுரம் உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் சேர்ந்த சிவப்பிரகாசம், சம்ஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலும் சங்கரய்யரிடம் டியூஷன் கற்றுக் கொண்டான். அவன் ஒருவனிடம் மாத்திரம் பணம் வாங்கிக் கொள்ளாமல் டியூஷன் கற்றுத் தந்தார் சங்கரய்யர். ஏதோ அவனிடம் ஒரு பிடிப்பு அவருக்கு. நன்றாகப்

படித்து, பத்தாம் வகுப்புக்கு மாறினான் சிவப்பிரகாசம். சங்கரய்யருக்கு உத்தியோகம் சென்னையில் மாற்றலாகியது. அவர் வீட்டைக் காலி செய்து சென்னைக்குக் கிளம்பியபோது சிவப்பிரகாசம் விசித்து விசித்து அழுதான். ''பாடத்தில் ஏதாவது சந்தேகம் வந்தால் நான் யாரிடம் போய்க் கேட்பேன் ஸார்?'' என்று அவன் கேட்டபோது, சங்கரய்யர் கண் கலங்கினார்.

பல வருடங்கள் இடைவெளிக்குப் பின்னால் இப்போதுதான் சிவப்பிரகாசத்தைப் பார்க்கிறார் சங்கரய்யர். இப்போது அவர் தலைமைக் குமாஸ்தாவாகப் பதவி உயர்வு பெற்று விட்டார்.

''சௌக்கியமாக இருக்கிறீங்களா ஸார்?'' என்று கேட்டான் சிவப்பிரகாசம்.

''சௌக்கியம்தானப்பா. நீ என்ன செய்யறே இப்போ? என்ன படிச்சிருக்கே? எல்லா விவரங்களையும் சொல்!''

''ஸார்! நான் எஸ். எஸ். எல். ஸி. படித்து முடித்ததும், தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் கற்றுக் கொண்டேன். சென்னையில் ஒரு சோப்புக் கம்பெனியில் குமாஸ்தாவாக இருக்கிறேன். எனக்குக் கல்யாணம் செய்து வைக்க அம்மா முயற்சி செய்கிறாள். என் அத்தை பெண் இருக்கிறாள். நல்ல அழகி. பெயர் சுமதி. அவள் மீது எனக்கு நாட்டம் விழுந்திருக்கு. என் மாமா பெண் மரகதம் ரொம்பவும் அடக்கமானவள். ரொம்பவும் சிக்கனமான புத்திசாலிப் பெண். ஆனால் சுமாரான அழகி. அவளைத்தான் நான் கட்டிக் கொள்ள வேண்டும் என்று அம்மா சொல்கிறாள். எனக்கு ஒரே குழப்பமாக இருக்கு. நீங்க இங்கு வேலை செய்வதாகக் கேள்விப்பட்டேன். அதனால்தான் வந்தேன். என் குழப்பத்தை நீங்கதான் தீர்த்து வைக்க வேண்டும். எனக்கு ஏற்றவள் சுமதியா? மரகதமா?'' ஒரே மூச்சில் பேசி முடித்தான் சிவப்பிரகாசம். சங்கரய்யர் கடகடவென்று சிரித்தார்.

''சிவப்பிரகாசம்! பள்ளிப் பாடத்தில் சந்தேகம் கேட்டாய். உன் சந்தேகங்களைப் போக்கினேன். ஆனால் இது உன் வாழ்க்கைப் பாடத்தில் ஏற்பட்ட சந்தேகம். அதைத் தீர்த்து வைக்க எனக்கு அருகதை உண்டா என்று சந்தேகமாக இருக்கிறது.'' சங்கரய்யர் அடக்கத்துடன் சொன்னார்.

''ஸார்! உங்க தீர்ப்புக்கு நான் கட்டுப் படறேன்'' என்றான் சிவப்பிரகாசம். சங்கரய்யர் அண்ணாந்து பார்த்து யோசனையில் ஆழ்ந்தார். பின்னர் ''சிவப்பிரகாசம்! பெரிய விஷயங்களில், குழப்பமான விஷயங்களில், எனக்குத் தீர்ப்புச் சொல்வது யார் தெரியுமா? நீ நம்பமாட்டாய். என் வீட்டுக்காரிதான். அவள் அந்தக் காலத்து எட்டாம் கிளாஸ். ஆபத்துக் காலத்தில் ஓர் அமைச்சனைப் போல் புத்திமதி சொல்பவள் அவள். அதனால் இந்த ஞாயிற்றுக் கிழமை வீட்டுக்கு வா. அவள் புத்திமதி கேட்டு நட'' என்றார்.

''ஆகட்டும் ஸார்! அப்படியே செய்கிறேன்'' என்று விடை பெற்றுக் கொண்டு போனான் சிவப்பிரகாசம்.

ஞாயிறன்று ''ஸார்! ஸார்!'' என்று அழைத்தவாறே சங்கரய்யர் வீட்டினுள் நுழைந்தான் சிவப்பிரகாசம். சங்கரய்யர் மனைவி ஜானகி ''யாரப்பா வேண்டும் உனக்கு?'' என்று கேட்டுக் கொண்டே தெரு நடைக்கு வந்தாள்.

''மாமி! என்னைத் தெரியலையா? நான்தான் சிவப்பிரகாசம். அந்தக்



காலத்தில் இலவசமாக மாமாவிடம் டியூஷன் கற்றுக் கொண்டேனே, நினைவிருக்கிறதா?''

''ஓ, சிவப்பிரகாசமா? வாடாப்பா.. பார்த்து ரொம்ப நாளாச்சு. சௌக்கியம் எல்லாம் எப்படி?'' என்று கேட்டாள் ஜானகி.

தன்னைப் பற்றிய எல்லா விஷயங்களையும் கூறிய சிவப்பிரகாசம், ''மாமா எங்கே மாமி? இன்று ஞாயிற்றுக்கிழமை ஆச்சே? ஆபீஸ் கூடக் கிடையாதே?'' என்று கேட்டான்.

''ஏதோ அவசர வேலையாம். ஆபீஸ்தான் போயிருக்கிறார். ஓவர்டைம் அலவன்ஸ் கிடைக்கும். அவரைப் பார்க்க வேண்டுமானால் நீ ஆபீசுக்குப் போ'' என்றாள் மாமி.

''மாமி! நான் ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டு தவிக்கிறேன்; அதாவது வாழ்க்கைப் பிரச்னையில். உங்களைக் கலந்தாலோசித்து மாமா தீர்த்து வைப்பதாகச் சொன்னார்'' என்றான் சிவப்பிரகாசம்.

''உன் பிரச்னை என்ன? என்னால் முடிந்தால் தீர்த்துவைக்கிறேன்'' என்றாள் ஜானகி மாமி. சிவப்பிரகாசம் எல்லா விவரங்களையும் சொன்னான். அதற்கு ஜானகி, ''நீ சுமதியை மணக்க வேண்டுமா, மரகதத்தையா என்பதை அப்புறம் சொல்றேன். உனக்கு டியூஷன் கற்றுத் தந்த உங்க வாத்தியார் — அதாவது என் வீட்டுக்காரர் — ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டார். அவர் தவியாய்த் தவித்தபோது அவர் மானம் கப்பலேறாமல் அவரைக் காப்பாற்றினேன். அதைக் கேள்'' என்று கதையைத் தொடங்கினாள் ஜானகி.

எப்போதும் சீட்டியடித்துக் கொண்டு குஷாலாக வீட்டுக்கு வரும் சங்கரய்யர் அன்று வேதனையோடு வீட்டுக்கு வந்தார். எப்போதும் அவர் கையில் ஒரு முழம் பூ இருக்கும். அன்று கையில் ஒன்றும் இல்லை.

''ஏன்னா, உடம்புக்கு என்ன?'' என்று அவர் நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள் ஜானகி.

''கையை எடு ஜானு! உடம்புக்கு ஒரு கேடும் இல்லை'' என்று எரிந்து விழுந்தார் சங்கரய்யர். அவர் போக்கு விசித்திரமாக இருந்தது ஜானகிக்கு. தானும் கோபத்தைக் காட்டாமல், முகம் சுளிக்காமல், ஒரு டம்ளர் காப்பியுடன் சங்கரய்யரை அணுகினாள். 'அவர் ஏதோ உள்ளூறக் கவலையாக இருக்கிறார்' என்று உணர்ந்துகொண்டாள் ஜானகி. ஆனால் அதை அவரிடம் கேட்கவில்லை. அவரே வாயைத் திறந்து சொல்லட்டும் என்று பேசாமல் இருந்தாள். மறு நாளும் வீட்டுக்குச் சோர்ந்து போய்த்தான் வந்தார் சங்கரய்யர்.

''ஏன் ஒருமாதிரியாய் இருக்கிறீங்க? ஆபீஸில் ஆடிட்டிங்கா? வேலைப் பளு அதிகமா?'' என்று மெதுவாகக் கேட்டாள் ஜானகி.

''வேலைப் பளு இல்லை. மனப் பளுதான்'' என்ற சங்கரய்யர் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை. ஜானகியும் அவரைத் துளைத்துத் துளைத்துக் கேட்டு அவரைத் தொல்லைப்படுத்தவில்லை. என்றைக்கு இருந்தாலும் தோட்ட மலர் வீட்டுக்கு வந்துதானே ஆகவேண்டும்? கணவனின் மனத்தை அரிக்கும் கவலையை ஒரு நாள் அவர் தம் மனைவியிடம் சொல்லித்தானே ஆகவேண்டும்?

முதல் தேதி வந்தது. வழக்கமாகச் சம்பளப் பணத்துடன் பாதாம் அல்வா ஒரு பொட்டலம் வாங்கி வருவார் சங்கரய்யர். இன்று பாதாம் அல்வாவும் காணோம், ஒரு முழம் கதம்பமும், காணோம். பணம் வைத்துள்ள கவரை எடுத்து ஜானகியிடம் நீட்டினார். அதை அவள் அப்படியே பீரோவில் வைக்கப் போனாள்.

''பணத்தை எண்ணிப் பார், ஜானகி!'' என்ற சங்கரய்யரை ஒரு விசித்திர ஜந்துவைப் பார்ப்பது போல் நோக்கினாள் ஜானகி.

''முந்நூறுதானே நீங்கள் கொடுப்பது! இந்த மாதம் சம்பள உயர்வு ஏதாவது கிடைத்ததா?'' — வேண்டுமென்றே நமுட்டுச் சிரிப்புடன் கேட்டாள் ஜானகி. சங்கரய்யர் அவளை ஒரு முறை முறைத்து நோக்கினார். ஜானகி கவரை உடைத்து நோட்டுக்களை எண்ணினாள். சரியாக ரூபாய் நூற்றைம்பது இருந்தது.

''மீதிப் பணம் எங்கே?'' என்று இடுப்பில் கைவைத்தவாறே கேட்டாள் ஜானகி. சங்கரய்யர் அவளை நேருக்கு நேர் பார்க்கத் திராணியற்றவராய், ''கடனுக்குக் கொடுத்து விட்டேன்!'' என்றார்.

''கடன் என்றால்? வட்டியா, அசலா?''— ஜானகி தொடர்ந்து கேட்டாள்.

''வட்டிதான்.''

''ஐயோ! ஐயோ! இதென்ன கொள்ளை? ரூபாய் நூற்றைம்பது வட்டியா?''

''இரைந்து பேசாதே. பக்கத்து வீட்டுக்காரன் காதில் விழப் போகிறது. அப்புறம் என் மானம் போகும்.'' சங்கரய்யர் தாழ்ந்த குரலில் சொன்னார். ஜானகியோ மெல்ல மெல்லத் தன்னை ஆக்கிரமிக்கும் கோப அரக்கனுக்கு உட்பட்டு வெடித்தாள்.

''இதோ பாருங்கோ! எல்லா விஷயமும் என்னிடம் ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லிடுங்கோ. எதுவுமே மறைக்கக் கூடாது. எவ்வளவு ரூபாய் கடன் உங்களுக்கு? எவ்வளவு வட்டி? யாருக்கு என்ன செலவு செய்தீங்கோ, இப்படி எல்லா விவரங்களும் என்னிடம் வந்தாகணும்.''

ஜானகி முன் கூனிக் குறுகிப் போனார் சங்கரய்யர். செட்டாகக் குடித்தனம் நடத்தும் மனைவி அவள். 'ரிசர்வ் செய்து விட்டுத் தேவி பாரடைஸில் சினிமா போகலாம்' என்று அவர் அழைத்தால், 'ஆறு மாதங்கள் பொறுத்தால் இதே படம் சாதாரண தியேட்டரில் ஈ அடிக்கும். அப்போ போய் அந்தப் படத்தைப் பார்த்துக்கலாம்' என்பாள் அவள். வீட்டு விவகாரம் எல்லாவற்றிலும் படுசிக்கனம். படுசெட்டு. ஆனால் சங்கரய்யரோ குதிரைப் பந்தய அரக்கனின் பிடியில் சிக்கி, சேட்டுக்காரனிடம் பெரும் வட்டிக்குப் பணம் வாங்கி, அவனிடம் தொலைத்து வந்தார். அதன் விளைவுதான் ரூபாய் ஆயிரத்தைந்நூறுக்கு வட்டி கட்டுகிறார். தயங்கித் தயங்கி, தகவலைச் சொன்னார் சங்கரய்யர். இடி இடிக்கும், எரிமலை நெருப்பைக் கக்கும் என்றெல்லாம் எதிர்பார்த்தார்.

ஆனால் ஜானகியோ, ''நடந்தது நடந்து விட்டது. இனி நடக்க வேண்டியதைக் கவனிக்கணும். உங்க தாய் மாமா பெரிய பணக்காரர் ஆச்சே, அவரிடம் பணம் கேட்டால்

என்ன?'' என்று அமைதியாக யோசனை கூறினாள்.

''அந்தப் பாவி படுகஞ்சன் ஆச்சே!'' என்றார் சங்கரய்யர். தொடர்ந்து, ''உன் மாமாவிடம் கேட்டுப் பாரேன்'' என்றார்.

ஜானகி பெருமூச்சுடன் சொன்னாள்: ''என் மாமா பணம் படைத்தவர்தான். கொடுக்கும் மனம் படைத்தவர்தான். ஆனால் நீங்கள் குதிரைப் பந்தயம் ஆடிப் பணம் இழந்த விஷயத்தை எப்படி என் வாயால் அவரிடம் சொல்வேன்? உங்க 'பிரஸ்டீஜ்' போனால் எனக்கும்தானே அது மானக் குறைவு?''

சங்கரய்யர் வாயைத் திறக்கவில்லை. அவருக்கு ஒரு வழியும் புலப்படவில்லை தற்செயலாக ஜானகியின் கொழுமிய கைகளைப் பார்த்தவர், கைகளில் மின்னும் பொன் வளையல்களை நோக்கினார். ''ஜானு, நான் சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதே. உன் தங்க வளையல்களையும், நெக்லஸையும்...'' மேலே சொல்ல முடியாமல் தயங்கினார் அவர்.

''அட ராமா!'' என்று தலையில் அடித்துக் கொண்டாள் ஜானகி. ''உங்களுக்கு உதவாத இந்த நகை நட்டெல்லாம் எனக்கு எதற்கு? ஆனால், அடுத்தவாரம் க்ஷேத்ராடனம் போன உங்க அப்பா அம்மா இங்கு வரப்போவது மறந்து போச்சா? அவர்கள் கிராமத்துக்குத் திரும்பிப் போகும்வரை என் நகை நட்டுகள் எல்லாம் என்னிடம் இருந்துதான் தீரணும்.''

''ஆமாம், நீசொல்றதும் சரிதான் ஜானு.''

மறு நாள் சங்கரய்யர் ஆபீஸுக்குப் போய் விட்டார். ஏதோ ஒரு தீர்மானமான முடிவுக்கு வந்த ஜானகி, வீட்டைப் பூட்டிக் கொண்டு தன் தாய் மாமா கோபாலய்யரின் வீட்டுக்குப் போனாள்.

குசலப் பேச்சுக்குப் பின், தன் திறமையான நடிப்பைத் தொடங்கினாள் ஜானகி. ''மாமா! ஒரு சிநேகிதனுக்கு நெருக்கடி ஏற்பட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போ அவனுக்கு உதவி செய்வதா, வேண்டாமா?''

''இதென்ன ஜானு கேள்வி? ஆபத்து சமயத்தில் உதவுவதுதான் நட்புக்கு இலக்கணம். பணம் இன்று வரும் நாளை போகும்'' என்றார் கோபாலய்யர். ஜானகியின் கண்களிலிருந்து கண்ணீர் பொல் பொலவென்று கொட்டியது. ''உங்களைப் போல தங்கமான மனசு என் அகத்துக்காரருக்கும். சிநேகிதனுக்கு ஒரு நெருக்கடி ஏற்படவே, அவன் பணம் வாங்கிக்கொள்ள ஷூரிட்டி கையெழுத்துப் போட்டார். இப்போ நண்பன் பணம் கட்டாமல் காலை வாரி விட்டுட்டான். என் அகத்துக்கார்ருக்கு அநியாயமாய் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் கடன் வந்து சேர்ந்தது'' என்ற ஜானகி விம்மினாள்.

''அழாதேம்மா, ஜானு! நான் தரேன் பணம்'' என்ற கோபாலய்யர், இரும்புப் பீரோவைத் திறந்து பதினைந்து நூறு ரூபாய் நோட்டுக்களைக் கொண்டு வந்து கொடுத்தார்.

''மாமா! உங்க மனசு தங்கம். பணத்தை இரண்டே வருஷங்களில் திருப்பிடறேன்.''

கோபாலய்யர் கடகடவென்று சிரித்தார்.

''ஜானு, நீ என் வயிற்றில் பிறந்த மகளாக நினைச்சுத்தான் பணத்தைக் கொடுத்தேன். நீ நயா பைசா திருப்பித் தர வேண்டாம். சந்தோஷமாகப் போய் வாம்மா.''



''நான் உங்களை ஒன்று கேட்பேன்; 'இல்லை' என்று சொல்ல மாட்டீர்களே...!''

''உம்...கேளு!''

''என் மேலே உங்களுக்கு உண்மையிலேயே அன்பு இருக்கிறதா?''

''நோ!''

வழக்கம் போலச் சோர்ந்த முகத்துடன் ஆபீஸிலிருந்து வந்த சங்கரய்யரைக் குதூகலத்துடன் வரவேற்றாள் ஜானு. ''ஏன்னா, வாயைத் திறங்கோ'' என்றாள். சங்கரய்யர் வாயைத் திறந்ததும் ஒரு துண்டு மைசூர்ப் பாகை அவரது வாயில் போட்டாள்.

''மைசூர்ப்பாகு செய்தாயா? என்ன விசேஷம் இன்று?''

''விசேஷம் நிறைய இருக்கு'' என்றவள், கணவனின் பெயருக்குத் துளி மாசும் ஏற்படாமல் தான் பணம் பெற்ற விவரத்தைச் சொன்னாள். சங்கரய்யர் தம்மை மறந்தார். தம் வயதை மறந்தார். ''அடி ஜானு!'' என்று சந்தோஷத்தோடு கூவியணைத்தார்.

ஜானகி மாமி சொன்ன விஷயங்களைச் சுவாரசியத்துடன் கேட்ட சிவப்பிரகாசம், நாற்காலியை விட்டு எழுந்தான்.

''என்ன அதற்குள் எழுந்திட்டே? நீ சுமதியை மணக்க வேண்டுமா, மரகதத்தை மணக்க வேண்டுமா என்று நான் சொல்லவே இல்லையே?'' என்று கேட்டாள் ஜானகி.

''மாமி! மாமா கொண்டு வந்த கடனுக்கு உங்களைத் தவிர வேறு யாராவது மனைவியாயிருந்திருந்தால் கதை வேறாகியிருக்கும். கணவனின் பிரச்னையும் தீராமல், நீலிக் கண்ணீர் வடித்துக் குடும்பமே சீர்கெட்டுப் போயிருக்கும். ஆனால் நீங்கள்? ஆபத்துக் காலத்தில் ஓர் அமைச்சனைப் போல் புத்தி சாதுரியத்துடன் நடந்து கொண்டு கணவனின் கடனை அடைத்தீர்கள். அதுவும் கணவ்னின் பெயருக்கு ஒரு துளி மாசும் வராமல். உங்களுடைய அடக்கத்தையும், சிக்கனத்தையும் சாதுரியத்தையும் பார்க்கும்போது எனக்கு ஏற்றவள் மரகதம்தான் என்று படுகிறது எனக்கு'' என்றான் சிவப்பிரகாசம்.

''மரகதத்தையே கட்டிக்கோ. உன் வாழ்க்கை சுபிட்சமாக இருக்கும்'' என்று அவனை ஆசீர்வதித்து அனுப்பினாள் ஜானகி.

'எவரெஸ்ட்'டுக்கு ஒப்பான எழுத்தாற்றல்

இமயமலை சிகரத்தை ஒரு தரம் ஏறினாலே போதும். ஏறுபவருடைய வாழ்நாள் முழுவதற்கும் பெருமை தரக் கூடியது. அந்த ஒரு செயலாலேயே அவர் கீர்த்தி அடைந்துவிடுகிறார். ராஜாஜியின் சாதனைகளோ ஒவ்வொன்றும் இமயத்தை வெற்றி கண்டது போன்றவை.

இந்த இமாலயச் சாதனைகளுள் எவரெஸ்ட் எனக் கருதத் தக்கது அவரது எழுத்தாற்றல்.

'சக்கரவர்த்தித் திருமக'னுக்கு சாகித்ய அகாதமியின் பரிசு வழங்கப்பட்ட போது இதிஹாஸத்தின் சாதாரண சுருக்கமாய் எழுதப்பட்ட புஸ்தகத்துக்கா பரிசு என்று முதலில் எனக்குத் தோன்றியது. ஆனால் அதையும் 'வியாஸர் விருந்தை'யும் திரும்பவும் முழு புஸ்தகமாகப் படித்த போது அவற்றின் இலக்கிய உயர்வு புலப்பட்டது. படிக்கப் படிக்க அவற்றின் இலக்கிய ருசி அதிகமாயிற்று. சாதாரணமாய் எல்லா மக்களும் புரிந்து கொண்டு, படித்துப் பயனடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் எழுதப்பட்ட நூல்களே அவை. ஆயினும் அவருடைய இயல்பான எழுத்துத் திறன் அவற்றை ஓர் இலக்கிய சாதனையாகவே படைத்தது. அவருடைய புத்தி நிட்சண்யமே, பெரும் சிக்கலான பிரச்னைகளை ஆராய்ந்து சுலபமாய்த் தீர்த்து வைக்கும் ஆற்றலே எளிமையான அழகான எழுத்தாகப் பரிணமித்தது என்றே தோன்றுகிறது.

ராஜாஜியின் பேச்சுக்கும் எழுத்துக்கும் நடையில் வித்தியாசம் கிடையாது. அது போல் எழுத்தாளர்களுக்கு இருப்பது அபூர்வம். பேசுவதற்கும் எழுதுவதற்கும் வித்தியாசம் கூடாது என்பதை அவரே ஓர் எழுத்தாளர்கள் கூட்டத்தில் விளக்கியிருக்கிறார். உதாரணத்துக்காக 'மிகையாகாது' என்று எழுதுவதைக் குறிப்பிட்டு அச்சொல் நம்முடைய பேச்சுப் பழக்கத்தில் இல்லை. அதைக் கையாள்வது சிலாக்கியமில்லை என்று குறிப்பிட்டார். கடைசியில் வந்தனோபசாரம் கூறியவர் ராஜாஜியின் குணங்கள் பலவற்றைக் கூறி, ''அப்படிக் கூறினால் அது —'' என்று திகைத்து நின்று விட்டார். ''மிகையாகாதாகும்'' என்று கூட்டத்தில் ஒருவர் முடிக்கவே பெருத்த சிரிப்பொலி எழுந்தது.

ராஜாஜியின் பல வாக்கியங்கள் சூத்திரம் போன்றவை. ஆழ்ந்து படிக்கப் படிக்கப் பல விஷயங்கள் புலனாகும். ஆனால் சூத்திரங்கள் போலக் கடினமாய் இல்லை. தெளிவாய்ப் புரிகிற தன்மையாலும், அந்த வாக்கியங்களுக்கு முன்னும் பின்னும் உள்ள வாசகங்களாலேயே கருத்து தெளிவுபடுவதாலும் ஒரே சமயத்தில் சூத்திரமாகவும் அதனுடைய பாஷ்யமாகவும் (விளக்க உரை) அமைந்துள்ள வாசகங்கள் ஓர் அற்புதமே.

கார்டினல் நியூமென் என்பவரின் 'உரை நடை மிகவும் எளியதாயிருப்பினும், சுலபமாய்ப் படித்துத் தேர்ந்துவிட முடியாது. கலாசாலையில் பாட புத்தகமாக வைக்கப் படும்போது நியூமென்னை மிக்க பிரயாசையுடன் சிரத்தையாகப் படித்து மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதே போல் ராஜாஜியின் உரை நடை மிக மிக எளிதாயிருப்பதால், சுலபமாக அல்லது வேகமாக — மேலெழுந்தவாரியாக — படித்துத் தெரிந்து கொண்டுவிட்டதாக அநேகர் நினைக்கக் கூடும். அர்த்தமற்ற நீண்ட மேடைப் பிரசங்கங்களையும், வார்த்தைக் குவியல்களையும் கேட்டும், படித்தும், பேசியும் பழக்கப்பட்ட நம்மில் அநேகருக்கு ராஜாஜியின் எழுத்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. அவற்றை ஊன்றிப் படித்து மாடு அசை போடுவது போல, மனத்தில் கொணர்ந்து சிந்தித்தால், மிகவும் ரஸிக்கும்படியாகக் கருத்துக்கள் இருப்பதுடன் அற்புதமாகப் பல விஷயங்கள் தெளிவுபடும்.

முன்னாள் ஆஸ்திரேலிய ஹை கமிஷனர் ஸ்ரீ கிராக்கர் எழுதின பிரகாரம், ராஜாஜியைப் பற்றி எழுதுவதைவிட ராஜாஜி எழுதியவைகளைப் படிப்பதே ராஜாஜியின் பெருமையை நமக்கு உணர்த்தும். அதுவே அவருக்குப் பாராட்டு.

சென்னை — 28
3—1—73 எஸ். வி. கிருஷ்ணஸ்வாமி


***

எங்களது 'மண்டே சாரிடி கிளப்' மூன்று வருடங்களுக்கு முன்பு எளியவர்களுக்கும், கஷ்டப்படுகிறவர்களுக்கும் உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. மாதம் ஓர் உதவி என்ற நோக்குடன், மூன்று வருடங்களாகப் பல நற்காரியங்கள் இயன்ற அளவில் எளிய முறையில் செய்து வருகிறோம்.

மூன்றாம் ஆண்டு முடியும் இந்தத் தருணத்தில் புதிதாக ஓர் உதவி ஏற்பாடு செய்ய அங்கத்தினர்கள் விரும்புகின்றனர். கடவுள் கிருபையால் செல்வந்தர்களாய் இருக்கும் பலர் மகளுக்கோ அல்லது மகனுக்கோ அதி விமரிசையாகத் திருமணம் செய்கிறார்கள். அன்று தண்ணீராகச் செலவாகும் பணத்தில் ஒரு பகுதியைச் சுமார் இருநூறு ஏழைக் குழந்தைகளுக்கு விருந்து அளிக்கப் பயன்படுத்தலாம். இந்த உயரிய நோக்கு உள்ளவர்கள் எங்கள் கிளப்புடன் தொடர்பு கொண்டால் ஏழைக் குழந்தைகளுக்கு உணவு அளிக்க ஏற்பாடு செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொள்வோம். இந்த உணவைத் திருமணம் நடக்கும் இடத்திலேயே செய்வதென்றால் சிரமம் இருக்கும் என்று தோன்றியதால் இந்த விதமாகத் தீர்மானித்திருக்கிறோம். இன்னும் உயர்ந்த விதத்தில் உதவி செய்ய விரும்புவோர், தங்கள் பெண்ணின் பெயரிலோ அல்லது பிள்ளையின் பெயரிலோ ஏதாவது ஓர் அநாதை விடுதியில் ஒரு குழந்தையின் பராமரிப்பை ஓராண்டுக்கோ அல்லது அதற்கு அதிகமாகவோ ஏற்றுக் கொள்ளலாம். இதற்கும் யோசனை கூறி வேண்டிய உதவிகளைச் செய்ய எங்கள் சங்கம் காத்திருக்கிறது.

9, பிருத்வி அவின்யூ, 60 அங்கத்தினர்கள்,
சென்னை — 18 மண்டே சாரிடி கிளப்

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam



உங்கள்
உலைக்குத் தேவைப்படுவது
பிரத்தியேக ரிஃப்ரேக்டரி சிமெண்டு
அக்கோசெட்-50

ஏசிசி யின் அதிவெப்பம் தாங்கும் ஃபயர்-சிமெண்டு

உறுதியான ஃபயர்பிரிக் வரிசைகள் மற்றும் இணைப்புகளுக்கு ஏசிசி அக்கோசெட்-50 அதிவெப்ப ரிஃப்ரேக்டரி சிமெண்டு தயாரிக்கிறது. அதிக இணைப்புச்சக்தி தர அதிமென்மையாக பொடியாக்கப்பட்ட பிளாஸ்டிக் களிமண், அலுமினா ரிஃப்ரேக்டரி கற்கள், பிரத்தியேக இரசாயனங்கள் கலவையிலும் அக்கோசெட்-50 தயாரிக்கப்படுகிறது.

இணைப்புவேலை, பழுதுபார்த்தல் மற்றும் ஒட்டு வேலைகள், ஃபயர்பிரிக்குகளை இணைப்பு மற்றும் நிர்மாண வேலைகளுக்கு உபயோகித்தல், உலைகளின் சுவர்கள் மற்றும் தரைகளுக்கு பாது காப்பு பூச்சு, ஒற்றைக்கல் இணைப்பு மற்றும் இறுக்கப்பட்ட வரிசைகள் இவற்றிற்கு அக்கோசெட்-50 உகந்தது.

தயாராக கிடைக்கும் இடம்: தி சிமெண்ட் மார்க்கெட்டிங் டிவிஷன் ஆஃப் தி அசோசியேடெட் சிமெண்ட் கம்பெனீஸ் லிட். அல்லது அவர்களுடைய விநியோகஸ்தர்கள்.

தி அசோசியேடெட் சிமெண்ட் கம்பெனீஸ் லிட்.

ஏசிசி அக்கோசெட் சூபர் அதிவெப்ப இறுகும் பொருள்களுக்கு தயாரிக்கிறது.

தேவைப்பட்டால் தொழில் நுணுக்க விவரங்கள் இலவசமாக அனுப்பப்படும்

ACC.1190.TAM

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)

நீடித்திருப்பது ICI டுலக்ஸ்

ஒயிலில்



குறைந்த அளவு டுலக்ஸ் பெயின்ட் கொண்டு
பரந்த இடப்பரப்பிற்குப் பிழையின்றி பூசலாம்.
அழுக்குகளை நீர்கொண்டு நன்றாக நீக்கலாம்.
ஒரு பொழுதும் மங்காது.



உங்கள் கன்ட்ராக்டரிடம் கேளுங்கள்: இவர் டுலக்ஸ் எப்படி ஆச்சரியகரமாக உங்கள் வீட்டிற்கு அதிக சோபை அளிக்கிறது என்பதை விளக்கிக் காட்டுவார்.

டுலக்ஸை இந்தியாவில் தயாரித்து விற்பவர்கள்:
தி ஆல்கலி அன்டு கெமிகல் கார்ப்பரேஷன் ஆப்
இந்தியா லிமிடெட்

டுலக்ஸ்—வீட்டின் நெருங்கிய நண்பன்

டுலக்ஸ் இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், லண்டனின் வியாபாரச் சின்னம். [illegible]